உ

ஓம் தத்ஸத் |

ஈச, கேந, கட, பிரச்ந, முண்ட, (கௌடபாதகாரிகையுடன்) மாண்டூக்ய, தைத்திரீய, ஐதரேய, சாந்தோக்ய, பிரஹதாரண்யக, சுவேதாசுவதர, நிருஸிம்ஹதாபினீய உபநிடதங்களடங்கிய

# துவாதசோபநிஷத்

## பன்னிரண்டுபநிடதங்கள்.

இஃது
சாஸ்திரீய அத்வைத சித்தாந்த பரம்பரானுஸாரமாக
ஸ்ரீசங்கரபாஷ்யத்திற்கிணங்க

நாகை
ஸ்ரீ. ஸ்ரீ. சுப்பிரமணிய ஐயரவர்களால்

தமது குருமுகமாக
எளிய தமிழ்நடையில் மொழிபெயர்க்கப்பட்டு

அவரது புத்திரராகிய
ஸ்ரீ. ஸ்ரீ. ராஜாராமையரால்
பிரசுரிக்கப்பட்டு

சிதம்பரம்
விநாயகசுந்தர விலாசம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

Copy-right Registered.

1–1–1911.

25. அப்பிராமணியம்
செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
ஆகஸ்ட் மாதம் 1983 வருடம்
செப்பனிட்டு முடித்த
டிசம்பர் மாதம் 1983 வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்

## முக்கிய குறிப்பு.

இதில் உபநிஷத்தின் மூலத்தினுடைய அர்த்தமும், அவ்வுபநிடதத்தின் பொருளை நன்கு விளக்கும் பொருட்டு ஸ்ரீசங்கரபாஷ்யார்த்தமும், உபநிடதத்தின் தாத்பரியங்களும் வியக்தமாக வெடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன.

மேற்படி தாத்பரியங்களும் ஸ்ரீ சங்கரபாஷ்யத்தின் பொருளும் பிராகெட்டின் (                ) மத்தியிலுள்ளன.

உ

ஸ்ரீகணபதிகுருப்யோநம:

# அவதாரிகை.

---

இப்பிரபஞ்சத்தின்கண்ணுள்ள மானிட ஜன்மம்பெற்ற யாவரும் ஸம்ஸார துக்கத்தினின்றும் நிவிர்த்தியை யடைய விச்சிப்பதற்கும் அச் சம்ஸாரத்திற்கேதுவான அஞ்ஞானத்தை நிவிர்த்திசெய்யச் சாதனமான பிர்மாத்மைகத்வ வித்தையை யடையும்பொருட்டும், நான்கு வேதங்களிலுள்ள ஞானகாண்டமாகிய உபநிடதங்கள் பிரவிர்த்தித்தன.

இவ்வுபநிடதங்கள் 108 இருப்பினும் அவைகளுள் முக்கியமாக 12 உபநிடதங்களே மேற்கொல்லப்பட்ட வித்தையை யடைய முக்கியசாதனமாகவிருக்கின்றதென்றும், நம்முன்னோர்களவைகளையே இடைவிடாது ஆராய்ந்தறிந்து விசாரித்து வந்தார்களென்றும் செவ்வனே புலப்படுகின்றது அன்றியும், அத்வைதசித்தாந்தத்தைத் தெளிவுற நிலைநாட்டிய பகவத் பூஜ்ய பாத ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகளவர்களும் இப்பன்னிரண்டு உபநிடதங்கட்குத்தான் பாஷ்யம் செய்திருப்பதாக கிரந்தங்கள் வாயிலாக அறியப்படுகிறது.

இக்காலத்தில் நம்மவர்கட்கு ஸம்ஸ்கிருத பாஷாப்பிரவிர்த்தி தினேதினே க்ஷீணமடைவதால் அப்பாஷையில் இவ்வுபநிடதங்களை யறிவது கஷ்டசாத்தியம். அதுவுமன்றி, பாஷாக்ஞானத்தில் எவ்வளவு வல்லுனராக விருந்தபோதிலும், பரம்பரா சங்கேதங்களும் தாத்பரியங்களும் ப்ரக்ரியைகளும் தெரிந்தாலன்றி உபநிடத தத்துவத்தை யறிவது முற்றுமசாத்தியம். வேதாந்த தத்துவ மொழிகளைத் தமிழ்முதலான தேசபாஷைகளைக்கொண்டே உபதேசிக்க வேண்டி நேரிடினும், நம்முன்னோர்களும், தற்காலம் அத்வைத சித்திபெற்றநமது ஆசாரியர்களும், இத்தகைய கஷ்டமிருப்பதை யறிந்தும், தத்துவத்தை உள்ளவாறு தெரிந்து கொள்ளாவிடில், புத்திவிபர்யயங்களும் அநர்த்தங்களும் நேரிடுமென்ற அபிப்பிராயத்தாலும் இத் தத்துவஞானத்தை குருமுகமாக எவ்வாறேனு மறியவேண்டுமேயன்றி, தமிழ் முதலானபாஷைகளில் மொழிபெயர்க்

கப்பட்டதை சிரவணஞ் செய்யக்கூடாதென்று தாத்பரியங் கொண்டிருப்பதாக நன்குவிளங்குகின்றது. மேலும் உபநிடதங்களை பிராமணர்கள்மட்டிலும் குருமுகமாக சிரவணஞ் செய்யலாமென்றும் மற்றவர்கள் இதிஹாஸபுராண மூலமாகஉபநிடதார்த்தங்களை அறியவேண்டுமென்றும் தாத்பரியங்கொண்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. ஆனால், இக்காலத்தி லவ்விதங்கற்றறிவது, இவ்விஷயத்திலாஸக்தியுள்ள எல்லா முமுக்ஷுக்களுக்குங் கடினமாகவிருக்குமென்றுகருதி எவ்வாறாகவாவது தத்வத்தையறிந்து கிருதார்த்தமடையட்டுமென்றஎண்ணத்துடன் இவ்வுபநிடதங்களைத் தமிழில் மொழிபெயர்த்து விளங்கச்செய்ய சிலமஹான்கள் பிரவிர்த்தித்ததாகவும் நன்கு விளங்குகின்றது.

இத்தமிழ் மொழிபெயர்ப்பானது என் பிதா நாகப்பட்டணத்தில் வைக்கீலாயிருந்த N. P. சுப்பிரமணிய ஐயரவர்களால் தான் சாஸ்திரியமாய் வேதாந்த சிரவணம் செய்து கொண்டிருக்கையில் எழுதப்பட்டது. திருசிரபுரம் பிர்மஸ்ரீ மஹாதேவ சாஸ்திரிகளென்ற ஒருபெரிய மகானைக்குருவாக அடைந்து 1881வருட முதல் 1884வருடம் முடிவு பரியந்தம் இவ்வுபநிடதங்களை சிரவணம் செய்து முடித்து இத்தர்ஜுமாவைதன் சொந்த உபயோகத்திற்காக எழுதிவைத்தனர். அக்காலத்திலேயே இதையறிந்த என்பிதாவிற்கு அத்தியந்த ஸ்நிக்தராயிருந்த பிர்மவித்தியாபத்திராதிபரான பிர்மஸ்ரீ சீனிவாஸசாஸ்திரியாரவர்கள் தாம் உபநிடதங்களைத் தமிழில் பிரசுரிக்க வெண்ணி இப்பிரதியை என்னிடமிருந்துபெற்றுக் கொண்டார். அச்சிடத்துவக்குமுன் அவர்காலம் சென்றுவிட்டமையால் அம்மகான் முகமாக இது வெளிப்பட தடைபட்டு நின்றது. அதன் பிறகு அத்வைத சித்தாந்தப் பிரமுகர்களான சிலமகான்கள் இதைப் பார்க்க நேரிட்டசமயங்களில் இது அத்வைத கொள்கைக்கு முற்றும் ஒத்திருப்பதாகவும் முமுக்ஷுக்களுக்கு அத்தியந்தம் பரமோபகாரமென்றும், இதுகாறும் இவ்வித மொழிபெயர்ப்பு தெளிவாகவும் எளிய நடையிலும் ஒருவராலும் எழுதப்படவில்லையென்றும் இதனை அச்சிட்டு வெளிப்படுத்துவது இன்றியமையாததோர் பரமோபகாரமென்றும் வற்புறுத்திய தன்பேரில்இதைவெளிப்படுத்தத் துணிந்தேன்.

இப்பன்னிரண்டு உபநிஷதங்களையும் முறையே வழக்கப்பிரகாரம் அச்சிடாது அவ்வவ்வேதத்திற்குரிய உபநிஷதங்களை ஒன்று சேர்த்து இங்கு வெளியிடப்பட்டிருக்கிறது.

(i) ருக்குவேதம்—ஐதரேயோபநிஷத்.

(ii) யஜுர்வேதம்—

(a) கிருஷ்ணயஜுர்வேதம்—தைத்திரீய, கட, சுவேதாசுவதர உபநிஷதங்கள்.

(b) சுக்லயஜுர்வேதம்—ஈச, பிரகதாரணியக உபநிஷதங்கள்.

(iii) சாமவேதம்—கேந, சாந்தோக்கிய உபநிஷதங்கள்.

(iv) அதர்வணவேதம்—பிரச்ன, முண்டக, (கௌடபாதகாரிகையுடன்) மாண்டுக்கிய, நிருசிம்ஹதாபினீ உபநிஷதங்கள்.

இவ்விதமாகப்பன்னிரண்டு உபநிஷதங்களும் அச்சிடப்பட்டிருக்கின்றன.

N. S. ராஜாராமய்யர்.

உ

𑌓𑌂 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍 ।

ருக்வேதத்தைச் சார்ந்த

# ஐதரேயோபநிஷத்.

**சாந்தி.**

𑌵𑌾𑌙𑍍𑌮𑍇 𑌮𑌨𑌸𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 𑌮𑌨𑍋 𑌮𑍇 𑌵𑌾𑌚𑌿
𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑌾𑌵𑌿𑌰𑌾𑌵𑍀𑌰𑍍𑌮 𑌏𑌧𑌿 ।
𑌵𑍇𑌦𑌸𑍍𑌯 𑌮 𑌆𑌣𑍀𑌸𑍍𑌥𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 𑌮𑍇 𑌮𑌾 𑌪𑍍𑌰𑌹𑌾𑌸𑍀𑌃
𑌅𑌨𑍇𑌨𑌾𑌧𑍀𑌤𑍇𑌨𑌾𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌸𑌂𑌦𑌧𑌾𑌮𑍍𑌯
𑌋𑌤𑌂 𑌵𑌦𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 । 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌵𑌦𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 । 𑌤𑌨𑍍𑌮𑌾𑌮𑌵𑌤𑍁 ।
𑌤𑌦𑍍𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑌮𑌵𑌤𑍁 𑌅𑌵𑌤𑍁 𑌮𑌾𑌮𑌵𑌤𑍁 𑌅𑌵𑌤𑍁 𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑌮𑌵𑌤𑍁 𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑌮𑍍 ॥
𑌓𑌂 𑌶𑌾𑌂𑌤𑌿𑌃 𑌶𑌾𑌂𑌤𑌿𑌃 𑌶𑌾𑌂𑌤𑌿𑌃 ॥

---

என்னுடைய (இவ்வுபநிடதத்தைப்படிக்கும் விஷயத்தில் பிரவிர்த்தித்த) வாக் (எக்காலத்திலும்) மனதில் ஸ்திரமாகவிருக்கட்டும்; என் மனதும் வாக்கில் ஸ்திதியை அடைந்திருக்கின்றது (வாக் மனங்களுக்கு ஒன்றற்கொன்று உதவிபுரியவேண்டுமென்று பிரார்த்திக்கப்படுகிறது). ஹே! சுவப்பிரகாச ஞானரூபமான பரமாத்மாவே! (அக்ஞானத்தைப்போக்கடித்து) பிரகாசத்தை அடையும்படி செய்குக. ஹே! வாக் மனங்களே! எனக்குக் கீழ்சொல்லிய பிர்மஞானத்தை வெளியிடும் கிரந்தத்தைக் கொடுக்க (என்னிடம் வரும்படி செய்ய) சமர்த்தர்களாக ஆகுங்கள். என்னால் கேட்கப்பட்டகிரந்தம் அதனர்த்தம் இவைகளை நான் மறவாமலிருக்கட்டும்; அத்தியயனம் செய்யப்பட்டு (மறவாமலுமிருக்கிற) கிரந்தத்துடன் பகலிரவுகளைச் சேர்த்து வைக்கின்றேன். (அல்லும் பகலும் சோம்பலன்றி கிரந்தத்தைப் படிக்கிறேன்). (படிக்கப்பட்ட கிரந்தத்தில்) யதார்த்தமானவஸ்துவை (பிர்மத்தை) சொல்லப்போகின்றேன். நீரே ஸத்தியம் (மனதால் வாஸ்தவ பதார்த்தத்தை விசாரித்து வாக்கால் உண்மையைச் சொல்லுவேன்). மேற்கூறிய பிர்மமானது என்னையும் எனக்குபதேசிக்கின்ற குருவையும் ரக்ஷிக்கட்டும்.

ஞானமுண்டாவதற்கு இடையூறு நேரிடின் இச்சாந்தியைப்படித்தால் அவைகள் நசித்து விடும்.

## ஸ்ரீசங்கரபாஷ்யப்பிரதீக சங்கிரஹம்.

இந்த ஐதரேயோபநிஷத் ருக்வேதத்தின் ஐதரேய பிராஹ்மணத்தினுடைய இரண்டாவது ஆரண்யகத்திலுள்ளது. அவைகளில் கேவலகர்மம் மட்டும் சொல்லப்பட்டு முடிந்தது.

"ஞானத்துடன் கூடியகர்மத்துக்குப்பரமான்கதியாதெனில் அதுவும் பிராணவத்தை யறிவதுடன் முடிந்தது. பிராணனென்ற ஒரே தேவன் இருக்கின்றான்; அத்தேவனுக்கு வாக் முதலிய இந்திரியங்களாகின்ற தேவர்கள் விபூதிகளாம் (விஸ்தாரங்களாம்) ஒரு புருஷன் இந்த பிராணாத்மாவாக ஆகின்றான்; இவ்விதம் தேவதையாகின்றதே புருஷார்த்தம். இது தான் மோக்ஷம். ஞானத்துடன் கூடிய கர்மத்தால் இதைவிட அதிகமாக ஒன்றும் கிடைக்காது" என்று சிலர் கூறும் கக்ஷியை மறுக்கக் கேவலமான ஆத்மஞானமே மோக்ஷஸாதனமென்று சாதிக்கும் பொருட்டு இந்த உபநிஷத் பிரவிருத்திக்கவெழுந்தது. (கர்மசாதனமின்றி கேவலஞானமட்டில் போதுமாவென்ற வியவகாரத்தை எடுத்து முடிவில் கேவலஞானமே போதியதென்று சித்தாந்தப்படுத்தி, அதற்காகவே இந்த உபநிஷத் பிரவிர்த்தித்ததென பிரதீகத்தில் கூறப்படுகிறது).

# ஐதரேயோபநிஷத்.

## முதலாவது அத்தியாயம்.

### முதல் கண்டம்.

1. இந்த ஜகத் (நாமரூபங்களாக விகாரப்பட்டுக் காணப்படுகின்ற இந்த உலகம்), சிருஷ்டிக்குமுன் ஒரே ஆத்மாவாக இருந்தது (ஸர்வம், ஸர்வஜ்ஞம், ஸர்வஶக்திம், அஶநாயாதி ஸர்வஸம்ஸாரதர்ம வர்ஜிதம், நித்யஶுத்தபுத்தமுக்தஸ்வபாவம், அஜம், அஜரம், அமரம் அம்ருதம், அபயம், அத்வயம் இப்படிப்பட்ட ஒரே ஆத்மாவாக); அவரையன்றி வேறொன்றுமில்லை; அந்த ஆத்மா லோகங்களைச் சிருஷ்டிப்போமென்று ஆலோசித்தனர்.

2. அங்ஙனம் ஆலோசித்து இவ்வுலகங்களைச் சிருஷ்டித்தனர்; அவைகளாவன, அம்ப: (சுவர்க்கலோகமும், அதன்மேலுள்ள மஹ, ஜந, தப, ஸத்ய முதலிய இந்த உலகங்களும்); மரீசீ: (சூரிய கிரணங்களால் வியாபிக்கப்பட்ட அந்தரிக்ஷ லோகம்); மரம் (ஜீவன்கள் நாசமுறும் பூமி, பூலோகம்); ஆப: (ஜலசம்பந்தமான பூமிக்குக் கீழ்ப்பட்ட உலகங்கள்) இந்தஉலகங்களை, ஜலத்தைப் பிரதானமாகவுடைய பஞ்சபூதங்களைக்கொண்டு சிருஷ்டித்தனர்.

3. இப்பொழுது என்னால் சிருஷ்டிக்கப்பட்ட உலகங்கள் பரிபாலிக்கப்படாவிடின்நாசமுறும். ஆதலால், லோகபாலர்களைச்சிருஷ்டிப்போமென்று மீண்டும் ஆலோசித்தார். அங்ஙனம் யோஜித்து, மேற்கூறிப்போந்த பஞ்சபூதங்களி னின்றும் ஓர் புருஷாகாரமாகத் திரட்டி அதைப்பிண்டமாக வாக்கினர்.

4. அப்பிண்டத்தைக் குறித்து சங்கற்பம் செய்தார். (இது இவ்விதமாக வாகட்டுமென்று கருதினர்.) அதினின்றும் முகமுண்டாயிற்று பக்ஷியின் அண்டம்போல். அம்முகத்தி னின்றும் வாக் இந்திரியம் உண்டாயிற்று. அதினின்றும் அக்கினிதேவதை உத்பவித்தது. பிறகு நாசிகள்—க்ராணேந்திரியம் உண்டாயின; அதினின்றும் எங்குமுள்ள வாயுதேவதை உண்டாயிற்று. பிறகு கண்

கள்—அவைகளினின்றும் சக்ஷுரிந்திரியம்; அதினின்றும் ஆதித்திய தேவதை. பிறகு காதுகள்—அவைகளினின்றும் சுரோத்திரேந்திரியம்; அதினின்றும் திக்தேவதை. பிறகு தோல்—அதினின்றும் லோமங்களாகிற ஸ்பர்சனேந்திரியம்; அதினின்றும் ஓஷதி முதலியன அதிஷ்டான தேவதையாகின்ற வாயுதேவதை. பிறகு அந்தக்கரணத்திற்கு அதிஷ்டானமாயிருக்கின்ற ஹிருதயகமலம்—அதினின்றும் மனஇந்திரியம்; அதினின்றும் சந்திரதேவதை; பிறகு நாபி (கொப்புள்)—அதினின்றும் பாயுவிந்திரியம்; அதினின்றும் மிருத்தியுதேவதை. பிறகு சிச்னம்—அதினின்றும் ரேதஸாகின்ற உபஸ்தேந்திரியம்; அதினின்றும் அப்தேவதை (வருணன்) இவ்வணமாக லோகபாலர்களைச் சிருஷ்டித்தனர்.

முதல்கண்டம் முற்றிற்று.

# ஐதரேயோபநிஷத்.

## முதலாவது அத்தியாயம்.

### இரண்டாவது கண்டம்.

1. இங்ஙனம் சிருஷ்டிக்கப்பட்ட (அக்னி முதலிய இந்திரிய) தேவதைகள் மகத்தான இந்த (ஸம்சார) சாகரத்தில் விழுந்தார்கள்; (சமுத்திர லக்ஷணம்—அவித்யா காம கர்ம மிவைகளாலுண்டான துக்கமாகின்ற ஜலமுள்ளது; ரோகம், ஜரை, மரணம் முதலிய பெரிய முதலைகளால் சூழப்பட்டது; அநாதி; முடிவற்றது; கரையற்றது; பிடிப்பில்லாதது; விஷயேந்திரியங்களாலுண்டாகும் சுக லேசத்தால் க்ஷணகாலம் ஆறுதலுள்ளது; ஐந்து இந்திரியங்கள், அர்த்தம், ஆசை இவைகளாகிற காற்றினாலசைக்கப்பட்டு அவைகளினின்றுமுண்டான அநேக அநர்த்தங்களாகின்ற அலைகளையுடையது; மகாரௌரவாதி பற்பல நரகங்களில் வீழ்ந்து உழல்கின்றவர்களுடைய வியசனத்தாலுண்டான ரோதனங்களாகிற பெருங் கூச்சலையுடைத்தானது; சத்தியம், நேர்வழி, தானம், தயை, அஹிம்சை, தம, சம, திருதி முதலான ஆத்மகுணங்களாகின்ற கட்டமுதினால் நிறைந்த ஞானமாகின்ற ஓடத்தைக்கொண்டே கடக்கத் தக்கது. ஸத்ஸங்க, சர்வத்தியாகமாகின்ற அக்கரையை யடையும் மார்க்கமுள்ளது; மோக்ஷமாகின்ற அக்கரையுள்ளது).

மேற்கூறிய பிரகாரம் முதலில் சிருஷ்டிக்கப்பட்ட புருஷ பிண்டத்தை பசி, தாகம் இவைகளுடன் சேர்த்து வைத்தனர். இதனால் மேற்படி பிண்டத்தினின்றும் வெளிப்பட்ட தேவதைகளுக்கும் பசி, தாகம் உண்டாயிற்று. அப்பொழுது நாங்கள் எவ்விடமிருந்து அன்னம் சாப்பிடுவோமோ அவ்விடத்தை எங்களுக்கு ஏற்படுத்த வேண்டுமென்று அத் தேவதைகள் பிரம்மத்தை நோக்கி வினவினார்கள்.

2. அதற்கு ஈசுவரன் பசுவின் உருவைப்போல் ஒருபிண்டத்தைச் சிருஷ்டித்து இதிலிருங்களென்று காண்பித்தனர். தேவ

தைகள் இஃது எங்களுக்குப் போதியதல்லவென்று சொன்னார்கள். பிறகு ஒரு குதிரையைச் சிருஷ்டித்து அதனைக் காண்பித்தனர். அதுவும் போதியதல்லவென்றார்கள்.

3. அதன் பிறகு ஒரு புருடனைச்சூட்டினார்; இஃது போதுமென்று ஒப்பினார்கள்; . ஆனால் அதனுள் பிரவேசியுங்களென்று சொன்னார்.

4. அக்னி—வாக்ரூபமாய் முகத்திலும், வாயு—க்ராணமாக மூக்கிலும், ஆதித்தியன்—சக்ஷுரிந்திரியமாக கண்களிலும், திக்குகள்—ச்ரோத்ரேந்திரியமாகக் காதுகளிலும், ஔஷதி வனஸ்பதிகள்—ஸ்பர்சனேந்திரியமாகத் தோலிலும், சந்திரன்—மனஸாக இருதயத்திலும், மிருத்யு—பாயுவிந்திரியமாக நாபியிலும், ஜலம்—உபஸ்தேந்திரியமாக உபஸ்தத்திலும் பிரவேசித்தார்கள்.

5. பசி, தாகம் இவ்விரண்டும் எங்களுக்கு இருப்பிடம் ஏற்படுத்தவேண்டுமென்று ஈசுவரனைக்கேட்டன; அதற்கவர் இந்த தேவதைகளினிடம் இருங்களென்றார்; அவர்கட்குக் கிடைக்கும் ஆகாரத்தில் உங்களுக்கும் பாகமுண்டென்றார்; ஆதலால் எத்தேவதைக்கு ஹவிஸ் கொடுக்கப்படினும் அதில் பசி, தாகம் இவைகளுக்கும் பாகமுண்டு (அதாவது பசி, தாகமிருப்பதால் இந்திரிய தேவதைகளும் அன்னத்தைக்கிரகிக்கின்றார்கள்).

(ஜீவனுக்கே போக்திருத்துவம்; இந்திரியதேவதைகள், பசி, தாகம் இவர்கட்கு போக்திருத்துவமில்லையென்று சொல்லப்பட்டிருந்த போதிலும், அது தோஷமாகாது. உண்மையாகவே ப்ரம்ம ஸ்வரூபமாகிற ஜீவனுக்கு போக்திருத்துவமில்லாவிடினும், இந்திரிய தேவதைகள், பசி, தாகம் இவர்களாகின்ற உபாதியினால் ஜீவனுக்கு போக்திருத்துவம் சொல்லப்பட்டது.)

இரண்டாம் கண்டம் முற்றிற்று.

உ

# ஐதரேயோபநிஷத்.

## முதலாவது அத்தியாயம்.

### மூன்றாவது கண்டம்.

1. இவ்விதம் நம்மால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்ற உலகங்கங்களுக்கும் லோகபாலர்களுக்கும், பசி, தாகத்தை ஏற்படுத்தியிருப்பதால் அவர்கட்கு அன்னத்தைச்சிருஷ்டிப்போமென்று ஈசுவரன் பரியாலோசித்தார்.

2. ஜலத்தை விளித்து சங்கல்பம் செய்தார். அதினின்றும் ஒருருவமாக உண்டாயிற்று; அஃது கனரூபமாயும் காங்களால் எடுக்கத்தக்கதாயும், சராசர லக்ஷணமமையப் பட்டதாயுமுள்ள அன்னம் (ஆகாரத்துக்குத் தக்க ஜந்துக்கள் சரம்; நெல்லு முதலியன அசரம்).

3. இங்ஙனம் சிருஷ்டிச்கப்பட்ட அன்னம் பின்பற்றி ஓடத்துவக்கியது. (அதாவது தேவதைகளால் உண்கப்படாமலிருந்தது); அப்பொழுது ஆதியில் சிருஷ்டிக்கப்பட்ட மேற்கண்ட புருஷன் பேசுவதால் அன்னத்தைக் கிரகிக்க உத்தேசித்தான்; அது பயன் படவில்லை. அங்ஙனமாயின் ஒருவன் அன்னத்தைப்பற்றி பேசுவதினாலேயே திருப்தியடைவான் (அது அசம்பாவிதம்).

4. பிறகு கிராணேந்திரியத்தால் அன்னத்தைக் கிரகிக்க இச்சித்தான்; அதுவும் பயன்படவில்லை; அவ்விதமானால் முகர்தலினாலேயே திருப்தியை அடைவான் (அதுவும் அசம்பாவிதம்).

5. பிறகு சக்ஷுரிந்திரியத்தால் அன்னத்தைக் கிரகிக்க விருப்பமுற்றான்; அதுவும் பயன்படவில்லை; அவ்விதமானால் பார்ப்பதினாலேயே திருப்தியை யடைவான் (இதுவும் அசம்பாவிதம்).

6. ச்ரோத்திரேந்திரியத்தால் (கேட்பதனால்);

7. ஸ்பர்சநேந்திரியத்தால் (தொடுவதினால்);

8. மனத்தால் (நினைப்பதனால்);

9. சிச்னத்தால் (விஸர்ஜனத்தினால்) அன்னத்தைக் கிரகிக்க இச்சித்தான். மேல்சொல்லப்பட்டவைகளினாலும் முடியவில்லை.

10. பிறகு அபானவாயுவால் அன்னத்தைக் கிரகிக்க இச்சித்தபொழுது கிரகிக்க முடிந்தது. இந்த வாயுவே அன்னத்தைக் கிரகிக்கத் தகுந்தது. இந்த வாயு அன்னத்தைக் கொண்டு ஜீவித்திருக்கின்றதென்பது பிரசித்தம்.

11. வாக்கால் பேசப்படுவதும், கிராணத்தால் முகரப்படுவதும், கண்களால் பார்க்கப்படுவதும், சுரோத்திரத்தால் கேட்கப்படுவதும், துவக்கால் தொடப்படுவதும், மனதால் தியானிக்கப்படுவதும், அபானத்தால் கிரகிக்கப்படுவதும், சிச்னத்தால் விசர்ஜனப் செய்யப்படுவதும் இந்த காரியகாரணகூட்டமானது என்னையன்றி எவ்விதம் நிலைபெற்றிருக்கக் கூடும்? நான் எவ்வித சுவரூபனாக விருக்கின்றேன். (அதாவது இவைகளை நான் ஏவாவிடில் அவைகள் தம்தம் தொழில்களை எவ்வாறாக நடத்தும்; ஒருபொழுதும் நடத்த முடியாது. ஆகல்பற்றி இவைகளுள் நாம் பிரவேசிக்கவேண்டும். தலை, கால் இவ்விரண்டு மார்க்கங்களுள் எவ்வழியாய்ப் பிரவேசிப்போமென்று ஈசுவரன் ஆலோசித்தார்)

12. இந்த மூர்த்தாவைப் பிளந்து அவர் அதன் வாயிலாகப் பிரவேசித்தார், இதற்கு விதிருதி (பிளப்பு, துவாரம்) என்றுபெயர்; இஃது ஆநந்தமயமானதுவாரம்; இவ்வழியாய் உட்புகுந்த அவருக்கு மூன்றிருப்பிடங்களுண்டு; ஜாக்கிரதாவஸ்தையில் வலது கண்; சுவப்னாவஸ்தையில் மனது; சுழுப்தி அவஸ்தையில் ஹிருதயாகாசம்; இம்மூன்றும் ஸ்வப்னங்கள் (அதாவது ஜாக்கிருத சுவப்ன சுழுப்தி ஆகியவிம்மூன்றும் நசுவரங்களானதால்—சுவப்னம் போலிருக்கின்றபடியால் சுவப்னங்களென்றே கூறப்பட்டன).

13. இவ்விதமுண்டான (இவ்விதம் காரியகாரண கூட்டமாகின்ற உபாதியுடன் சேர்ந்த) ஜீவன் அகங்காரமடைந்து, "இச்சரீரத்தில் வேறு யாதிருக்கிறது, எல்லாம் நாம்" என்று அபிமானங்கொண்டு ஆரோபித்துக் கொள்ளுகின்றான். இவ்விதம் நீடூழிகாலம் அறியாமையால் உறக்கமுற்று, பிறகு ஓர் சமயம் பரமகிருபாநிதியாகிய ஆசாரியருடைய உபதேசத்தால் விழித்துக்கொண்டு, மேற்குறித்த இந்தப்புருஷனை (பிரமத்தை) தன்னிடத்திற்றானாகவேபார்க்கின்றான்.

14. ஆதலால் இந்தப் புருஷனுக்கு இதந்திரனென்று பெயர். (ஐ௰ஂவ௱ூ தீதிஐ௰ஂஉ ஃ; இந்த அபரோக்ஷமாயிருக்கின்ற பிர்த்தியகாத்மாசரீரத்தில் இருப்பதாகக்காணப்படுகிற ஆத்மாவையே பார்க்கின்றார்; அதாவது பிர்த்தியகாத்மாவாகவே யிருக்கின்றார்). அவரை இந்திரனென்று பரோக்ஷமாகச் சொல்லுகின்றார்கள் (பூஜ்யர்களின் பெயரை நேரில் கூறுவதைக்காட்டிலும், பரோக்ஷமாகச் சொல்வது மரியாதையாம்; பூஜ்யர்களுக்கெல்லாம் பூஜ்யராயுள்ள ஈசுவரனை அங்ஙனம் மரியாதை செய்யத் தடை என்ன?)

## இவ்வத்தியாயத்தின் முக்கியதாத்பரியம்.

---

ஜகத் உத்பத்தி ஸ்திதிலயகிருத், அஸம்ஸாரீ, ஸர்வக்ஞன், சர்வசக்தன், சர்வவித்தாகிய பரமாத்மா இந்த எல்லா ஜகத்தையும் யாதொரு உபாதான காரணமின்றி ஆகாசாதி கிரமமாக தானே சிருஷ்டித்து தனதாத்மாவைத் தானே அறிந்துகொள்ளும் பொருட்டு, சகல பிராணிகளின் சரீரங்களிலும் தானே பிரவேசித்து, தனதாத்மாவை பிர்மம் நானாகவே யிருக்கிறேனென்று அறிந்து கொள்ளுகிறார். ஆதலால் எல்லா சரீரங்களிலும் ஒரே ஆத்மாவேயன்றி வேறில்லை யென்பது இதன் தாத்பரியம்.

சிருஷ்டிக் கிரமத்தில் அனேக விஷயங்களில் அசம்பாவிதமிருக்கிறதென்ற ஆக்ஷேபத்துக்குச் சமாதானமிரண்டு சொல்லப்பட்டிருக்கின்றன. (1) சிருஷ்டி கிரமம் சொல்லியது அர்த்தவாதம். அதாவது இந்த ஜகத்தின் லக்ஷணத்தை எளிதில் போதிப்பிக்க வேண்டிய நிமித்தம் உலகவியவகாரம்போல் ஒரு கட்டுக்கதையாகக் கூறப்பட்டது. ஆத்மாவை, யறியவேண்டியது முக்கியமே தவிர சிருஷ்டிக் கிரமம் தெரிந்துகொள்வதில் யாதொரு பயனுமில்லை. (2) அங்ஙனமில்லாவிடினும், மாயாவியாயிருக்கின்ற ஈசுவரனுக்கு யாது தான் செய்ய வியலாது?

மாயைக்கு யாதும் அசம்பாவிதமில்லை; யாவும் கூடும். ஆத்மாவை அறிவதற்கு சாஸ்திரோபதேசமே விதியென்க. வேறொன்றுமில்லை. ஆதலால் ஆத்ம ரூபத்தைப் போதிக்க உபநிஷத் முதலியசாஸ்திரங்கள்பிரவிர்த்தித்திருக்கின்றன. எதுவரைதன்னாத்மாவை யறியாமலிருக்கின்றானோ அதுவரை அவித்தையாலுண்டானஉபாதிதர்மங்களைத் தனக்கென்று கருதி பிர்ம்மாமுதல் ஸ்தம்பப்பூச்சி ஈறு

யுள்ள தேவதிரியக் ஜன்மங்களை அடிக்கடி மீண்டுமீண்டு மெடுத்து அவித்தியா காமகர்ம வசத்தால் சம்சரிக்கின்றான். இவ்விதம் ஒவ்வொருதடவையிலுமடைந்த தேகேந்திரிய கூட்டத்தைவிட்டொழிகிறான், பிறகுவேறு கூட்டத்தையடைகிறான். இவ்விதம் அடிக்கடி ஜனன மரணதுக்கத்துக்குள் இடற்பட்டு உழல்கின்றான். இத்தகைமை வாய்ந்தவன் எப்படிப்பட்ட அவஸ்தைகளுடன் இருக்கிறானென்பதைப்பற்றிசுருதிமொழிகின்றது.

## முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

உ

# ஐதரேயோபநிஷத்

## இரண்டாவது அத்தியாயம்

### நான்காவது கண்டம்.

(இந்த ஜீவன் வைராக்கியத்தால் அவித்தியா காமகர்மவாஸனாதி கர்மங்களையியற்றி இவவுலகத்தினின்றும் தூமாதிமார்க்கமாய் சந்திரலோகத்தை யடைந்து, அங்கு கர்மபலன் குறைவுற்றவுடன் விருஷ்டியாதிக்கிரமமாக இவ்வுலகத்தைப் பெற்று அன்னரூபமாகி புருஷாக்கினியில் வீழ்த்தப்படுகின்றான். அப்புருஷனிடம் முதன்முதல் ரேதஸ்ரூபமாக கர்ப்பமாக விருக்கின்றான். இவ் விஷயம் விவரமாய் இந்த அத்தியாயத்தில் எடுத்துரைக்கப்படும்).

1. இந்த ஸம்ஸாரி, முதலில், புருஷனிடம் கர்ப்பமாயிருக்கின்றான். யாங்ஙனமெனின், அன்னமயமான தேகத்தின் எல்லா அங்கங்களினின்றும் ஸாரமாக உண்டாகின்ற ரேதஸ் ரூபமாகிற தனதாத்மாவைத் தன்னிடமே பிதா தரிக்கின்றான். அந்த ரேதஸை ஸ்திரீயினிடம் எப்பொழுது ஸம்யோக காலத்தில் வெளிவிடுகிறானோ அப்பொழுது அச்சம்ஸாரிக்கு முதல் ஜன்மமுண்டாகின்றது (அதாவது முதலிலுண்டாகிற அவஸ்தை).

2. அத்தகைய ஸ்திரீயினிடம் விடப்பட்ட ரேதஸானது அவளுடைய ஆத்மாவைச் சார்ந்ததாகவே ஆகிவிடுகின்றது (அதாவது தன் சொந்த அங்கமாகிய ஸ்தனம்முதலானது எவ்விதம் தன் தேகத்துடன் ஒத்ததாயிருக்கின்றதோ அப்படியேயென்க). ஆதலாலந்தகர்ப்பம் இவளை ஹிம்சிக்கின்றதில்லை. அவள் இவ்விதம் உண்டான கர்ப்பத்தை பாதுகாக்கின்றாள்.

3. அங்ஙனம் கர்ப்பத்தைப் பாதுகாக்கின்ற அவளும் காப்பாற்றப்படவேண்டியது. அவள் கர்ப்பத்தைத் தரிக்கின்றாள். பத்தாவது மாதத்தில் குமாரன் ஜனிக்கின்றான்; பிதாவுடைய ஆத்மாவே புத்திர ரூபனாகஉண்டாகின்றான். அவ்விதமுண்டான குமாரனை பிதா ஜாதகர்ம முதலான கிரியையாலும், தன்னைப்போலும் பா

விக்கின்றான். (அங்ஙனம் செய்வது எதற்கெனின்) உலக சந்ததிகள் விருத்தியாகும் பொருட்டு. (அதாவது புத்திரோத்பத்தியானது சந்ததி விருத்திக்குமட்டுமே யன்றி மோக்ஷத்திற்கல்ல). இவ்விதம் மாதாவின்கர்பத்திலிருந்து வெளிப்பட்டுவருவதுசம்சாரியின் இரண்டாவது ஜன்மம் (அதாவது இரண்டாவது அவஸ்தை).

4. இவ்விதமுண்டான புத்திராத்மா, பிதாவிற்குப் புண்ணிய கர்மங்களைச்செய்ய பிரதிநிதியாகவாகிறான் (அதாவது பிதாவுக்குப் பதிலாகவிருந்து புண்ணிய கர்மங்களைச் செய்கின்றான்). அப்பொழுது இந்த பிதாவான ஆத்மா கிருத கிருத்தியனாக வயோதிகத்தை யடைந்து மரிக்கின்றான் (அதாவது இத்தேகத்தை விடுகின்றான்). அங்ஙனம் விட்டவன் கர்மவசத்தால் வேறு ஜன்மத்தை யடைகின்றான். இஃது சம்சாரியினுடைய மூன்றாவது ஜன்மம் (அதாவது மூன்றாவது அவஸ்தை).

5. “கர்பத்திலிருந்துகொண்டே இந்த வாக் அக்னியாதி தேவர்களின் எல்லா ஜன்மங்களையு மறிந்துகொண்டேன்; முன்னர் என்னை இரும்பைப்போல தகர்க்கப்படாமலிருக்கின்ற அனேக சரீரங்கள் கீழ் (அதாவது நிகிருஷ்ட உலகங்களில்) ரக்ஷித்தன; இப்பொழுது, பருந்து வலையினின்றும் அறுத்துக்கொண்டு தப்பி ஓடுவதுபோல, (தத்வஞானத்தாலுண்டான சாமார்த்தியத்தினால் இந்த சம்சாரத்தைப் பிளந்துகொண்டு) வெளிக்கிளம்புகின்றேன்” என்று கர்ப்பத்திலிருந்துகொண்டே வாமதேவர் சொன்னார்.

6. இப்படிப்பட்ட ஞானியான வாமதேவர், இச்சரீரத்தை விட்டுக் கிளம்பி, ஸ்வர்க்கத்தில் எல்லா காமங்களையும்பெற்று அமிருதரானார்.

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

# ஐதரேயோபநிஷத்.

## மூன்றாவது அத்தியாயம்.

### ...தாவது கண்டம்.

1. (முமுக்ஷுக்களாயிருக்கின்ற பிராமணர்கள் ஒருவர்க்கொருவர் பிரச்னம் பண்ணிக் கொள்ளுகின்றதாவது).

எவரை, இவர் ஆத்மாவென்று சாக்ஷாத்தாக நாம் உபாஸிக்க வேண்டுமோ, அவர் யார்? இருவர்களுக்குள் எவர் ஆத்மா? (தேகத்தில் காணாத்மகமாயிருக்கப்பட்டதா, அல்லது கர்த்திரு ஆத்மகமாயிருக்கப்பட்டதா?). எதனால் ரூபத்தைப் பார்க்கின்றானோ, எதனால் சப்தத்தைக் கேட்கின்றானோ, எதனால் கந்தங்களை முகருகின்றானோ, எதனால் வசனங்களை பாஷிக்கின்றானோ; எதனால் இது நல்லது, இது கெட்டது என்றறிகின்றானோ அந்த காணம் யாதெனில்,

2. ஹிருதயமென்று கூறப்பட்டதெதுவோ, மனதென்றுரைக்கப்பட்டதெதுவோ, அவைகளிரண்டுமே. (இவ்விரண்டு காணங்களின் சேர்க்கை பிராணனென்றும் சொல்லப்படும்; இந்த காணஸம்ஹதியானதுநாம் உபாசிக்கவேண்டிய ஆத்மாவாகுமா? ஆகாது மற்று யாது? இந்த ஹிருதய மனோரூபமான காணத்தைக் கொண்டு எவன் உபலப்தியை அடைகின்றானோ, எவனுடைய காணத்திற்கு அடியில்கண்டஸம்ஞானாதி அந்தக்காணவிர்த்திகளாயிருக்கின்றனவோ, அத்தகைய வஸ்து உபாசிக்கத்தக்க ஆத்மாவென்று நிச்சயித்துக் கொண்டார்கள்). அவ்விருத்திகளாவன :—ஸம்ஞானம் (சேதனபாவம், பிராணித்வம்); ஆஜ்ஞாநம் (ஈசுவரபாவம்); விஜ்ஞாநம் (லௌகிகஞானம்); ப்ரஜ்ஞாநம் (அறிவு); மேதா (படித்ததை மறவாத சாமர்த்தியம்); த்ருஷ்டி: (இந்திரிய மூலமாக எல்லாவற்றையுமறிவது); த்ருதி: (தைரியம்); மதி: (நினைவு); மநீஷா (நிச்சய புத்தி); ஜூதி: (மனத்திடமுள்ள துக்காவஸ்தை); ஸ்ம்ருதி: (ஞாபகம்); ஸங்கல்ப: (ஏற்பாடு); க்ரது: (தீர்மானம்); அஸு: (ஜீவித்துக்கொண்டிருக்கும்படியான விர்த்தி); காம: (கிட்டாததில் ஆசை வைத்தல்); வச: (ஸதிரீ முதலியவர்களிடத்தில் இச்சை);

இவைகளெல்லாம் பிரஞ்ஞானத்தின் பெயர்கள் (அதாவது, சுத்தப் பிரஞ்ஞானமாகவிருக்கப்பட்டது பிர்மம்; அப்பிர்மத்துக்கு மேற்கூறப்பட்ட ஸம்ஞானாதி அந்தக்கரண விர்த்திகள் நாமதேயங்கள், உபாதிகளாகவிருக்கின்றன. இவ்வுபாதிகளுடன் சேரின் நாமரூபாத்மகமாக விருக்கப்பட்ட பிர்மமாகின்றது).

3. இத்தகைய பிரஞ்ஞான ரூபமாகவிருக்கப்பட்டதே பிர்மம்; இவ்வித பிர்மம் எல்லாச் சரீரங்களிலும் புகுந்து, அந்தக்கரணோபாதிகளிற் சேர்ந்து பலஜலாசயங்களில் ஒரே சூரியன், பலசூரிய பிம்பங்களாகத்தோன்றுவதுபோல, ஒவ்வொருபிராணியினிடத்தும் பின்னமாகவே காணப்படுகின்றார்). இவரே இந்திரன், பிரஜாபதி (முற்கூறப்பட்ட முதன் முதலுண்டானவர்), இவரே தேவர்கள் (உண்டான அக்கினியாதி தேவர்கள்); இவரே பிரதிவி முதலான பஞ்ச பூதங்கள்; இவரே க்ஷுத்ரமிச்ரங்கள் (சர்ப்பாதிஜந்துக்கள்); இவரே பீஜங்கள் (காரணங்கள்). இன்னும் மற்றுமுள்ளவைகளாவன:— அண்டத்திலுண்டாகின்றஜந்துக்கள், கர்ப்பப்பையிலுண்டாகின்ற ஜந்துக்கள், வியர்வையிலுண்டாகிற ஜந்துக்கள், முளைக்கின்ற விருக்ஷங்கள், அசுவங்கள், கோக்கள், புருஷர்கள், யானைகள்; இன்னும் மற்றுமுள்ள பிராணிகள் யாவும், பக்ஷிகள், ஸ்தாவரம் (கல் முதலியன) எல்லாம் பிர்மம். யாவும் பிரஞ்ஞாநேத்திரம் (அதாவது பிரஞ்ஞையையே நேத்திரமாக, அதாவது நடத்துகிற கர்த்தாவாக வைத்துக்கொண்டிருத்தல்). யாவும் பிரஞ்ஞானத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. உலகமே பிர்ஞாநேத்திரம். பிரஞ்ஞையேபிரதிஷ்டை; **பிரஞ்ஞானமே பிர்மம்.**

4. முற்கூறப்பட்ட வாமதேவரும், மற்ற பிர்மவித்துக்களும் இந்தபிரஞ்ஞானாத்மாவை யறிவதால் இவ்வுலகத்தைவிட்டுசுவர்க்கத்தில் எல்லாகாமங்களையும்பெற்று அமிருதத்தன்மையை அடைகின்றார்கள்.

ஐந்தாவது கண்டம் முற்றிற்று.

ஐதரேயோபநிஷத்முற்றிற்று.

ஓம் தத்ஸத் |

# க்ருஷ்ண யஜுர்வேதீய தைத்திரீயோபநிஷத்.

ஶாந்தி: |

ஓம் | ஶந்நோ மித்ரஶ் ஶம் வருண: | ஶந்நோ பவத்வர்யமா | ஶந்ந இந்த்ரோ ப்ருஹஸ்பதி: | ஶந்நோ விஷ்ணுருருக்ரம: | நமோ ப்ரஹ்மணே | நமஸ்தே வாயோ | த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி | த்வாமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்ம வதிஷ்யாமி | ருதம் வதிஷ்யாமி | ஸத்யம் வதிஷ்யாமி | தந்மாமவது | தத்வக்தாரமவது | அவது மாம் | அவது வக்தாரம் ||

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ||

---

(இதின் அர்த்தம் முதல் வல்லீ முதல் அநுவாகத்திலுள்ளது.)

## பாஷியப்ரதீகச்சுருக்கம்.

துரித க்ஷயார்த்தங்களாக விருக்கின்ற நித்திய கர்மங்களைப் பற்றியும், காமியார்த்தங்களாயிருக்கின்ற நைமித்திக கர்மங்களைப் பற்றியும், கர்மகாண்டத்தில் கூறப்பட்டிருக்கின்றது. கர்மங்களுடைய பலம் சம்சாரமே. இந்த பலத்தில் சுகதுக்கங்களிரண்டுமிருக்கின்றன. நித்திய சுகம் வேண்டுமாயின் கர்மங்கள் பயனற்றது. ஆதல்பற்றி கர்மங்களுக்கு ஹேதுவாயிருப்பதை நிவர்த்தி செய்யும் பொருட்டு இப்பொழுது பிர்மவித்தையைப் பற்றி இங்கு பேசப்படுகிறது. கர்மத்துக்கு ஹேது காமம்—இச்சை. இச்சையே கர்மம் செய்யும்படி தூண்டுகிறது. இச்சையில்லாதவனுக்குப் பிரவிர்த்தியில்லை. மற்ற பதார்த்தங்களில் ஞாபகம்வைக்காமல் தன்னிடத்திற்றானே யிருக்கின்றான். தன்னாத்மாவையறிய விரும்பினற்றான் மற்ற விஷயங்களில் விருப்பமற்றுப் போகும். தன் ஆத்மா என்றது பிர்மம். அதையறிந்தவன் உத்தமமான கதியை யடைகிறான். ஆகையால் அவித்தியைத்தள்ளித் தன்னிடத்திலேயே தானிருப்பது பாப்பிராப்தி என்றது. காமியங்களையும், பிரதிஷித்தங்களாயுமிருக்கிற கர்மங்களையும் ஆரம்பிவிக்காமலும், அங்ஙனம் ஆரம்பவிக்கப்பட்ட மேற்படி கர்மங்களுடையபலத்தை அநுபவித்து

நசிக்கும்படி செய்தும், விரோதத்தைப்பயக்காத நித்தியகர்மங்களை அநுஷ்டானஞ்செய்து கொண்டுமிருந்தால் யாதொரு முயற்சியுமில்லாமலே ஸ்வாத்மந் யவஸ்தானம் (தன்னிடத்திற்றனிருத்தல்—பிரவிர்த்தியில்லாமை) உண்டாகும். அதி மோக்ஷம். கர்மத்தால் சுவர்க்க சுகம் கிடைப்பதால் அதனால் மோக்ஷம்உண்டாகிறதென்று கூறுதலமையாது. ஏனெனின், கர்மங்களுள் பலவிதமுண்டு; அவைகளின் பலன்களும் அங்ஙனமே. அநேக ஜன்மாந்தரங்களில் செய்யப்பட்ட கர்மங்களின் விருத்த பலங்கள், ஒரே ஜந்மத்தில் அநுபவிக்கப்படுவதனால் தொலையா. அதாவது, கர்மங்கள் மென் மேலும் செய்யப்படின், பலன்களும் அங்ஙனமே விர்த்தியாகும். முடிவுகாலம் சம்பவிக்காது. அந்தந்த கர்மத்தின் பலனை அநுபவிக்க அந்தந்த நிமித்த சரீரங்கள் உண்டாகிக் கொண்டே வரும். அதாவது, ஜநநமரண முடிவின்றி சம்பவிக்கும். அப்பொழுது மோக்ஷம் சித்திக்காது. நித்திய சர்மங்கள் ஆரப்த கர்ம பலன்களை நிவர்த்தி செய்யமாட்டாது. அநாரப்தபலகர்மங்களை அழிக்கவுமாட்டாது. ஆதல்கொண்டே நித்திய கர்மங்கள் மோக்ஷத்துக்கு ஸாதனமாகாது. ஞானமில்லாவிடின் கர்ம ஹேதுக்களாயிருக்கிற கர்மங்களுக்கு ஒழிவு நேரிடாது. ஆத்மாவை அறியாதவனுக்கு காமம் பின்பற்றிக்கொண்டேயிருக்கும். தன் ஆத்மாவான பரபிர்மம். மோக்ஷசாதனமாகவிருக்கவில்லையென்று கருதி நித்திய கர்மங்களைச் செய்யாமலிருக்கவுங் கூடாது. செய்யாவிடின் கெடுதியுண்டு. உலகத்தில் எதற்குத் தோற்றமுண்டோ அது நசிக்கும். ஆதாலால் கர்மாரம்பத்தினால் மோக்ஷமுண்டாகாது. வித்தியையுடன் கூடின கர்மங்களுக்கு நித்தியாரம்ப வாற்றலுண்டென்பது அமையாது. இது முற்றும் விரோதம்; ஆரம்பமுள்ளதற்கு நித்தியத்துவமில்லை. மோக்ஷம் ஆரம்பம் என்று கூறுதல் பொருந்தாது. ஏனெனின் மோக்ஷம் பாவரூபமுள்ளது (எப்பொழுதுமுள்ளது). இல்லாதது உண்டானால் அது ஆரம்பம் என்று சொல்லாம், ஆதல்பற்றி அவித்தியா காமகர்மோபாதானஹேது நிவர்த்தியானல்ஸ்வாத்மந்யவஸ்தானமென்ற மோக்ஷம் சித்திக்கும். தன்னாத்மாவே பிர்மம்; அதையறிந்தாற்றான் அவித்தியாநிவர்த்தி யுண்டாகும்; அவ்விதம் வித்யையை உபதேசிப்பதற்காகவே உபநிஷத் பிரவிர்த்தித்தது. பிர்மத்தின் சமீபம் கிட்டுவதால் உபநிஷத் என்ற நாமம் சித்தித்தது.

# சீக்ஷாவல்லி யென்ற முதல் அத்தியாயம்.

## முதல் அநுவாகம்.

(வித்தியார்த்தியாகிய சிஷ்யன் துவக்கத்தில் பிரார்த்தித்துக் கொள்கிறதாவது):—எங்களுக்கு (எனக்கும், குருவுக்கும்) பிராணவிர்த்திக்கும், பகலுக்கும் அபிமானதேவதையாயிருக்கிற மித்திரனும் (சூரியனும்); அபானவிருத்திக்கும், இரவுக்கும் அபிமான தேவதையாகிய வருணனும்; நேத்திரத்திலும், ஆதித்யமண்டலத்திலும் அபிமான தேவதையாகிய அர்யமாவும் (சூரியனும்); பலத்தில் அபிமான தேவதையாகிய இந்திரனும்; வாக்கிலும், புத்தியிலும் அபிமானதேவதையாகிய பிரஹஸ்பதியும்; பாதங்களில் அபிமான தேவதையாகிய விஸ்தீர்ணக் கிரமமுள்ள விஷ்ணுவும், சுகத்தைக் கொடுக்கட்டும். பிர்மத்தின் பொருட்டு நமஸ்காரம் செய்கிறேன். ஹே! வாயுவே! பிராணனே! உங்களுக்கு நமஸ்காரம். நீங்களே பிரத்தியக்ஷமாயிருக்கிற பிர்மம். உங்களையே அவ்விதஞ் சொல்லப்போகிறேன், நீவிரே, ரிதம் (ருஜுமார்க்கம் சாஸ்திரப்படி கிரமமாக விருத்தல்). நீவிரே சத்தியம். சர்வாத்மகமான மேற்படி வாயுவென்று பெயருள்ள பிர்மமானது என்னையும் குருவையும் ரக்ஷிக்கட்டும். (ஓம் ஶாந்தி: என்று மூன்று தடவை கூறுவதன் பயன் யாதெனின், வித்தியாபிராப்திக்கு அத்தியாத்மக, அதிபௌதிக அதிதைவிகங்களாயிருக்கிற விக்னங்கள் ஒழிவுறட்டுமென்று).

## இரண்டாம் அநுவாகம்.

இனி சிக்ஷாத்தியாயம் (உபநிஷத்துக்கு அர்த்தஞானம் பிரதானமானபடியால் அதையறிந்து கொள்வதற்காக வர்ணாதிஉச்சாரலக்ஷணமுள்ள சாஸ்திரம்) கூறப்படுகிறது. (1) எழுத்து, (2) சுவரம்—உதாத்தம் முதலியன, (3) மாத்திரை—ஹிருஸ்வம்முதலியன (4) பலம்—பிரயத்தின விசேஷம். (5) சமதை. (6) சேர்க்கை முதலியன அறிந்துகொள்ளவேண்டுவது அத்தியாவசியம்.

## மூன்றும் அநுவாகம்.

(இப்பொழுது சம்ஹிதோபநிஷத்சொல்லப்படுகிறது. சம்ஹிதாவெனின், அக்ஷரங்களுடைய சேர்க்கை—அதாவது சப்தங்கள்; இந்த உபநிஷத் கிரந்தத்திலுள்ள சப்தங்கள் அர்த்த ஞானவிஷயத்தில் கிரந்தபாவத்தை யறியும்படியான புத்திசுலபசாத்தியமன்றாகையால் அர்த்த விசாரணைக்குமுன்னரே சப்தங்களை உபாசித்தால் அதற்குப் பலன்கள் உண்டென்று அந்த சப்த உபாசனுக்கிரமம் சொல்லப்படுகிறது. அந்த ஸம்ஹிதா உபநிஷத்சம்பந்தமான யசஸும் தேஜஸும் எங்களிடத்திலிருக்கட்டும் (என்று சிஷ்யன் பிரார்த்திக்கின்றான்).

ஸம்ஹிதா விஷயமான தர்சனத்தைப்பற்றி இங்கெடுத்துக் கூறுவாம். ஞானவிஷயமாயிருக்கிற ஐந்து ஆசிரயங்களுண்டு; அதற்குக் காரணங்களென்று பெயர். ஒரு விக்ரகத்தை விஷ்ணுவாகப்பாவித்து, நாம் தர்சனம் செய்கிறது போல அக்ஷரங்களில் இதனடியிற் கூறப்புகும் லோகாதி ஐந்து மொத்த பதார்த்தங்களால் விசேஷிக்கப்பட்ட அதாவது அந்த பதார்த்தங்களின் விஷயமான ஞானம் இருக்கிறதென்று பாவித்து உபாஸிக்கவேண்டும்).

மேற்கூறிய ஐந்து அதிகாணங்களாவன :—(1) அதிலோகம், உலக சம்பந்தமுள்ளது. (2) அதிஜ்யோதிஷம், ஜோதிஸ் ஸம்பந்தம். (3) அதிவித்தியம்—வித்தியா சம்பந்தம், (4) அதிப்ரஜம்—பிரஜாசம்பந்தம்; (5) அத்தியாத்மம்—ஆத்மசம்பந்தம், இவ்வைந்துகளுக்கும் மஹாஸம்ஹிதா (பெரிய சேர்க்கைகள்) என்று பெரியோர்கள் கூறுவார்கள். இவைகளுள் ஒவ்வொன்றிற்குமுள் ளடக்கமான பதார்த்தங்கள் சொல்லப்படுகின்றது. முதல்மஹாஸம்ஹிதைக்கு, பிரதிவிபூர்வரூபம் (முந்தினவர்ணம்; அதாவது ஒருஸம்ஹிதையில்—சப்தத்தில் முந்திய அக்ஷரத்தில் பிருதிவி திருஷ்டியைப்பொருத்தவேண்டியது;) த்யௌ: (ஸ்வர்க்க லோகம்) உத்தரரூபம் (பின் வர்ணம்); ஆகாசம் (அந்தரிக்ஷம்) ஸந்தி: (மேற்படி பிரதிவியும், ஸ்வர்க்கலோகமும் எதில் சந்திக்கிறதோ அந்தவிடம்) வாயு ஸந்தானம் (இரண்டும் எதனுல் சந்திக்கப்படுகிறதோ அந்த பதார்த்தம்). அதிஜ்யோதிஷம் :—பூர்வரூபம்—அக்நி; உத்திரரூபம்—ஆதித்தியன்; ஸந்தி—ஜலம்; ஸந்தானம்—மின்னல்;

அதிவித்தை :—பூர்வரூபம்—குரு; உத்திரரூபம்—சிஷ்யன்; சந்தி—வித்தை; சந்தானம்—உபதேசித்தல்; அதிப்ரஜை :—பூர்வரூபம்—மாதா; உத்திரரூபம்—பிதா; சந்தி—பிரஜை; சந்தானம்—பிறப்பு; அத்தியாத்மம் :—பூர்வரூபம்—கீழ்வாய்; உத்திரரூபம்—மேல்வாய்; சந்தி—வாக்கு; சந்தானம்—நாக்கு; இவ்விதம் வர்ணங்களில் மேற்கூறப்பட்டுள்ள பிரதிவி ஆதிபதார்த்தங்களென்று பாவித்துணரவேண்டும். இங்ஙனமறிந்தவனுக்குப் பலன்கள், பிரஜை பசுக்கள், பிர்மதேஜஸ், அன்னம், ஸ்வர்ணம், நல்லுலகம் இவைகளுடன் சேர்க்கப்படுகிறான். பலனையிச்சித்து உபாசிக்கிறவனுக்கு மேற்படி பலன் கிடைக்கிறது. இச்சியாமல் உபாசிக்கிறவனுக்கு பிர்ம வித்தைக்குரிய ஞானம் சித்தியாகின்றது.

## நான்காம் அநுவாகம்.

(ஸ்ரீ காமனுக்கும், சம்பத்தை இச்சிக்கிறவனுக்கும், மேதா காமனுக்கும், ஞானாபேக்ஷை உள்ளவனுக்கும் ஜப, ஹோம, கர்மங்கள் சொல்லப்படுகின்றன).

1. (மேதாகாமன் செய்யும் ஜபம் யாதெனில்) "எது வேதங்களுக்கெல்லாம் சிலாக்கியமாயிருக்கிறதோ, சர்வரூபமாயிருக்கிறதோ, வேதங்களுக்கெல்லாம் வேதமாகிய அமிருதத்தினின்றும் உண்டாயிற்றோ, சர்வகாமத்தையும் பயக்குகிறதோ, அந்த ஓங்காரமானது எனக்கு ஞானத்தைக் கொடுக்கட்டும்; ஹே! தேவ! அமிருதத்துவத்துக்கு ஹேதுவாயிருக்கிற பிர்மஞானத்தைத் தரித்து கொண்டவனாக நானாகட்டும்; என்னுடைய சரீரம் அந்த ஞானத்தைக் கைப்பற்ற யோக்கியமாகவாகட்டும். என்னுடைய நாக்கு மதுரமான வார்த்தையை உச்சரிக்கட்டும்; என் காதுகள் நன்றாகக் கேட்கட்டும்; ஹே! ஓங்காரமே! நீ ப்ரம்மத்துக்கு பிரதீகமாக (விக்ரகமாக) விருக்கின்றனை; ஆத்மஞானார்த்தம் நான் கேட்டிருப்பதை ரக்ஷி (கேட்டதை மறவாமலிருக்கச் செய்)."

(2) (ஸ்ரீகாமன் செய்யும் ஹோமமாவது). "எந்த ஸ்ரீயானவள் (சம்பத்தானது) எனக்கு வஸ்திரங்களையும், கோக்களையும், அன்னபானாதிகளையும் சீக்கிரமாகத் தருவித்துக் கொடுக்கின்றனளோ, ஏராளமாகக் கொடுக்கின்றனளோ, செய்துகொடுக்கின்றனளோ, அந்த ஸ்ரீயைப் பசு முதலியவைகளுடன் எனக்குக் கொடு."

(இஃது "ஸ்வாஹா"வென்று ஹோமம் செய்யுங்கால் சொல்லப்படுகிறது).

"ப்ரம்மசாரிகள் (பிரம்ம வித்துக்கள்) என்னிட மணுகட்டும் (அதாவது அவர்களை நான் தரிசனம்பண்ணும்படிசெய்குக); அவர்கள் விசேஷமாய் வரட்டும்; அவர்களதிகமாய் வரட்டும் (அதாவது அநேகம் பெரியோர்களை நான் பார்க்கட்டும்); அவர்கள் என்னை தமப்படுத்தட்டும் (பஹிரிந்திரியநிக்ரஹனாக என்னைச்செய்யட்டும்); அவர்கள் என்னை சமப்படுத்தட்டும் (அந்தரிந்திரிய நிக்ரஹனாகச் செய்யட்டும்)."

3. "ஜனங்களுக்குள் யசஸ்வியாக நான் ஆகட்டும்; மஹைசுவரியவானாக நானாகட்டும்; உன்னிடத்தில் நான் பிரவேசிக்கின்றேன்; நீ என்னிடம் பிரவேசி (அதாவது உன்னிடத்தில் நான் ஐக்கியப்படட்டும்); மிகவும் பேதமுள்ள உன்னிடத்தில் சோதிக்கின்றேன்; (என் பாபத்தைப்போக்கடிக்கின்றேன்). எவ்விதம் உலகத்தில் பள்ளங்கண்டவிடத்தில் ஜலம்போகுமோ, எப்படி மாசங்கள் (காலம்) செல்லுகின்றனவோ (ஜனங்களை ஜரைக்குட்படுத்தி) அவ்விதம் நான்கு திக்குகளிலுமிருந்து பிர்மவித்துக்கள் என்னிடம் வரட்டும்; எல்லா துக்கபாபங்களையும் நாசஞ்செய்யக்கூடிய ஸ்தானமாக விருக்கின்றாய்; ஆதலால் என்னைப்பிரகாசப்படுத்து; என்னை வந்து அடை (எனக்கு அனுக்கிரகம் செய்)."

## ஐந்தாம் அநுவாகம்.

(முன் அநுவாகத்தில் பிர்மத்தினுடைய பிரணவ சரீரம் சொல்லப்பட்டது. இற்றைக்கு ஹிரண்யகர்ப்பமென்ற வியாஹிருதி சரீரம் கூறப்படுகிறது. அதாவது வியாஹிருதியாத்மாவான பிர்மத்தினுடைய அந்தருபாஸனம் எடுத்துரைக்கப்படுகிறது).

1. பூ: (பூலோகம்); புவ: (அந்தரிக்ஷம்); ஸுவ: (ஸ்வர்க்கலோகம்) இம்மூன்றும் வியாஹிருதிகள். மஹ என்றது நான்காவது வியாஹிருதி; அதாவது பிர்மமா (இப்படி மூன்றுவியாஹிருதிகளை சரீரமாகப் பெற்றவர்); அவரே ஆத்மா (சர்வவியாப்தியுள்ளவர்). இந்த நான்காவது வியாஹிருதியை மஹாசமஸ்யரென்றவர் கண்டறிந்தவர் (ரிஷிஸ்மரணம் உபாஸனைக்கு வேண்டியதென்றுமேற்படி. ரிஷியைப்பற்றி இங்குபிரஸ்தாபிக்கப்பட்டது).

(இந்த மூன்று வியாஹ்ருதிகளும்—அக்நிபமுதேவர்களும்—பிர்மத்தினுடைய சரீரமாயுமிருக்கின்றன).

பூ:—இந்த லோகம், புவ:—அந்தரிக்ஷம், ஸுவ:—அந்த லோகம்—சுவர்க்கம், மஹ:—ஆதித்தியன். ஆதித்யனால் எல்லா உலகங்களும் மகிமையை அடைகின்றன (பிரகாசிக்கின்றன—அதாவது மூன்று உலகங்களைக் காட்டிலும் ஆதித்யன் பெரிது). பூ:—ருக்வேதம்; புவ:—சாமவேதம்; ஸுவ:—யஜுர்வேதம் மஹ:—பிர்மம் (பிரணவம்); பிரணவத்தினால் சர்வ வேதங்களும் மகிமையடைகின்றன. பூ:—அக்நி, புவ:—வாயு, ஸுவ:—ஆதித்யன், மஹ:—சந்திரமா, சந்திரனால் யாவத் ஜோதிஸ்களும் மகிமையை அடைகின்றன. பூ:—பிராணவாயு, புவ:—அபான வாயு, ஸுவ:—வியான வாயு, மஹ:—அன்னம், அன்னத்தினால் சகலப் பிராணன்களும் மகிமையை அடைகின்றன. இவைகளை அறிந்தவனே பிர்மத்தை அறிந்தவன்—ஸ்வாராஜ்யத்தை அடைந்தவன்; இத்தகைமை வாய்ந்தவனுக்கு தேவர்கள் பலி (சுப்பம்) கொண்டுவந்து இருப்பார்கள் (அதாவது தேவர்கள் இவனுக்கு வேண்டியவற்றை யளிப்பார்கள்).

## ஆறும் அநுவாகம்.

(பிர்மம், ஒருவனிடத்தில் எந்தஸ்தானத்திலிருந்து ஸாக்ஷாத்தாக உபலப்தி பெறக்கூடியதோ, அந்த ஹிருதயாதி ஆகாசஸ்தானமும் அதன் உபாஸனையும் இங்கெடுத் தோதப்படுகிறது. சாளக்கிராம சிலையில் யாங்ஙனம் விஷ்ணுவை உபாசிக்கின்றோமோ அங்ஙனம் ஈண்டு கூறப்புகுந்த ஸ்தானத்தில் பிர்மத்தை உபாசிக்க வேண்டியது).

1. அந்தர் ஹிருதயத்தில் ஆகாசமிருக்கின்றது; (புண்டரீக ஆகாரமுள்ள ஒரு மாம்ஸபிண்டம் தேகத்தினுள்ளிருக்கின்றது; அஃது பிராணனிருக்குமிடம்; அநேக நாடிகளுடன் கூடிய துவாரத்தோடிருக்கின்றது; அதற்குத்தண்டு, காம்பு மேல், முகம் கீழ். இவ்வாறமைந்த விடத்தில் ஓர் வெட்டவெளியிருக்கின்றது); அந்த ஆகாசத்தில், மனோமயமான (விக்ஞாநமயனான) புருஷன் (எல்லா உலகங்களிலும் பூரணமாகவியாபித்திருக்கின்றவன்) இருக்கின்றான்;

அவன் மரணதர்மமில்லாதவன்; பிரகாசமுள்ளவன். (இவ்விதம்பிர்ம ஸ்வரூபத்தை யறிந்த வித்துவானுடைய ஸ்வரூப பிரதிபத்தி மார்க்கம் எண்டெடுத்துக் கூறப்படுகிறது). அந்த இருதயத்துக்கு மேல், சுழும்னுவென்ற நாடி செல்கின்றது; இரண்டு தாள்வாய்க்கு மிடையில் ஸ்தனம்போல் ஒரு மாம்சபிண்டம் தூங்குகின்றது. (அதாவது உண்ணாக்கு); அதற்குமேல் கேசாந்தம் (மூர்த்தா, உச்சந்தலை) வித்துவானுடைய ஜீவன் இருதயத்திலிருந்து மேற்கூறிய நாடி, உள்நாக்கு, இவைகளின் வாயிலாகச்சென்று, மூர்த்தாவை யடைந்து, அவ்விடமிருந்து கபாலத்தைப் பிளந்துகொண்டு வெளிப்படுகிறது. இதுவே பிர்மஸ்வரூப பிராப்திமார்க்கம். இங்ஙனம் வித்துவான் வெளிப்புறப்பட்டு, பூ: என்ற வியாஹிருதி ரூபமாகவுள்ள அக்னியின்கண் பிரதிஷ்டிதனாகின்றான்.

பிறகு, "ஸுவ:" என்ற வியாஹிருதி ரூபமான ஆதித்யனைச்சேருகின்றான்; அதன் பிறகு "மஹ:" என்ற வியாஹிருதி ரூபமான பிர்மத்தில் கலந்து செல்கின்றான்; அப்பொழுது ஸ்வாராஜ்யத்தைப் பெற்றவனாகின்றான்; மனதிற்கெல்லாம் பதியாயிருக்கின்ற பிர்மத்தை அடைந்தவனாகின்றான். வாக்கு, சக்ஷுஸ், ஸ்ரோத்திரம் விஞ்ஞானம் இவைகட்கெல்லாம் பதியாகின்றான். (அதாவது யாவுந் தெரிந்தவனாகின்றான்). இஃதன்றி மேலானவனாகின்றான்; ஆகாசம் போன்ற சூக்ஷ்மசரீரத்தையுடைய பிர்மமாகவே ஆகின்றான்; சத்தியமாகிற (மூர்த்தா மூர்த்தமாகிற) ஜகத்தை ஆத்மாவாகவடைந்தவனாகவும், பிராணன்களிடத்தில் விளையாட்டை உடையவனாகவும் மனதின்கண் ஆனந்தத்தை யுடையவனும், பூர்ணமாய் சாந்தி பொறுமை உள்ளவனும், அமிருதனும் ஆகிவிடுகிறான். இவ்வாற்றால் ஹே! பிராசின யோக்ய! இத்தகைய பிர்மத்தை நீ உபாஸி (என்று குரு, சிஷ்யனுக்குபதேசிக்குமுறை).

## ஏழாம் அநுவாகம்.

---

(வியாஹிருதியாத்மகமாக பிர்மம், உபாஸ்ய மென்றெடுத்தோதப்பட்டது. இப்பொழுது அந்த பிர்மத்துக்கே பிருதிவி முதலான பாங்க்தஸ்வரூபமாக உபாஸநம் சொல்லப்படுகிறது. "பாங்க்தம்" என்பது ஐந்துளதெனப் பொருள்படும். அஃது யக்ஞம் பாங்க்த கர்மம், யாங்ஙனமெனில்—பத்னி, எஜமானன், தைவம், மனித

ர்கள், வித்சும் இவ்வைந்தும் யஞ்ஞத்துக் குரியன ; இவ்வாறு உலகமுதலியனவற்றை அவ்வைந்தாகக் கற்பித்துக்காட்டி, அவ்வப்பாங்க்தமாகப் பிரஜாபதியாகிய பிர்மம் விளங்குகிறதென்று சொல்லப்படுகிறது).

1. பூமி, அந்தரிக்ஷம், ஆகாயம். திக்குகள், மூலைதிக்குகள், இவவைந்தும் லோகபாங்க்தங்களாம். அக்நி. வாயு, சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் இவ்வைந்தும் தேவதாபாங்க்தங்களாம். ஜலம், செடிகொடிகள், விருக்ஷங்கள், ஆகாசம், ஆத்மா (விராட்சுவரூபி) இவ்வைந்தும் பூதபாங்க்தங்களாம். இந்த மூன்று ஐந்துகளுக்கும் அதிபூதம் (பூதசம்பந்தமான) ஐந்துகளென்று சொல்லப்படும். பிராண, அபாந, வியான, உதாந, சமாந இவ்வைந்தும் வாயு பாங்க்தங்களாம். நேத்திரம், சுரோத்திரம், மனஸ், வாக்கு, துவக்கு (உணர்தல்) இவ்வைந்தும் இந்திரிய பாங்க்தங்களாம், தோல் மாம்சம், ஊன் ஜலம், எலும்பு, மஜ்ஜை (எலும்புக் குள்ளிருக்கும் பசை) இவ்வைந்தும் தாது பாங்க்தங்களாம். இம்மூன்று ஐந்துகளுக்கும் அதியாத்மம் (ஆத்மசம்பந்தமான) ஐந்துகளென்றுரைக்கப்படும். " இவ்வாறு அவ்வைந்தாக வகுத்த இவையாவும் (புலப்படுகிற ஜகத்யாவும்) பாங்க்தமாக (அவ்வைந்தாக) விளங்குகிறது" என்றும் ; " பாஹ்ய பாங்க்தமானது (அதி பூதபாங்க்தமானது) அத்தியாத்மகத்துடன் கலந்து பூர்ணப்படுகிறது "; (அதாவது கேட்டதைக்கொண்டு நல்லது விளங்கும்" என்ற நியாயப்படிக்கு, வெளிப்பட்ட பாங்க்த சுவரூபத்தைக் கொண்டு அத்தியாத்ம பாங்க்தத்தை அறியவேண்டும்) என்றும், (வேதம் அல்லது) ரிஷியின் கூற்று. இவ்வாறு பாங்க்தஸ்வரூபமாக பிர்ம்மமிருக்கிற தென்றறிகிறவன், பிரஜாபதியாகவே ஆகிவிடுகின்றான்.

## எட்டாவது அநுவாகம்.

(இப்பொழுது சர்வோபாசனங்க பூதமாயிருக்கின்ற ஓம்காரத்தின் உபாசனம் எண்டெடுத்துக் கூறப்படுகிறது. ஓம் காரம் பரபிரம்மமாக பாவிக்கப்பட்டு போசிக்கப்பட வேண்டும். அஃது சப்த மாத்திரமாயிருந்தாலும், பராபர பிர்மத்தை அடைகிறதற்குச் சாதனமாகவிருக்கின்றது. அது பிர்மத்தின் கவர்ச்சி—இருப்பிடமாயிருக்கிறது).

1. "ௐ" என்ற சப்த ரூபத்தை பிர்மமாக மனவினால் தியானிக்கவேண்டும்; ஏனெனில், இஃது ஜகத்தெல்லாம் ஓங்காரஸ்வரூபமாகவிருக்கிறது ("ௐ" என்ற சப்தத்தால் வியாப்தமாயிருக்கிறது); மேலும் அது அநுக்ருதி (அதாவது ஒருவனை ஒரு காரியத்தை செய்யும்படி ஏவினால், அதற்கு அவன் "ௐ" என்று மறுமொழி புகலின், அங்ஙனமே செய்வேனென்று அங்கீகரித்துப் பேசுதல்); ஒருவனால் விளிக்கப்பட்டவன், "ௐ" என்று கேட்கிறான்; துவக்கத்தில் ௐ என்று ஸாமத்தை கானம் செய்கிறான்; ௐ என்று ரிக்வேத சாஸ்திரமந்திரங்களைச் சொல்லுகிறார்கள்; யாகத்தில் அத்வர்யு ௐ என்று பிரதிசம்ஸாதத்தை உச்சரிக்கிறான்; பிர்மா என்ற ரித்விக், ௐ என்றுச்சரித்து அவன் கர்மாவைச் செய்கின்றான்; ௐ என்றுச்சரித்து அக்நிஹோத்திரம் செய்கிறார்கள்; பிராமணன், துவக்கத்தில் ௐ என்றுச்சரித்துக் கொண்டு வேதாத்தியயனம் செய்ய ஆரம்பிக்கின்றான்; ஓங்காரத்தில் பிர்மத்தையடைவோமென்று கருதுகிறவன் அங்ஙனமே பிர்மத்தையடைகிறான். (ஓங்காரபூர்வமாய் துவக்கப்பட்ட கிரியைகள் யாவும் பலிதத்தையடைவதால் ஓங்காரத்தை-பிர்மத்தைஉபாசிக்கவேண்டியது இன்றியமையாததென்பது, இந்த அநுவாகத்தின் முக்கிய தாத்பரியம்).

## ஒன்பதாவது அநுவாகம்.

(விக்ஞானத்தினால் ஸ்வாராஜ்யமாகிற பிர்மத்துவம் சம்பவிக்குமென்று கூறப்பட்டிருக்கின்றமையால் சிரௌதஸ்மார்த்தங்களுக்கு அநர்த்தயாவம் வருமோவென்று கருதி, அது உரித்தல்லவென்றும் அந்த கர்மங்களுக்குப் புருஷார்த்த சாதனமிருக்கிறதென்றும் இப்பொழுது நிரூபிக்கப்படுகிறது).

1. ரிதம் (ருஜுமார்க்கம் அதாவது சாஸ்திரீதியாகவும், கிரமமாகவும் நடக்கும்படியான நிச்சய புத்தி); ஸ்வாத்தியாயம் (வேதாத்தியயனம்), அர்த்தஞானத்துடன் அத்தியயனம் செய்கிறது; ப்ரவசனம் (மறவாமலிருக்கவும் தர்மவிர்த்திக்காகவும் அத்தியயனம் செய்தல், அல்லது பிர்மயக்ஞக்கிரியை); இந்த மூன்றும் அநுஷ்டிக்கப்படவேண்டும். ஸத்தியம் (சத்தியமாய்நடத்தல், பேசுதல்) கைக்கொள்ளப்படவேண்டியது. (சத்தியம்முதற்கொண்டு ஒவ்வொன்றுடனும் "ஸ்வாத்தியாய பிரவசனங்கள் அநுஷ்டிக்கப்பட-

வேண்டும்" என்று கூட்டிச் சொல்லப்படுகிறது; ஏனெனில், இவ்விரண்டும் கட்டாயம் அநுஷ்டிக்கப்படவேண்டியதென்பதைக் காட்டவேண்டிய நிமித்தம்); தபஸ் (கிருச்ராதி விரதங்கள் செய்யப்படவேண்டும்). தம: (பாஹ்யேந்திரிய நிக்ரஹம்) செய்யப்படவேண்டும். சம: (அந்தரிந்திரிய நிக்ரகம்) செய்யப்படவேண்டும். அக்நிகள் (அக்நிசம்பந்தமானகிரியைகள்) செய்யப்படவேண்டும். அக்நிஹோத்திரம் செய்யப்படவேண்டும்; அதிதிகளைப்பூஜிக்கவேண்டும்; மாநுஷம் செய்யவேண்டும் (லௌகிக வியவகாரம்) அதாவது வியவகாரமுதலான கர்மாக்களைச் செய்யவேண்டும்; பிரஜோத்பத்தி செய்யவேண்டும்; பிரஜன: (பிறப்பிவித்தல், அதாவது ருதுகாலத்தில் பார்யையினிடத்தில் பிரவேசித்தல்) செய்யவேண்டியது; ப்ரஜாதி (பௌத்திரோத்பத்தி—புத்திரனுக்கு விவாகம் செய்விப்பது முதலானது) நடத்தவேண்டும்; சத்தியமேனை கொள்ளற் பாலனவென்று 'ருதீதார்' கருதினர். தபஸே செய்யப்பட வேண்டுமென்பது 'பௌருசிஷ்டி' யினுள்ளக்கிடக்கை. ஸ்வாத்தியாயப்பிரவசனங்களை அநுஷ்டிக்கவேண்டியதென்றும், அதே தபஸ் என்றும் 'மோத்கல்யர்' கொள்கை.

## பத்தாவது அநுவாகம்.

(இப்பொழுது துவக்கப்படும் ஜபமானது, பிர்மவித்தியோத்பத்தி நிமித்தம் அத்தியயனம் செய்யப்படவேண்டிய மந்திரம்).

1. "நான் ஸம்ஸார விருக்ஷத்தினுடைய பிரேரயிதா (அந்தர்யாமியாயிருந்து நடத்துகிறவன்); ஒருமலையின் உச்சிபோல் என்னுடைய கீர்த்தி உயர்ந்திருக்கின்றது; பரிசுத்தமான ஞானத்தை (பிர்மத்தை) மேலான காரணமாக உடையவனாயிருக்கிறேன்; சூரியனிடமிருக்கின்ற அமிருதமான ஆத்மதத்துவம்போல் நான் ஆத்மாவினிடம் ஆத்மதத்துவமாகவிருக்கின்றேன்; பிரகாசமுள்ள தனம்போன்ற ஆத்மதத்துவமாக விருக்கின்றேன்; சோபனமான புத்தியுள்ளவனாயிருக்கிறேன்; மரணதர்மமில்லாதவனாயும், குறைவற்றவனாயுமிருக்கிறேன்." என்றது, பிர்மஞானியாகிய 'திரிசங்கு' என்ற ரிஷியின் வேதாநுவசனம் (ஆத்மைகத்துவவிக்ஞானப்ராப்திக்குரிய வசனம்). (இந்த மந்திரத்தை பிர்மவித்தியார்த்திகள் ஜபிக்கவேண்டும்)

## பதினொன்றாவது அநுவாகம்.

1. (வேதாத்தியயனம் செய்தபிறகு சிஷ்யனுக்குக் குரு செய்யும் உபதேசக்கிரமம் இப்பொழுது சொல்லப்படுகிறது. பிரம்ம விக்ஞானத்துக்குமுன் ஸ்ரௌதஸ்மார்த்த கர்மங்கள் நியமமாகச் செய்யப்படவேண்டுமென்கின்ற பொருளுமெடுத்துரைக்கப்படுகின்றது. கர்மங்களால் சம்ஸ்காரம் செய்யப்பட்ட விசுத்தஸத்துவமுடையவனுக்கே ஆத்மஞானமுண்டாகும். இங்கு ஞானோத்பத்தி நிமித்தம் செய்யப்படவேண்டிய நியமம் சொல்லப்படுகிறது. உபதேசம் எவ்விதமெனில்). வேதாத்தியயனம் செய்து, பிறகு குரு சிஷ்யனுக்கு ஆக்ஞாபிக்கின்றார்; ஸத்தியமுரை; தர்மவழியில் நட; அத்தியயனத்தினின்றும் பிரமாதத்தை அடையாதே (அதாவது அத்தியயனம் செய்யாமலிருக்காதே); குருவுக்கு தக்ஷிணை கொடுத்து அவரிடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்ட பிறகு, பிரஜையுண்டாக்கும் நூலை அறுக்காதே (அதாவது கல்யாணம் செய்துகொண்டு கிரகஸ்தாசிரமத்தில் பிரவேசியாமலிருக்காதே, சத்தியத்தினின்றும் பிரமாதத்தை யடையாதே; தர்மத்தினின்றும் பிரமாதத்தை யடையாதே; ஆத்மரக்ஷணத்தினின்றும் பிரமாதத்தையடையாதே; ஐசுவரியத்தினின்றும் பிரமாதத்தையடையாதே; ஸ்வாத்தியாய பிரவசனங்களினின்றும் பிரமாதத்தையடையாதே.

2. தேவ, பிதிரு கர்மங்களினின்றும் பிரமாதத்தை யடையாதே; மாதாவை தெய்வமாக பாவித்துக்கொண்டு அவர்களை உபாஸி; பிதாவை தெய்வமாக பாவித்து உபாஸி; குருவைத் தெய்வமாகபாவித்து உபாஸி; அதிதியைத் தெய்வமாகப்பாவித்து உபாஸி; எவைகள் அநிந்தியங்களோ அக்கர்மங்களைச் செய்; எவைகள் சிஷ்டாசார லக்ஷணங்களமையப் பெற்றிருக்கின்றனவோ அக்கர்மங்களைக் கைக்கொள்; மற்ற கர்மங்களைச் செய்யற்க; சுசரிதங்களாயுள்ள கர்மங்களைச் செய்; மற்றதைக் கொள்ளற்க.

3. எவர்கள் நமக்குள் சிரேயஸான பிராமணர்களோ அவர்களுக்கு வேண்டிய உபசாரம்புரி; கொடுப்பதை சிரத்தையுடன் கொடு; அசிரத்தையுடன் கொடாதே; ஸ்ரீயுடன் கொடு; லஜ்ஜையுடன் கொடு; பயத்துடன் கொடு; சிநேகத்துடன் கொடு;

4. எந்த கர்மத்திலாவது, விர்த்தியிலாவது உனக்கு ஆசங்கை நேரிடின் அவ்விர்த்தியில் கர்மத்தில் அக்காலத்துள்ள, அத்தேசத்துள்ள யோக்கியர்களாயும், குரூரமதியற்றவர்களாயுமுள்ள த்விஜர்கள் யாங்ஙனம் ஒழுகுகிறார்களோ அங்ஙனமே நீயும் நட; நீ செய்த கர்மம் தோஷத்தினால் யாதேனும் சம்பந்தப்பட்டிருப்பின் அவ்விஷயத்திலும் மேற்கண்டபடி பெரியோர்கள் சொற்படி நீயும் நட; இதுவே ஆதேசம் (விதி); இதுவே உபதேசம்; இதுவே வேதோபநிஷத் (வேதரகசியம்); இதுவே அநுசாஸனம் (ஈசுவர வசனம்); இது இங்ஙனமே உபாசிக்கப்படவேண்டியது; இதுவே உபாஸ்யம்.

## பன்னிரண்டாவது அநுவாகம்.

"ஸஹ நாவவது" என்றதொடக்கத்தின் சாந்திசொல்லப்படுகிறது. இதன் பொருள் முதல் அநுவாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. (பிரமசரிய, கிருகஸ்த, வானப்ரஸ்த, சந்நியாசம் முதலிய நான்கு ஆசிரமங்களுள்ளனு; ஒவ்வொரு ஆசிரமத்திலிருக்கின்றவர்களுக்கும் பிரமவித்தையில் அதிகாரம் உண்டு. உத்தமமான சிரேயஸாகிற மோக்ஷமானது, கேவலமாயிருக்கிற வித்தையினாலேயே சித்திக்கின்றது அதாவது கர்மத்தினாலன்று. கர்மங்களெல்லாம் சித்தசுத்தி நிமித்தம் என்று பாஷியக்காரர் கொள்கை. பிரதிபக்ஷியையும் எடுத்து வாதித்து முடிவில் சித்தாந்தம் செய்திருக்கிறார்).

சீக்ஷாவல்லி என்ற முதல் அத்தியாயம் முற்றிற்று.

உ

# பிர்மாநந்தவல்லி என்ற இரண்டாவது அத்தியாயம்.

## முதல் அநுவாகம்.

(இனிக் கூறப்புகும் பிர்மவித்தியா பிராப்திக் கிடையூறு நேரா வண்ணம் சாந்தி இங்கு சொல்லப்படுகிறது).

எங்களை (சிஷியர்களையும், குருவையும்) ரக்ஷிக்குக; எங்களுக்குப் போஜனம் செய்துவைக்குக; எங்களுக்கு வித்தியா விஷயத்தில் சாமார்த்தியத்தைத் தருக; தேஜஸ்விகளான எங்களால் பிர்மவித்தையை அறியப்பட்டதாகக் கடவது; எங்களுக்குள் ஒருவர்க்கொருவர் துவேஷபுத்தி யுண்டாகாமலிருக்கட்டும். (கர்மங்களுக்கு விரோதமின்றியுள்ள ஸம்ஹிதா முதலியன விஷயங்களான உபாசனைகள் சொல்லப்பட்டன; உபாதியுடன் கூடின ஆத்மாவைப் பற்றியும், வியாஹிருதிமூலமாயும் ஸ்வாராஜ்யபலவாயிலாகவும் எடுத்துரைக்கப்பட்டது; இப்பொழுது சம்சாரபீஜத்தை நாசப்படுத்த மார்க்கமிருக்கின்றதென்றும், அந்த பீஜமாகிற அக்ஞானத்தை யகற்றும் பொருட்டும், உபாதியற்ற ஆத்மதர்சனத்தின் பொருட்டும் இந்த வல்லி துவகப்படுகிறது. பிர்ம்மவித்தைக்குப் பிரயோஜனம், அக்ஞான நிவர்த்தி; பிறகு சம்சாரமில்லாமை; பிர்ம்மவித்தையில் பிரவிர்த்திக்கும் பொருட்டு முதலில் அதினுடைய பிரயோஜனம் எடுத்துவிரிக்கப்படுகிறது).

பிர்மத்தை யறிந்தவன் பரவஸ்துவையடைகிறான் (பிர்மமென்பது பிறகு சொல்லப்படுகிறது; பரவஸ்துவென்றால் பிர்மந்தான்; பிர்மத்தை யறிந்தவன் பிர்மமாகவே ஆகிறான் என்று தாத்பரியம்). இப்பொருளில் இந்த (அடியில்கண்ட) "சத்தியம் ஞானம் அநந்தம் பிர்மா" வென்ற ரிக்கு சொல்லப்பட்டிருக்கிறது; (அந்த பிர்மம் எவ்வகையுடைத்தெனின்) சத்தியமாயும், ஞானமாயும், அனந்தமாயும் இருக்கின்ற எந்தவஸ்துவுண்டோ அதுதான் பிர்மம். (சத்தியமெனின், எந்த வஸ்து எந்த ரூபமாக நிச்சயிக்கப்படுகிறதோ அந்த ரூபம் மாறுதலடையாமலிருந்தால் அந்த வஸ்து சத்தியவஸ்து; அதாவது எக்காலத்தும் எவ்விதத்தும் மாறாமலிருக்கின்ற வஸ்து. அநந்தமென்றால், எது ஒருவிடத்திலும் பிரிக்கப்படாமலிருக்கின்

றதோ அந்த வஸ்து; அதாவது, எது காலத்தினலாவது, தேசத்தினலாவது, வஸ்துவினலாவது அளக்கப்படாமல், அளவற்றதாயும் முடிவற்றதாயுமிருக்கிறதோ, அந்தவஸ்து). இந்தபிர்மம், மேலான ஆகாசத்தில் (இருதயாகாசத்தில்) இருக்கிறகுஹையில் (புத்தியாகிற துவாரத்தில்) இருக்கின்றதாக எவன் அறிகின்றனோ, அவன் அந்த சர்வக்ஞனை பிர்மரூபத்துடன் (பிர்மஸ்வரூபமாகவே ஆகி எல்லா போக்கியங்களையும் அனுபவிக்கின்றான். இப்படிப்பட்ட பிர்ம்மமாகிற ஆத்மாவிடத்திநின்றும், சப்தகுணமுள்ளதும், மூர்த்தத்திரவியங்களுக்குஇடங்கொடுக்கிறதுமான, ஆகாயம்(பரவெளி) உண்டாயிற்று. அந்த ஆகாயத்தினின்றும், சப்தம், ஸ்பரிசம் இவ்விரண்டுகுணங்களுடைய வாயு (காத்து) உண்டாயிற்று. அந்த வாயுவிநின்றும், சப்தம், ஸ்பரிசம், ரூபம் இம்மூன்று குணங்களையுடைய அக்நி (நெருப்பு) உண்டாயிற்று; அந்தஅக்நியிநின்றும், சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம் இந்நான்கு குணங்களுடைய அப் (ஜலம்) உண்டாயிற்று; அப்புவிநின்றும் சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் இவ்வைந்து குணங்களுடைய பிருதிவி (பூமி) உண்டாயிற்று; பிருதிவியிநின்றும் ஓஷதிகள் (மரம், செடி, கொடி முதலியன) உண்டாயிற்று; ஓஷதிகளிநின்றும் அன்னம் (உண்கப்படுகிறவஸ்துக்கள்) உண்டாயிற்று; அன்னத்திநின்றும், ரேதஸ்(புருஷவீரியம்) உண்டாயிற்று; அவ்வீரியத்திநின்றும், புருஷன் (தலை, கை, கால் முதலியன அவயவங்களோடு கூடியிராநின்வ மனுஷிப்பிராணி) உண்டானார்கள்; அத்தகைய விப்புருஷன் அன்னரசமயனயிருக்கின்றவன். அவனுக்கு இந்த சிரஸே சிரஸ், இந்த வலதுகை, வலது சிறகு அல்லது பக்கம்; இந்த இடதுகை, இடதுசிறகு அல்லது பக்கம் இந்த மத்திய தேகபாகம், ஆத்மா, (மத்திய பாகம்); இது (நாபிக்குக் கீழுள்ள பாகம்), வால் (பின்பக்கம்) இருப்பிடம்; இவ்விஷயத்தில் இந்த (அடியில்கண்ட) சுலோகம் சொல்லப்படுகிறது. (இனிச் சொல்லப்படப்போகிற பிராணாதிகளுக்கு சிரஸ், பக்கம் முதலாயின என்று கற்பிதமாய் வர்ணிக்கப்படுவதுபோல், இந்த ஸ்தூல சரீரபுருஷனுக்கும், (அன்னமயகோசத்துக்கும் வர்ணிக்கப்பட்டது).

## இரண்டாவது அநுவாகம்.

"பிரதிவியை ஆசிரயித்துக்கொண்டிரா நின்ற பிரஜைகளெல்லாம் அன்னத்தினின்றும் உண்டாயிற்று; அன்னத்தினலேயே உஜ்ஜீவிக்கின்றன; முடிவில் அன்னத்தையே அடைகின்றன. ஏனெனில், எல்லா பூதங்களுக்கும் அன்னம் பிரதானமாக விருக்கின்றது (காரணமாயிருக்கிறது); ஆதல்பற்றி அது எல்லோருக்கும் ஔஷதம் (மருந்து)" (என்பது சுலோகத்தின் பொருள்). "எவர்கள் அன்னத்தைப் பிர்மமாக, அதாவது நாம் அன்னத்திலிருந்து உண்டானோம், அதனால் பிழைத்திருக்கின்றோம், அதிலேயே செல்லப் போகிறோம்" என்றுகருதி, உபாசிக்கின்றார்களோ, அவர்களெல்லா அன்னத்தையும் அடைகின்றார்கள் (ஸ்தூல சரீரம் பிர்ம்மமல்ல; அங்ஙனம் நினைத்தால் அன்னம் மாத்திரம் கிடைக்கும், வேறு மோக்ஷாதிபலம் கிடைக்காதென்பது பொருள்).

எது உண்கப்படுகின்றதோ, அல்லது எதைப்பூதங்கள் உண்கிறதோ அது அன்னமென்று பெறப்படுகிறது. (அன்னமயம் முதல் ஐந்து கோசங்களையும் தீட்டிக் காட்டி, இவைகள் அக்ஞானத்தால் ஆத்மாவாக கற்பிக்கப்படுகின்றனவே யன்றி உண்மையாகவில்லையென்றெடுத்து விஸ்தரிக்கவேண்டியதற்காக, மென்மேலும் பிராணமயாதி கோசங்கள் எடுத்துச் சொல்லப்படுகின்றன). இந்த அன்னமயத்தைக் காட்டிலும் வேறாயும் உள்ளிருப்பதாயுமுள்ள பிராணமய ஆத்மா (தேகம், கோசம்) இருக்கிறது; இந்த பிராணமயத்தினல் (துருத்தி (வாயுவினற்போல்) அன்னமய சரீரம் நிறம்பியிருக்கிறது; அது, பிராணமய சரீரம். இப்பொழுதுபுருஷாகிருதியை அடைந்திருக்கிறது; யாங்ஙனமெனில், அன்னமயத்தினுடைய ஆகிருதியை அநுசரித்திருக்கிறது; அதாவது சொந்தத்தில் ஆகாரமில்லை); (அதற்கு, இந்தப்படி சிரஸ் முதலியன கற்பிக்கப்படுகின்றன). பிராணவாயு—சிரஸ்; வியானவாயு—வலதுபக்கம்; அபானவாயு—இடதுபக்கம்; ஆகாசமென்ற சமானவாயு—மத்தியபாகம்; பிரதிவி என்ற—உதானவாயு—அடிப்பக்கம்; இவ்விஷயம் மேற்கூறப்புகும் சுலோகத்தால் நன்கு விளங்கும்.

## மூன்றும் அநுவாகம்.

"தேவர்கள் (அக்நிமுதலியன; அத்தியாத்மமாகப் பொருள்படும் பொழுது, இந்திரியங்கள்), பிராணனையநுசரித்து (வாயு ஆத்மகமாகயிருந்து) தத்தம் தொழிலை நடாத்துகின்றன; (அதாவது வாயுவம்சம் இன்றேல் தத்தக்தொழில் நடை பெறாது); மேலும் மனிதர்களும், பசுக்களும் பிராணனைக் கொண்டு பிழைத்திருக்கின்றார்கள்; பிராணன் பிராணிகளுடைய ஆயுள்; ஆதல்பற்றி அது எல்லோருடைய ஆயுளாகச் சொல்லப்படுகிறது" என்பது. பிராணனை இவ்வாறறிந்து யார் உபாஸிக்கின்றனரோ அவர்களுக்குப் பூர்ணாயுளுண்டு (அபமிருத்தியுவில்லை). பிராணமயகோசம், முந்தின அன்னமயத்தின் சரீரசம்பந்தமான ஆத்மா. இந்தப் பிராணமயத்தைக் காட்டிலும் வேறாயும் அந்தர்க்கதமாயுமுள்ள மனோமய கோசமிருக்கிறது; இதனால் முந்திய பிராணமயம் நிரம்பியிருக்கிறது; இதனுடைய ஆகிருதி முந்தியதை அனுசரித்திருக்கிறது; இதற்கு யஜுர்வேதம்—சிரஸ்; ரிக்குவேதம்—வலதுபக்கம்; ஸாமவேதம்—இடது பக்கம்; ஆதேசம்—(வேதத்திலுள்ள விசேஷ பாகம்) மத்தியபாகம்; அதர்வணவேதம்—அடிப்பக்கம்; இவ்விஷயம் மேற்கூறப்புகும் சுலோகத்தால் விளங்கும்.

## நான்காம் அநுவாகம்.

"எதைக்கடக்கமுடியாமல் வாக்குகள்மனதுடன்திரும்பிவந்து விட்டனவோ அந்தபிர்மத்திலுடைய ஆநந்தத்தையறிந்தவன் எவ்வித்திலும் பயப்படமாட்டான்" என்று; இந்த மனோமயகோசம் முந்திய பிராணமயத்தின் சரீர சம்பந்தமான ஆத்மா. இதைக்காட்டிலும் வேறாயும் அந்தர்க்கதமாயுமுள்ள விக்ஞாநமய கோசமிருக்கிறது. இதனால் முந்திய மனோமயம் நிறம்பியிருக்கிறது. இதன் ஆகிருதி முந்தியதைப்பற்றியிருக்கிறது.

இதற்கு சிரத்தா—சிரஸ்; (அதாவது விக்ஞானத்துடன் கர்மம் செய்யவேண்டும்; அக்கர்மத்துக்கு சிரத்தா முக்கியம்; ஆதல்பற்றியே சிரத்தா சிரஸ்போல் முதன்மையாகவிருக்கிறது); ரிதம்—வலதுபக்கம்; சத்தியம்—இடதுபக்கம்; யோகம் (புத்தி, அல்லது

சமாதானம்—மத்தியபாகம் ; மஹஸ்தத்துவம் (பரபிரம்மனிடமிருந்து முந்திஉண்டான தத்துவம்)—அடிப்பக்கம், (விக்ஞானாதிகளுக்குக்காரணம்). இவ்விஷயம்இனிக்கூறப்படும் சுலோகத்தால் இனிது விளங்கும்.

## ஐந்தாவது அநுவாகம்.

"விக்ஞானமுள்ளவன் யக்ஞத்தைச் செய்கின்றான் ; மற்ற தர்மங்களையும் செய்கின்றான்; தேவர்கள் விக்ஞானத்தை (துவக்கத்திலுண்டான விக்ஞானத்தை) பிர்மமாக உபாசிக்கிறார்கள் ; அவ்விதமறிந்தவன் பிரமாதத்தை யடையமாட்டான் ; பாபங்களையெல்லாம் போக்கடித்து எல்லாக் காமங்களையுமடைவான்" என்று.

இது முந்தின மனோமயத்தின் சரீரசம்பந்தமான ஆத்மா. இதைக்காட்டிலும் வேறாயும் அந்தர்க்கதமாயுமுள்ள, ஆனந்தமய கோசமிருக்கிறது. இதனால் முந்திய விக்ஞானமய கோசம் நிறம்பியிருக்கிறது. இதன் ஆகிருதிமுந்தியதை அனுசரித்திருக்கிறது; இதற்கு, பிரியம் (ஒருவஸ்துவைப்பற்றும் ஆசை) சிரஸ் (ஆனந்தத்துக்கு பிரியம் முக்கியமாயிருப்பதால் சிரஸ் முதன்மையானது); மோதம் (வஸ்து லாபத்தினால் உண்டாகும்சந்தோஷம்)—வலது பக்கம்; பிரமோதம் (அதிசந்தோஷம்)—இடது பக்கம் ; ஆனந்தம் (சுகானுபவம்)—மத்தியபாகம்; பிர்மம் (இவைகளுக்குக் காரணமாயிருக்கின்ற பரபிர்ம வஸ்து)—அடிப்பக்கம்; இவ்விஷயம் இனிக்கூறப்புகும் சுலோகத்தாலினிது விளங்கும்.

## ஆறும் அநுவாகம்.

"பிர்மத்தை இல்லையென்றறிகிறவன், அஸத்தாக (அஸாதுவாக) இருக்கிறான்; உண்டு என்று நினைக்கிறவன் ஸத்தாக (ஸாதுவாக) இருக்கிறான்" என்று.

இது முந்தின விக்ஞானமயத்தினுடைய சரீரசம்மந்தமான ஆத்மா. பிறகு: இப்பொழுது இதையனுசரித்து சிஷ்யன் கேட்க வேண்டிய கேள்விகளிருக்கின்றன ; அவைகளாவன:—"அவித்வானும் (பிர்மஞானமில்லாதவனும்) இவ்வுலகத்திலிருந்து கிளம்பி அந்த லோகத்தை (பரமாத்மாவை) சேருகிறானா? அல்லது, வித்வான் மட்டும் சேருகிறானா" (இந்தக்கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியதற்காக மேல் கிரந்தம் ஆரம்பிக்கப்படுகிறது).

அந்த ஆத்மா, மிகுதியாக ஆவோம், உண்டாவோம், என்று இச்சித்தார்; சிருஷ்டிக்கிரமத்தையும், சிருஷ்டிக்கப்பட வேண்டிய ஜகத்தையுண்டுபண்ணுகிற விதம் முதலானதைப்பற்றியும் யோசித்தார்; அங்ஙனம் யோசித்து, இதோகாணப்படுகின்றவை, இன்னும் எவை எவையுண்டோ அவைகள் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார்; அங்ஙனம் சிருஷ்டித்து அவைகளின்கண்ணே பிரவேசித்தார். (இவ்விடத்தில் அவரே ஜகத்தாகப் பரிணமித்திருக்குங்கால் அவர்வேறாகவும், ஜகத் வேறாகவும் காட்டி அதில் அவர் பிரவேசித்தாரென எங்ஙனம் கூறப்பாலதாகும்? அசம்பாவிதமென்று வாதித்து கடைசியில் பாஷியத்தில் சமாதானம் சொல்லப்பட்டிருக்கிறது. அஃதியாதெனில்:—சர்வ விகற்பத்திற்கும் ஆஸ்பத மாயிருக்கின்ற நிர்விகல்பவஸ்துவாகிய பிர்மமானது பிராணிகளின் குஹையில் (பஞ்சகோசங்களின் வழியாய்) தோற்றப்படுகிறதென்பதை நிரூபிக்கவேண்டி ஜலத்தில் பிரதிபிம்பத்தை நாம் பார்க்குங்கால், சூரியன் ஜலத்தில் பிரவேசித்திருப்பது போல், பிராணிகளிடத்தில் அவர் பிரவேசித்திருப்பதாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறதேயன்றி, ஜகத்வேறுபோலும்தான்வேறுபோலும், வீட்டில்ஓர்மனிதன் பிரவேசிக்கிறதுபோல ஜகத்தில் தான் பிரவேசித்ததாக பொருள்படுத்தக்கூடாது).

அப்படிப் பிரவேசித்து மூர்த்த வஸ்துக்களாயும், அமூர்த்த வஸ்துக்களாயும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய வஸ்துக்களாயும், அப்படியல்லாத வஸ்துக்களாயும், ஆசிரய வஸ்துக்களாயும், அநாசிரய வஸ்துக்களாயும், புத்தியுள்ளவைகளாயும், இல்லாதவைகளாயும், வியவகாரசம்பந்தமான சத்தியவஸ்துவாயும், அச்சம்பந்தமான பொய் வஸ்துவாயும், பாமார்த்த ஸத்தியவஸ்துவாயும், மற்றுமுள்ள யாவுமாயு மாகிவிட்டது. இதுவே ஸத்தியவஸ்து வென்று சொல்லப்படுகிறது. இவ்விஷயத்தில் இதனடியில் வரும் மந்திரம் உளது.

## ஏழாம் அநுவாகம்.

"இந்த ஜகத், சிருஷ்டிக்கப்படு முன்னர் அஸத்தாக விருந்தது. (நாமரூபவிசேஷத்தால் விகாரப்படாமல், அவ்வியாகிருத ரூபமாய், பிர்மமாகவிருந்தது); அதினின்றுப் ஸத் உண்டாயிற்று (நாமரூப விசேஷத்தால் விகாரப்பட்ட வியாகிருதரூபமான ஜகத் உண்டாயி

ற்று); அந்த அஸத், தன்னை ஸத்தாகத் தானே செய்துகொண்டது; ஆகையால் அது (பிர்மம்) 'சுகிருத' மென்று சொல்லப்படும் (சுகிருதமென்றால் சுவயம் கர்த்தா, அல்லது புண்ணியம்)." என்று.

இது (இந்த பிர்ம வஸ்து) சுகிருதமாகவிருப்பதால், ரஸமாய் (மாதுர்யரஸபதார்த்தமாய்) இருக்கிறது; அந்த ரஸத்தை யடைந்தவனுக்கு ஆநந்தமுண்டாகும்; அஃது ஹிருதயாகாசத்தில் ஆநந்தரூபமாக விருக்கிறது. அஃது அங்ஙன மிராவிடில் பிராணாபாந விர்த்திகளை உண்டுபண்ணுவது யார்? அது உலகத்தைச் சுகப்படுத்துகிறது; எப்பொழுது ஒரு ஸாதகன் இத்தகைய காணப்படாததாயும் சரீரமில்லாததாயும், இன்னதென்று குறிப்பிட்டுப்பகரக்கூடாததாயும், குறிப்பிட இருப்பிடமில்லாததுமாயிருக்கிற ஆத்மாவிடத்தில் அச்சமற்று (தைரியமாய்) தன்னை நிலைநாட்டுகிறானோ அப்பொழுது அவன் அபயத்தை அடைகிறான்; எப்பொழுது ஒருவனுக்குத் தான் வேறு ஆத்மாவேறு என்ற பேதபுத்தி உண்டாகிறதோ, அப்பொழுது அவனுக்குப் பயமுண்டு; அவன்விவேகியாகவிருந்தபோதிலும் இவ்விதம் பேதமாய் எண்ணுகிறவனுக்குப் பயமுண்டு (அதாவது ஜகத் யாவும் பயமுள்ளது). இவ்விஷயத்தில் இதனடியிற்கண்ட சுலோகமுளது.

## எட்டாவது அநுவாகம்.

---

"அவரிடமிருந்து உண்டாகிற பயத்தினால் காற்றுவீசுகிறது; சூரியன் உதயமாகிறான்; அக்நியும்இந்திரனும், ஐந்தாவதாகிய மிருத்யுவும் அவரவர் காரியங்களைச் செய்கின்றார்கள்" என்று.

(இவர்களெல்லோரும் சுவயம் ஈசுவரனாகவே விருந்தாலும் ஓர் பயத்தால் ஏவப்படுகிறார்கள்; அப்பயத்திற்குக் காரணம் ஆநந்தமாகிய பிர்மவஸ்து; அந்த ஆநந்தம் எப்படிப்பட்டதென்று இங்கு சொல்லப்படுகிறது). ஆநந்தம் இப்பொழுது விசாரிக்கப்படுகிறது; (விஷய, விஷயிசம்பந்தமாயிருக்கிற லௌகிக ஆனந்தமா? அல்லது சுவாபாவிக மாகவுள்ள பிர்மாநந்தமா? வென்று. பிர்மாநந்தம் தெரியவேண்டிய நிமித்தம், முதலில் உத்கிருஷ்டமாயும், பாஹ்ய அத்தியாத்மக சாதன சம்பத்தி நித்தியமாயுமிருக்கிற லௌகிக ஆநந்தம் எடுத்துக் கூறப்படுகிறது; பிரசித்தமாகவுள்ள இதையறிவதால், ஒழிவடைந்த விஷய புத்திக்கு கோசாமாயிருக்கிறபிர்மாநந்

தத்தை யறியக்கூடும்; லௌகிக ஆநந்தமும் பிர்மாநந்தத்தினோர் அம்சம்; மனுஷ்யாநந்தம்முதல் துவக்கி அதற்குமேல் உத்கிருஷ்டமான ஒவ்வொரு ஆனந்தத்தையும் எடுத்துக்காட்டி முடிவில் பிர்மானந்தம் சொல்லப் படுகிறது). யௌவனம், சாது, வேதாத்தியயனம், ஏவல், திருட தைரியம், பலம், இப்பூமி முழுவதுமாளும்படியான சக்தி, பூர்ண திரவிய முதலியனவுடைய வோர்மனிதனுடைய ஆநந்தம் மானுஷ்யாநந்தமென்று கூறப்படும்; இவ்வானந்தம் 100 கொண்டது மனுஷ்ய கந்தர்வனுடைய ஆனந்தம்; இவ்வானந்தம் வேதார்த்தத்தை யறிந்தவனும், காமத்திற் கட்டுண்டுழலாதவனுமிருக்கிற பிர்மவித்துக்குமுண்டு; (இங்ஙனம் இனிக்கூறப்படும் ஒவ்வொரு ஆநந்தமும் பிர்மவித்துக்கு முண்டு); (மனிதனாயிருந்த போதிலும், கர்மவித்தியா விசேஷத்தினால் அந்தர்தானாதிசக்தியுள்ளவனும், சூக்ஷ்மகாரிய காரணனும், கந்தர்வத்துவத்தை யடைந்தவனுமான மனிதனுக்கு, மனுஷ்ய கந்தர்வனென்றுசொல்லப்படும்; இப்படிப்பட்டவனுடைய சித்த ப்ரஸாதம் விசேஷாநந்த கரமாகவிருக்கும்). இப்படிப்பட்ட ஆனந்தம் 100-கொண்டது தேவ கந்தர்வனுடைய (ஜாதி கந்தர்வனுடைய) ஆனந்தம்.

நீடூழிகாலம் பிதிர் லோகத்திலுள்ள பிதிருக்களுடைய ஆனந்தம், இதை 100-மடங்குகொண்டது; ஸ்மார்த்தகர்ம விசேஷத்தால் தேவர்களின் ஸ்தானத்தில் வந்தவர்களுடைய ஆனந்தம் 100-மடங்கு கொண்டது; அக்நிஹோத்திராதி வைதிக கர்மத்தால் தேவத்துவத்தை யடைந்தவர்களுடைய ஆனந்தம் 100-மடங்கு கொண்டது; ஹவிஸைப் புசிக்கிற 33-தேவர்களுடைய ஆனந்தம் அதில் 100-மடங்கு கொண்டது; (8 வஸுக்கள், 11 ருத்திரர்கள், 12 ஆதித்தியர்கள் 1 இந்திரன், 1 பிரஜாபதி, ஆக 33 தேவர்கள்); அதில் 100 - கொண்டது, மேற்படி தேவர்களுக்குப் பதியாயுள்ள இந்திரனுடைய ஆனந்தம்; அதில் 100-கொண்டது, இந்திரனுக்கு குருவாயுள்ளபிரஹஸ்பதியினுடைய ஆனந்தம்; அதில் 100-கொண்டது பிரஜாபதியுனுடைய (திருலோக சரீரியாகிய, விராட்புருடனுடைய) ஆனந்தம்; அதில் 100-கொண்டது, பிர்மாவினுடைய (ஸூத்திராத்மாவுடைய) ஆனந்தம்; அந்த பிர்மம் புருஷனிடத்தில் இருதய குகையிலிருக்கிறது; ஆதித்யனிடத்திலிருக்கிறது; இப்படி யறிந்தவன் இந்த லோகத்தை (தேகத்தை) விட்டு, இந்த

அன்னமயமான ஆத்மாவைக்கடக்கிறான்; (அன்னமயகோசத்தை முதலில் அறிந்து, அதை ஆத்மாவல்லவென்று தள்ளிவிடுகிறான்). அப்படியே, பிராணமயம், மனோமயம், விக்ஞானமயம், ஆனந்தமயம் இவைகளைக்கடக்கின்றான்; இவ்விஷயத்தில் அடியில் கண்ட சுலோகம் இருக்கிறது.

## ஒன்பதாவது அநுவாகம்.

"எதினிடத்தி நின்றும் வாக்குகள் மனத்துடன் (விக்ஞானத்துடன்) எட்டாமல் திரும்பிவிடுகின்றனவோ, அந்தபிர்மத்தை யறிந்த வித்துவானுக்கு எவ்விதத்தும் பயமில்லை" என்று. இப்படிப்பட்ட வித்துவானை, புண்ணியமியற்றலும் பாபம் ஈட்டலும் அவதிக்குட்படுத்தமாட்டாது; ஏனெனில், இப்படி யறிந்த வித்துவான் புண்ணியம் பாபம், இவ்விரண்டையும் தன்னுத்மாவாகப் பார்க்கிறான்; அதாவது, தான்மாத்திரம் எஞ்சிநின்று, மேற்படி இரண்டையும் துவம்சம் செய்கிறான்; இதுதான் உபநிஷத் (ரஹஸியம்). "ஸஹநாவவது" சாந்தி சொல்லப்படுகிறது.

பிர்மாநந்தவல்லி என்ற இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

உ

# பிருகுவல்லி என்ற மூன்றாவது அத்தியாயம்.

## முதல் அநுவாகம்.

"ஸஹநாவவது" என்ற சாந்தி சொல்லப்படுகிறது; (மேற்சொன்னபடி அறிந்தவனுக்கு) புண்ணிய பாபங்கள் ஜன்மாரம்பத்தைப் பயக்கமாட்டாவென்று முன்வல்லியில் விவரிக்கப்பட்டு பிரம வித்தியா முடிவெய்தியது. இப்பொழுது அந்த பிர்மவித்தைக்குச் சாதனமான தபஸ் (ஏகாக்கிரசித்தத்தோடு பரியாலோசனை செய்து பாஹ்யேந்திரியங்களை அடைக்கி, பிரமவிசாரத்தில் புத்தியை நிலை நிறுத்துவது) கூறப்படுவதோடு, அன்னமயாதி விஷயங்களும் உபாசனைகளும் சொல்லப்படுகின்றன).

(அடியில் கண்ட கதை வித்தியாஸ்துதியின் பொருட்டு சொல்லப்படுகிறது); வருணனுடைய புத்திரன், பிருகுவென்ற ஓர் ரிஷி தன் பிதாவிடம் சென்று, "பிர்மத்தைப்பற்றி எனக்கெடுத்துரைக்க வேண்டு"மென்று கேட்டார்; (பிதா) சரீரம், பிராணன், சக்ஷுஸ், சுரோத்திரம், மனஸ், வாக் முதலியன பிர்மத்தையறியும் வழிகள்; மேலும், பிர்மத்தின் லக்ஷணமென்னவெனில், இந்தபிர்ம்மாதிஸ்தம்ப பரியந்தமுள்ள பூதங்கள் எதினின்று முண்டாயிற்றோ, உண்டானவை எதனால்பிழைத்திருக்கின்றனவோ, நாசகாலத்தில் எதனிடஞ் சென்று அபயமடைகின்றனவோ, அது பிரமம்; (இப்படிப்பட்ட பிர்மத்தை, சரீராதிவாயிலாக அறியவேண்டுமென்பது தாத்பரியம்); அதை பிர்மமென்றறிய இச்சைகொள்க. இதைக்கேட்ட பிருகு தபஸ்செய்யத் துவக்கினார் (ஏகாக்கிரசித்தனாகவிருந்து ஆலோசித்தார்).

## இரண்டாவது அநுவாகம்.

அன்னத்தை பிர்மமென்றறிந்தார்; ஏனெனில், அன்னத்தினாலிப் பூதங்களுண்டாயின; அதனால் பிழைத்திருக்கின்றார்கள்; அதிலேயே சென்றடைகிறார்கள். இங்ஙனமறிந்து, மீண்டும் யோசித்துப் பார்த்து (அன்னம் உத்பத்தியாகி நாசமடையுந் தன்மையுளதாதலால் அதுபிர்மமாகமாட்டாது என்று ஆசங்கையுற்று), மீண்டும்பிதாவிடத்திற்சென்று, "பிர்மத்தைப்பற்றிக்கூறுக"வென்று

வினவினர். (பிதா) தபசினால் பிர்மத்தை யறியவிச்சையுறு; அந்த பிர்மம் (அதாவது, தபசினாலேயே பிர்மத்தை யறியவேண்டி. நன்கு விசாரிக்கப்புகின் இனிதுவிளங்கும்). இதனைக்கேட்ட பிருகு மீண்டும் பரியாலோசிக்கலாயினார்.

## 3, 4, 5, 6 அநுவாகங்கள்.

பிராணனை பிர்மமென்றறிந்தார்; இவ்வாறு மனம், விக்ஞானம், ஆநந்தம் இவைகளை யொன்றன்பின்னொன்றாக வறிந்தார். (அதற்குத்தக்கபடி இந்நான்கு அநுவாகங்களையும் இரண்டாவது அநுவாகம்போல் பொருள்படுத்தவேண்டும்). (ஆறாவது அநுவாகத்தினிறுதியில் சுருதி சொல்லுகிறதாவது). இந்த பார்க்கவீ, வாருணீ வித்தையானது, இருதயாகாச குஹையில் பிரதிஷ்டிதமாயிருக்கிறது. (அதாவது அந்தவிடத்திற் காணப்படும் பிர்மத்தைப் பற்றி இங்கு விசாரிக்கப்படுகிறது) இவ்விதமறிந்தவன் பிர்மமாகவே ஆகிவிடுகிறான், அன்னமுள்ளவனாகவும், அன்னத்தைப் புஜிக்க திப்தாக்கியுள்ளவனாகவும், மஹா புருஷனாயும், பசுக்கள், பிரஜை, கீர்த்தி இவைகளுடன் கூடியவனாகவும் ஆகிவிடுகிறான்.

## ஏழாம் அநுவாகம்.

(அன்னத்தின் வாயிலாக பிர்மவிக்ஞானம் உண்டாவதால்) அன்னத்தை நிந்திக்கக் கூடாது; அதுவிருதமாக உபதேசிக்கப்படுகிறது; பிராணனே அன்னமயமாயும், சரீரம் அன்னத்தைக் கொடுக்கிறதாயுமிருக்கிறது; பிராணன் சரீரத்தில் பிரதிஷ்டிதமாயும், சரீரம் பிராணனிற் பிரதிஷ்டிதமாயுமிருக்கிறது (ஒன்றிற்கு மற்றொன்று ஆதாரம்); ஆனதால் அன்னம் அன்னத்திலே பிரதிஷ்டிதமாகவிருக்கிறது; இப்படி யறிந்தவன் ௬-வது அநுவாகத்திற் கூறியவாறு பிரஜை, பசுக்கள், கீர்த்தி இவைகளுடன் கூடியவனாக ஆகிவிடுகிறான்.

## எட்டாவது அநுவாகம்.

அன்னத்தைப் புறக்கணித்தல் கூடாது; அது விருதம்; ஜலமே அன்னம்; ஜோதிஸ் அன்னத்தைக் கொடுக்கிறது; ஜலத்தில் ஜோதிஸும், ஜோதிஸில் ஜலமும் பிரதிஷ்டிதமாயிருக்கிறது.

ஆனதால், அன்னம் அன்னத்திற் பிரதிஷ்டிதமாக விருக்கிறது; இப்படியறிந்தவனுக்குப் பலம் முன் அநுவாகத்திற் கூறியவாறு.

## ஒன்பதாவது அநுவாகம்.

அன்னத்தைப் பருக்கச் செய்யவேண்டும் (பற்பல விதமாக உபாஸிக்கவேண்டும்); அது விருதம்; பிருதிவியே அன்னம்; ஆகாசம் அன்னத்தைக் கொடுக்கிறது; அதில் இதுவும், இதில் அதுவும் பிரதிஷ்டிதம்; இப்படியறிந்தவனுக்குப் பலம், முன் அநுவாகத்திற் கூறியது போன்று,

## பத்தாவது அநுவாகம்.

1. வீட்டில் வசிக்க வந்த எவனையும் கிடத்தக் கூடாது (வாஸம் கொடுக்கும் பொழுது அன்னமும் அவசியம் கொடுக்கவேண்டியது). இது விருதம்; ஆனதால், எவ்விதமாவது ஏராளமான அன்னத்தைச் சம்பாதிக்கவேண்டும்; அன்னம் கேட்டவனுக்கு இல்லையென்று சொல்லக்கூடாது; சித்தமாயிருக்கிறதென்று சொல்லவேண்டும். (அன்னத்தினுடைய மாகாத்மியம் இன்னும்சொல்லப்படுகிறது) எவ்விதமெக்காலத்தில் தானம்செய்கிறானோ, அவ்விதம் அவ்வக் காலத்தில் அதற்குத் தகுந்தபலம், கொடுக்கிறவனுக்குக் கிடைக்கும்; யாங்ஙனமெனில், பால்யப்பருவத்தில் முக்கிய விர்த்தியோடு அன்னம் கொடுத்தால் அப்படியே இவனுக்குத் திரும்பக் கிடைக்கும்; அங்ஙனம் மத்திம வயதிலும், வார்த்திக வயதிலும் இவ்விதம் செய்தவனுக்குப்பலம் மேற்கூறியது போல. (இப்பொழுதுபிர்மத்துக்கு உபாஸநாப்பிரகாரம் சொல்லப்படுகிறது).

வாக்கில் க்ஷேம ரூபமாக பிர்மம் பிரதிஷ்டிதமாயிருக்கிறதென்றுபாஸிக்கவேண்டும்; (க்ஷேமம், உபாத்த பரிலக்ஷணம்); பிராண வாயுவிடத்திலும், அபானவாயுவிடத்திலும், யோகமாயும், க்ஷேமமாயும், பிரதிஷ்டிதமாயுமிருக்கிறதென்றுபாஸிக்கவேண்டும் (யோகமென்றால், அநுபாத்தஸ்ய உபாதானம்); ஹஸ்தங்களில் கர்மரூபமாக விருக்கிறதென்று உபாஸிக்கவேண்டும்; பாதங்களில் கெதிரூபமாகவும், வாயுவில் விமுக்தி ரூபமாயுமுபாஸிக்கவேண்டும்; இவை மனுஷ்யசம்பந்தமான ஞானங்கள். இனித்தேவசம்பந்த ஞாந

ங்கள் :—மழையில் திருப்தாத்மாவாகவும், மின்னலில் பலரூபமாகவும், பசுக்களில் யசோரூபமாகவும், நக்ஷத்திரங்களில் ஜோதி ரூபமாகவும், உபஸ்தத்தில் புத்திராம்ருதமாகிய ஆநந்த ரூபமாகவும் ஆகாசத்தில் ஸர்வமாகவும் பாவித் துபாஸிக்கவேண்டும்; இவ்வாறு பிரதிஷ்டா குணோபாஸனத்தால், பிரதிஷ்டாவானாக (பிரஸித்தனாக) ஆகிவிடுகிறான். பிர்மத்தை, மஹத்துவ குணமாக உபாஸித்தால் மஹானாக ஆகிவிடுகிறான்; அதை மனமாக உபாஸித்தால் மனன சாமார்த்தியமுள்ளவனாகிவிடுகிறான்; அதை "நம" என்று உபாஸித்தால் வணக்க குணமுள்ளவனாகிவிடுகிறான்; காமங்களெல்லாம் அவனுக்கு வணங்கிவருகின்றன; அதை பிர்மமாக உபாஸித்தால், பிர்மகுணமுள்ளவனாகிறான்; பிர்மத்தினுடைய பரிமரமாகிய வாயுவை ஆத்மாவான ஆகாசமாக உபாஸித்தால், அவனுடைய சத்துருக்களும், அப்பிரியர்களும் நாசமடைகிறார்கள்; அந்த பிர்மம் இந்தபுருஷனிடத்திலும், ஆதித்தியனிடத்திலுமிருக்கிற ஒருவனே.

இப்படி யறிந்தவன் இந்த லோகத்தை விட்டு, அன்னமயாதிகளை வரிசையாய்க் கடந்து, காமாந்நீயாகவும், (எல்லா இச்சைகளையும் அடைந்தவனாகவும்), காமரூபியாகவும், இந்த பூராதி லோகங்களிற் சஞ்சரித்தும், இந்த அடியில்கண்ட ஸாமத்தை காநம்பண்ணிக்கொண்டும் சுகமாயிருப்பான் (ஸாமமென்றால், பிர்மம்; எல்லாம் பிர்மமென்று அறிந்து கிருதார்த்தனாயிருக்கிறான்).

(அந்த ஸாமம்யாதெனில்) "அஹோ (ஆச்சரியம்) (3-தடவை); நான் அன்னம் (3-தடவை); நான் அன்னாதன் (3-தடவை); நான் சுலோககிருத் (சேதனமுள்ளவன்); நான் ஜகத்துக்கு முந்தி உண்டானவன்; தேவர்களுக்கும் முந்தினவன்; பிராணிகளுக்கு மத்தியிலிருக்கப்பட்டவன்; யார் என்னை அன்னமாக பாவிக்கிறானோ, அவன் என்னை ரக்ஷிக்கிறான்; நான் அன்னத்தை உண்கிறவனுக்கு அன்னங்கொடுக்கிறேன் (இதனால் அன்னமும், போக்தாவும் எல்லாம் நானே என்பது பொருள்); நான் எல்லா புவனமாயுமிருக்கிறேன்; நான் ஆதித்தியன்போல் ஜோதியுள்ளவன்." இப்படி யறிந்தவனுக்குப் பலம் முன்சொன்னதுபோலவே.

## தைத்திரீயோபநிஷத் முற்றிற்று.

உ

𑌓𑌂 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍 |

# க்ருஷ்ணயஜுர்வேதீய கடோபநிஷத்.

𑌶𑌾𑌂𑌤𑌿𑌃 |

𑌓𑌂 | 𑌸𑌹 𑌨𑌾𑌵𑌵𑌤𑍁 | 𑌸𑌹 𑌨𑍌 𑌭𑍁𑌨𑌕𑍍𑌤𑍁 𑌸𑌹 𑌵𑍀𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑌵𑌾𑌵𑌹𑍈 | 𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿 𑌨𑌾𑌵𑌧𑍀𑌤𑌮𑌸𑍍𑌤𑍁 𑌮𑌾 𑌵𑌿𑌦𑍍𑌵𑌿𑌷𑌾𑌵𑌹𑍈 ||

𑌓𑌂 𑌶𑌾𑌂𑌤𑌿𑌃 𑌶𑌾𑌂𑌤𑌿𑌃 𑌶𑌾𑌂𑌤𑌿𑌃 ||

(இனிச் சொல்லப்படப் போகிற பிர்ம்மவித்தியா பிராப்திக்கு இடையூறு நேராவண்ணம் சாந்தி சொல்லப்படுகிறது).

எங்களை (சிஷியனையும், குருவையும்) ரக்ஷிக்கட்டும், எங்களுக்கு போஜனம் செய்து வைக்கட்டும்; எங்களுக்கு வித்தியா விஷயத்தில் சாமர்த்தியத்தைக் கொடுக்கட்டும்; தேஜஸ்விகளான எங்களால் பிர்ம்மவித்தியை அறியப்பட்டதாகவிருக்கட்டும்; எங்களுக்குள் ஒருவருக்கொருவர் துவேஷமின்றி யிருக்கட்டும். சாந்தி: சாந்தி: சாந்தி:

## கடோபநிஷத் முதல் அத்தியாயம்.

### முதல் வல்லி.

1. வாஜஶ்ரவஸ் (என்ற நாமம் புனைந்த ஓர் ரிஷி, விசுவஜித் என்ற யாகத்தைச்செய்து அதன் பலனை அடைய) இச்சித்தவராக, எல்லாவித்தத்தையும் தானம் செய்தார். அவருக்கு நசிகேதஸ் (என்று பெயருள்ள) ஒரு புத்திரனிருந்தான்.

2. (மேற்படி ரிஷியால்) தக்ஷிணைகள் கொடுக்கப்படும்பொழுது, அதி பாலியனுயிருக்கிற (மேற்படி) குமாரனை ஒரு சிரத்தை அடைந்தது (அதாவது அவனுக்கு நல்ல வழியிற் புத்தி உண்டாயிற்று). (அடியில் கண்டபடி அவன் நினைத்தான்).

3. "ஜலத்தைக் குடித்தும், புல்லைத்தின்றும், பாலைக்கறந்தும் இனிநசிக்கத்தகுமான இப்படிப்பட்ட பசுக்களைத்தானம் செய்கிற ஒருவன், அசுகமாயிருக்கிற லோகங்களையடைகிறான்" என்று,

(அதாவது தன் பிதா நல்லதானம் செய்யவில்லை; அவர் இச்சித்த பலனை எப்படி அடைவர்; தன்னை யாவது தானம் செய்து பலனையடையட்டுமென்று நல்லெண்ணம் கொண்டான்).

4 "என்னை யாருக்குக் கொடுக்கப் போகிறீர்" என்று பிதாவைக் கேட்டான். (பாலன் பிதற்றுகிறானென்று நினைத்து பிதா சும்மாவிருந்தார்); (குமாரன் அந்தப்படியே பிதாவை) இரண்டாந்தரம் (கேட்டான்) (அதற்கும் சும்மாவிருந்தார்). மூன்றாவது தடவையும் கேட்டான். (அதற்கு பிதா கோபங் கொண்டவராய்) உன்னை யமனுக்குக் கொடுக்கப்போகிறேனென்றார்.

5. (இங்ஙனம் பிதா கூறலும் புத்திரன் தனிமையிலுட்கார்ந்து கொண்டு விசனப்படுகிறதாவது) (நம்முடைய பிதாவுக்கிருக்கிற) அநேகர்களுள் (புத்திரர்கள் அல்லது சிஷ்யர்களுள் நான்) முந்தினவன் (உத்தமன்) (அல்லது) மத்தியமன் ஆகவிருக்கட்டும்; (அதமனல்ல; அங்ஙனமிருக்க, என்னை யமனுக்குக் கொடுத்தனரே); யமனுக்கு என்றால் என்ன பிரயோஜனம்;" (கோபத்தின் பேரில் அப்படிச் செய்ததாகத் தோன்றுகிறது; ஆயினுமவர் வாக்கு பொய்யாகப் போகக்கூடாது என்று ஆலோசித்து, பச்சாத்தாபப் பட்டுக்கொண்டிருக்கிற பிதாவைப் பார்த்துச் சொல்லுகிறதாவது).

6. "(நம்முடைய) பூர்வீகர்களுடைய (நடையை) யோஜித்துப் பாருங்கள்; (இப்பொழுது இருக்கப்பட்ட) மற்றவர்களுடைய (நடையையும்) யோஜித்துப் பாருங்கள்; மனுஷ்யன் பயிர்போல நசிக்கிறான், உண்டாகிறான்;" (சத்தியம்பெரிது, விசனப்படவேண்டாம், என்னை யமனுக்கு கொடுத்துப் போடலாமென்று தைரியம் சொன்னான்).

7. (இப்படிச் சொன்னவுடனே பிதா சந்தோஷப்பட்டு புத்திரனை யமனிடத்திற்கு அனுப்பினார்; அப்படியே புத்திரன் யமாலயத்திற்குவந்து மூன்று தினம்காத்துக்கொண்டிருந்தான்; யாதொரு விசாரணையுமேற்படவில்லை. யமன் தூங்கிக்கொண்டிருந்தான்; அவனை மந்திரிகள் எழுப்பிச் சொன்னதாவது) "அதிதியாயிருக்கிற ஒரு விப்ரன், அக்னிபோல வீடுகளில் பிரவேசிக்கிறான். அவனுக்கு சாந்தியை (சமாதானம், அல்லது உபசாரம்) (பெரியோர்கள்) செய்கிறார்கள். (அதுபோல், இப்பொழுது உன் வீட்டுக்கு அதிதியாய்

வந்திருக்கிற நசிகேதஸுக்கு நீ உபசாரம் செய்யும்பொருட்டு அர்க்கிய பாத்தியம் கொடுக்க) ஹே! யம ! ஜலத்தைக்கொண்டுவா" (என்றும்).

8. "யாருடைய கிரஹத்தில் ஒரு அதிதி, சாப்பிடாமல் வசிக்கிறானோ, அந்த அல்ப புத்தியுள்ள புருஷனுடைய ஆசையையும், இஷ்ட பிராப்தியை எதிர்பார்த்தலையும், ஸத்ஸங்க பலத்தையும், நல்வாக்கினால் உண்டாகும் பலத்தையும், யாகத்தினாலுண்டாகும் பலத்தையும், மற்று ஆசிரமாதிக்குரிய தர்மத்தினாலுண்டாகும் பலத்தையும், எல்லாப் புத்திரர்களையும், பசுக்களையும் இவைகள் யாவையும் (அந்த அதிதி) நசிக்கச்செய்கிறான்" (என்றும்).

9. (இவ்விதம் கூறியவுடன் யமன் எழுந்து, நசிகேதஸுக்கு மரியாதை செய்து, சொல்லுகிறதாவது) "ஹே! பிராம்மண! அதிதியாகவும், நமஸ்காரத்துக்கு அர்கனாகவுமிருந்து கொண்டு என் கிரகத்தில் போஜனம் செய்யாமல் மூன்றிரவு நீ வசித்திருப்பதால் (என்னுடைய) நமஸ்காரம் உமக்கிருக்கட்டும்; எனக்கு மங்களமிருக்கட்டும். ஆகையால் மூன்று வரங்களைக் கேட்டுக்கொள்ளும்" (என்று).

10. (நசிகேதஸ் பதில் சொல்லுகிறதாவது)— "(என் பிதா) கௌதமர் என்னைப்பற்றி விசாரமற்றவராயும், சந்தோஷமனமுள்ளவராயும், (என் பேரிலிருந்த) கோபத்தை விட்டவராயும், எப்படி இருப்பாரோ, உம்மிடத்திலின்றும் விடுபட்டுப்போகிற என்னை (அவர் அலக்ஷியம் செய்யாமல், இவன் நம்முடைய குமாரனென்று) பூர்வஞாபகத்தை யுடைத்தானவராய் என்னைப்பார்த்து எப்படிப் பேசுவாரோ (அப்படி ஆகும்படி நீர்செய்யவேண்டுமென்று) மூன்று வரங்களுள் ஒன்றைக் கேட்கிறேன்" (என்று)

11. (யமன் சொல்லுகிறதாவது) "(உன் பிதா) ஔத்தாலகி என்றும், ஆருணியென்றும் பெயருள்ளவர் உன்னிடத்தில் முன்னிருந்த பிரீதியுள்ளவராயும், பூர்வஞாபகத்தை யடைந்தவராயும், இரவில் சுகமாய் நித்திரை செய்தும் (அதாவது விசாரமற்று) கோபமில்லாதவராயும் ஆவார். மிருத்யுவிடத்திலிருந்து விடுபட்டுப் போன உன்னைப் பார்ப்பர்" என்று.

12. (நசிகேதஸ் சொல்லுகிறதாவது) "சுவர்க்க லோகத்தில் யாதொரு பயமுமில்லை; அவ்விடத்தில் நீங்களில்லை (அதாவது

உம்மால் பயமுமில்லை). கிழத்தனத்தால் (ஒருவனுக்கு) பயமுமில்லை. பசி, தாகம் இவ்விரண்டையும் கடந்தும், சோகத்தைக் கடந்தவனும் சந்தோஷத்தை யடைகிறான்'' (என்று).

13. "ஹே! யம! (அப்படிப்பட்ட) ஸ்வர்க்கத்தைக் கொடுக்கத்தக்கதாயும், எதனுல் சுவர்க்கத்திலுள்ளவர்கள் அமுர்தத்துவத்தை அடைகிறார்களோ அப்படிப்பட்டதாயுமிருக்கின்ற அக்னியை, நீர் ஸ்மரித்து, சுவர்க்கப்பிராப்தியில் சிரத்தையுள்ள என்னைப் பற்றி அதனிடத்திற் பேசுங்கள். (அதாவது சுவர்க்கம் எனக்குக் கிடைக்கும்படிக்குச் செய்யுங்கள்). இதை இரண்டாவது வரமாகக் கேட்கிறேன்'' (என்றும்)

14. (யமன் சொல்லுகிறதாவது)—"ஹே! நசிகேத! அப்படிப்பட்ட ஸ்வர்க்கத்தைக்கொடுக்கத்தக்கதாயிருக்கிற அக்னியை அறிந்தவனாக (நான்) உனக்குச் சொல்லுகிறேன். (அதைக் கேள்) எதுஉன்னால் பிரார்த்திக்கப்பட்டதோ அது, என் வசனமென்று அறி; (அதாவது நீ கேட்ட வரம் கொடுத்தேன்) இந்த அக்னியை ஸ்வர்க்கலோக பலப் பிராப்தி ஸாதனமாயும் (ஜகத்துக்கு) ஆசிரயமாயும், (வித்துவான்களுடைய) புத்தியில் வைக்கப்பட்டிருக்கிறதாயும் நீ அறிந்து கொள்'' (என்று).

15. (மிருத்தியுவானவர்) லோகத்துக்கு ஆதியாயிருக்கிற அந்த அக்னியிடத்தில் இவனைக்குறித்து (நசிகேதஸ்ஸைப்பற்றி) சொன்னார் (சிபார்சு செய்தார்). பின்னும் (அக்னிசயனத்துக்கு) எப்படிப்பட்ட கற்கள், எவ்வளவு கற்கள் (வேண்டியதோ அதைப் பற்றியும்) எப்படி (அந்த யாகம் செய்யவேண்டியதோ, அதைப்பற்றியும், நசிகேதஸுக்குச் சொன்னார்). அவனும் (நசிகேதசும்) (தனக்குத் தெரிந்ததென்பதைத் தெரிவிக்க) மிருத்தியுவால் சொல்லப்பட்டபடி சரியாய் திருப்பிச் சொன்னான். அப்படிச் சொன்னதில் மிருத்தியு சந்தோஷப்பட்டு, மறுபடியும் சொல்லுகிறார்.

16. "பிரீதியுள்ளவராயும், மஹாத்மாவாயுமிருக்கிற மிருத்தியு மறுபடியும் உனக்குவரம் (நான்காவதுவரம்) கொடுக்கிறேன்.'' என்றும்; "இந்த அக்னி உன்பேராலேயே அழைக்கப்படப் போகிறது'' என்றும்; "விசித்திரரூபமாயிருக்கிற இந்த மாலையை கிரகித்துக்கொள்'' என்றும், நாசிகேதஸுக்குச் சொன்னார் (அல்லது கர்மமாயிருக்கிற கதியை கிரகித்துக் கொள் என்றார்).

17. (மறுபடியும் கர்மத்தை ஸ்துதி செய்கிறுர்) "மூன்று தடவை அக்னிசயனம் செய்தவனும், (மாதா, பிதா, குரு) இம்மூன்றுபேர் சொற்படி கேட்கிறவனும், (யாகம் அத்தியயனம், தானம்) இம்மூன்று காரியங்களைச் செய்தவனும், ஜன்மத்தையும், மிருத்தியுவையும் தாண்டுகிறுன். ஸர்வஞ்ஞாயும், ஸ்துத்தியாயுமிருக்கிற (அக்னி) தேவனை அறிந்து பார்த்து, இந்த கதியை (விராட் சம்பந்தமான பதத்தை- நல்ல கதியை) அடைகிறுன்".

18. "எந்த வித்துவான் மூன்றையும் (முன்சொல்லப்பட்டயாஜுஷிகா, யாவதீவடா, யதாவா, என்ற மூன்றையும்) அறிந்து, அக்னிசயனத்தை மூன்று தரம் செய்கிறுனே, அவன் முன்னர் மிருத்தியு பாசங்களையகற்றிக்கொண்டு, சோகத்தைத் தாண்டினவனுய், ஸ்வர்க்கலோகத்தில் சந்தோஷப்படுகிறுன்".

19. "(எந்த அக்னியை) இரண்டாவது வரத்தால் நீ கேட்டினையோ, அந்த இந்த ஸ்வர்க்கியராயிருக்கிற அக்னி வரம், ஹே நசிகேத! (உனக்குக் கொடுக்கப்பட்டுப்போயிற்று). இந்த அக்னியை உன்பெயராலேயே ஜனங்கள் அழைப்பார்கள். மூன்றுவது வரத்தைக் கேள்".

20. (நசிகேதஸ் கேட்கிறுன்) "இறந்துபோன மனுஷியனுடைய ஆத்மா, வேறு தேகத்தை யடைகிறதென்று சிலரும், அப்படியல்லவென்று சிலரும் சொல்லுகிறுர்கள். இந்த சந்தேகத்தை எனக்கு நிவர்த்தி செய்யும். இது தான் மூன்றுவது வரம்".

21. (யமன் சொல்லுகிறுர்) "இந்த விஷயத்தில் பூர்வம் தேவர்களாலும் சந்தேகிக்கப்பட்டிருக்கிறது. நன்றுக அறியப்படத்தகுந்ததல்ல; இந்த (ஆத்மவிஷய) தர்மம்மிகவும் சூக்ஷ்மமானது. ஹே! நசிகேத! வேறு வரத்தைக் கேள்! என்னை நிர்ப்பந்தப்படுத்தாதே; எனக்காக இந்த வரத்தைக்கோராதொழிக".

22. (நசிகேதஸ் சொல்லுகிறுன்) "இது தேவதைகளாலுங் கூட சந்தேகிக்கப்பட்டதல்லவா? ஹே! மிருத்தியுவே! நன்றுக அறியப்படத்தகாதது என்று நீவிரும் சொல்லுகிறீர்; இதைச் சொல்ல உம்மைத்தவிர வேறுருவரும் கிடைக்கமாட்டார்; இந்த வரத்துக்குச் சமமானதாய் வேறே வரமும் கிடையாது".

23. (மிருத்தியு சொல்லுகிறுர்) "சதாயுஸ்ஸுள்ள புத்திர பௌத்திரப்பேறுகளைக் கேள்; வெகு பசுக்களையும், யானைகள், தங்

101884

கம், அசுவங்கள் இவைகளையும்(கேள்); இராஜ்யத்தைக்கேள்; எவ்வளவு வருஷம் நீ இச்சிக்கிறாயோ அவ்வளவு காலம் நீ ஜீவித்திரு''

24. "இன்னும் இதற்குத் துல்லியமான எந்த வரத்தை நினைக்கின்றனையோ அதைக் கேள்; பூமியில் அரசனாக விரு; காமமுள்ளவர்களுக்குள் காமத்தை யடைந்தவனாக உன்னைச் செய்விக்கின்றேன்''.

25. "மனுஷிய லோகத்தில் எந்தெந்த காமங்கள் துர்லபங்களாயிருக்கின்றனவோ அவைகளையெல்லாம் உன்னிச்சைபடி கேட்டுக்கொள்; இதோ இவர்கள் அப்ஸரஸ்திரீகள், ரதங்களோடும் வாத்தியங்களோடும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஸ்திரீகள் மனுஷியர்களால் அடையப்படக் கூடாதவர்கள்; இவர்களால் உனக்குச்சகல சிச்ருஷையையும் செய்வித்துக்கொள்; ஹே! நசிகேத ! மரணவிஷயமான (பிரச்னத்தை மட்டும்) கேட்காதே."

26. (நசிகேதஸ் சொல்லுகிறான்) "நாளைக்காலை இருக்கப்போகின்றதோ இல்லையோவென்றசந்தேகத்துக்குரியதாயிருக்கிற (அநித்தியமாயிருக்கிற இந்த காமங்கள்) சர்வேந்திரியங்களுடைய தேஜஸையும், பழுதுறச் செய்கின்றன; எல்லா ஜீவிதமும் அற்பமே; ரதாதி வாகனங்களும் நிருத்திய கீதங்களும் உமக்கே இருக்கட்டும்." (எனக்கு வேண்டாம்; நான் கேட்டவரனைத் தான் கொடுக்க வேண்டும்).

27. "(யாதொரு) மனுஷியன் வித்தத்தினால் திருப்தியடைகின்றானில்லை; உம்மைப்பார்த்தால் (பார்த்தமாத்திரத்தில்)வித்தத்தையடைவோம். எவ்வளவு காலம் (கொடுக்க) நீர்சக்தியுள்ளவராயிருக்கிறீரோ (அவ்வளவுகாலம்) ஜீவனோடிருப்போம்; (அது இருக்கட்டும்) என்னுடைய அந்த வரமே கொடுக்கப்படவேண்டியது"

28. "ஜரையற்றவர்களாயிருக்கிற தேவர்கள் முன் சென்று, (ஆத்மபாவத்தை) அறிந்தவனையும், பூமியிலுள்ளவனையும், ஜரையுள்ளவனையும, மனுஷியனையும், வர்ணத்தினாலேயும் ரதியினாலேயும் சந்தோஷத்தைக் கொடுக்கத்தக்க அப்ஸரஸ் முதலானவர்களை (துச்சமென்று) அறிந்தவனுமிருக்கிற எவன் (எந்த விவேகி) தீர்க்காஸை 'இச்சிப்பான்".

29. "எந்த பிரேத விஷயத்தில் இந்த சந்தேகத்தை அடைறார்களோ, ஹே! மிருத்தியு ! மகாபிரயோஜன காமாயிருக்

கிற பரலோக விஷயத்தில் எது (எந்த ஆத்மஞானம்) உண்டோ அதை எங்களுக்குச் சொல்லும்" என்று.

(சுருதி சொல்லுகிறதாவது) யாதொரு இந்த வரம், அதிரகசியமானது; அதில் பிரவேசித்தவனாகக்கொண்டு நசிகேதஸ் வேறு வரத்தைக் கேட்கமாட்டேன் என்றுறுதிகூறினான்.

## முதல் அத்தியாயம் இரண்டாவது வல்லீ.

1. (மிருத்யு சொல்லுகின்றார்) சிரேயஸ் (நிராசை மோக்ஷம்) என்பதுவேறு; பிரேயஸ் (ஆசை. ஸம்ஸாரம்) என்பதுவேறு, இவ்விரண்டும் நாநாவிதமான பின்னார்த்தங்களையுடையன. இரண்டும் மனுஷ்யர்களைக் கட்டுப்படுத்துகின்றன. அவைகளில் சிரேயஸைக் கைக்கொண்டவனுக்கு மங்களம் கிடைக்கும். பிரேயஸை வரித்தவன், பாரமார்த்திக அர்த்தத்தினின்றும் நழுவிப்போகின்றான்,

2. சிரேயஸும், பிரேயஸும் மனுஷ்யனை யடைகின்றன. விவேகி இரண்டையும் பகுத்தறிந்து பிரிக்கின்றான். பிரேயஸினின்றும் (விலக்கி) சிரேயஸைக் கைக்கொள்ளுகின்றான். மந்தபுத்தியுள்ளவன், யோகக்ஷேம ஆசையினால் பிரேயஸை வரிக்கின்றான்.

3. அப்படிப்பட்ட நீ, பிரியமுள்ளவர்களையும் (புத்திரபௌத்திராதிகளையும்), பிரிய ரூபர்களையும் (அப்ஸரஸ்திரீ முதலியவர்களையும்) பகுத்தறிந்து தள்ளிவிட்டனை. எதில் அதிக மனிதர்கள் மூழ்குகின்றார்களோ அதாகவும், வித்தத்தைக் கொடுக்கத்தகுந்ததுமாயிருக்கிற இந்த மாலையையும் நீ அடையவில்லை.

4. வித்தையென்றும் அவித்தையென்றும் அறியப்பட்டனயாவை அவைகள் ஒன்றுக்கொன்று மிக்க தூரம். ஒன்றுக்கொன்று விரோதமுடையது. பின்னபலத்தைக் கொடுக்கத்தக்கன. நீ வித்தையை இச்சித்தவனாக நினைக்கிறேன். ஏனென்றால் அதிக இச்சைகள் உன்னை அணுகவில்லை.

5. அவித்தையில் அகப்பட்டவர்கள், (தாங்கள்) புத்திசாலிகளாகவும் பண்டிதர்களாகவும் தாங்களே எண்ணிக் கொள்கின்றார்கள், கெட்டவழியில் செல்கிறவர்கள். மூடர்கள். குருடனால் வழிகாட்டப்பட்ட குருடர்களைப்போலிருக்கின்றார்கள்.

6. ஸம்ஸாரதர்மத்தில் ஆஸக்தியுள்ளவனையும், வித்த மோகத்தினாலே மூடனையுமிருக்கிற அவிவேகியினிடத்தில் பரலோகசாத

சமான பிர்மவித்தை விளங்காது. "இதோ (காணப்படுகிற) இது தான் உலகம்; பரலோகமென்பது இல்லை" என்று நினைக்கிறவன், மீண்டும், மீண்டும் மிருத்தியுவாகிய என்வசத்தில் வந்து அடைகின்றான்.

7. யாதொரு ஆத்மா, மிகுந்த கேள்விகளினாலும் அடையக் கூடியவனன்றோ, கேட்டவர்கள் மிகுதியான பேரிருந்தாலும் அவர்களால் யாதொரு வஸ்து அறியப்படவில்லையோ, அந்த ஆத்மாவைப்பற்றி நன்றாகச் சொல்லுகிறவன் கிடைப்பது அரிது. அத்தகைய குருவால் உபதேசிக்கப்பட்டு அறிந்தவன்கிடைப்பதரிதினுமரிது.

8. தாழ்ந்த மனிதனால் சொல்லப்படும் ஆத்மா நன்கு அறியப்படத்தக்கதன்று. பற்பலவிதமாக ஆலோசிக்கப்படத் தகுந்தது. அணுவைக்காட்டிலும் அணு. தர்க்கத்திற்கிடங்கொடாதது. பிர்மஞானமுள்ளவனால் போதிக்கப்பட்டால் சந்தேகம் அப்பொழுது நிகழாது.

9. ஹே! சிரேஷ்ட! நசிகேத! இந்த பிர்மஞான புத்தியானது, தர்க்கத்தினாலடையவுமியலாது; நீக்கவும் முடியாது. பிர்மஞானியால் கூறப்பட்டால் தான் விளங்கும். அப்படிப்பட்ட புத்தியை நீ அடைந்திருக்கின்றாய். சத்திய தைரிய முற்றவனாகவிருக்கின்றாய். கேட்கிறவன் உன்னைப் போல் யாவனுளன்?

10. நிதியானது அநித்தியமென்றுநான் அறிந்திருக்கிறேன். அநித்திய வஸ்துக்களால் நித்தியவஸ்து ஸித்திக்கமாட்டாது. அநித்திய வஸ்துக்களால் அக்னி யாகம் செய்யப்பட்டது; அதனால் (புண்ணியம் இருக்கிற வரையில்) நித்தியமான யம அதிகாரத்தை (இந்த சுவர்க்கபதவியை) அடைந்திருக்கின்றேன்.

11. கர்மத்தின் முடிவாயும், ஜகத்தின் பிரதிஷ்டையாயும், யாகத்தின் பலமாயும், அபயஸ்தானமாயும், ஸ்துத்தியமாயும்; மகத்தாயும், விஸ்தீர்ண கதியையுமுடையதாயுமிருக்கின்ற ஸ்திதியை (பிர்மலோகாதி பதவியை) நோக்கி, ஹே! நசிகேத! விவேகியாயுள்ள நீ தைரியத்தினால் (மேற்கூறப்பட்டன) யாவையும் விலக்கிவிட்டனை.

12. கஷ்டத்துடன் அறியத்தக்கவரும், அதிரகசியமானவரும், (ஒவ்வொன்றிலும்) பிரவேசித்திருக்கின்றவரும், புராணருமாயிருக்கிற அந்ததேவனை, அத்தியாத்மயோகத்தினால் (விஷயங்களைத்

தன் ஆத்மாவையே தியானிக்கிறதனால்) விவேகி பரியாலோசித்து, சந்தோஷத்தையும் விசனத்தையுமுற்றும்விடுகிறான்.

13. இதை (நான் சொல்லப்போகின்ற பிர்மவித்தையை) கேட்டு, கிரகித்து, (சரீராதி) தர்மத்தை விலக்கி விட்டு, இந்த ஆத்மாவைச் சேர்ந்து சந்தோஷகரமான ஆத்மாவையடைந்து, மனுஷியன் சந்தோஷப்படுகிறான். நசிகேதஸின் பொருட்டு (மோக்ஷ) வீடு திறந்து வைக்கப்பட்டிருக்கிறதாக நினைக்கிறேன்.

14. (நசிகேதஸ் சொல்லுகிறான்) "தர்மத்தைக்காட்டிலும் வேறு; அதர்மத்தைக்காட்டிலும் வேறு; காரியத்தைக்காட்டிலும் வேறு; காரணத்தைக் காட்டிலும் வேறு; இருந்ததைக் காட்டிலும் வேறு; (இருக்கிறதைக்காட்டிலும் வேறு) இருக்கப் போகிறதைக் காட்டிலும் வேறு; இவ்விதமிருப்பதாக எதை நீரறிந்திருக்கின்றீரோ, அதை எனக்குச் சொல்லுக"

15. (மிருத்யு சொல்லுகிறார்) "எதைப்பற்றி சர்வவேதங்களும் கூறுகின்றனவோ, எதை சர்வதபசுக்களும் சொல்லுகின்றனவோ, எதை இச்சித்து பிர்மசரியத்தை யனுஷ்டிக்கின்றார்களோ, அதை உனக்குச் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். அது தான் 'ஓம்' என்ற அக்ஷரம்."

16. "இந்த அக்ஷரந்தான் பிர்மம்; இது தான் பரவஸ்து; இந்த அக்ஷரத்தையறிந்து யார் எதை இச்சிக்கின்றானோ அது அவனுக்குக்கிடைக்கும்".

17. "இந்த (மோக்ஷத்துக்கு) பிடிப்பு உயர்ந்தது; இந்தப் பிடிப்பு பரமானது; அந்தப்பிடிப்பை யறிந்தவன் பிர்ம லோகத்தில் மகிமையை அடைகிறான்."

18. (இந்த ஆத்மா எப்படிப்பட்டவன்); பிறப்பிறப்பு இல்லை; சர்வஞ்ஞன்; எதினின்றும் அவன்உண்டாகவில்லை; அஜன்; நித்தியன்; சாசுவதன்; புராணன்; ஹிம்ஸிக்கப்படத்தகுந்த சரீரத்தில் ஹிம்ஸிக்கப்படத்தகாதவன்."

19. "கொல்லுகிறவன் கொலைசெய்ய நினைக்கிறான்; (அதாவது நான் கொல்லப்போகின்றேன் என்று அகம்பாவம் கொள்ளுகிறான்); கொல்லப்படுகிறவன் (தான்) கொல்லப்பட்டவனாக நினைக்கிறான்; இவ்விருவர்களும் தெரியாதவர்கள்; அவன் கொல்லுகிறவனுமல்ல; இவன் கொல்லப்படுகிறவனுமல்ல".

20. "ஆத்மா அணுவைக்காட்டிலும் சிறிது; பெ[illegible]தைக் காட்டிலும் பெரிது; பிராணிகளுடைய இருதயத்திலிருக்கிறது; காமமில்லாதவன் அவரைப்பார்க்கிறான்; சோகமில்லாதவனாகின்றான்; (மனஸ் முதலான) கரணங்களுடைய பிரசாதத்தினாலே ஆத்மாவினுடைய மகிமையை (பார்க்கிறான்).

21. "அந்த ஆத்மா உட்கார்ந்திருந்தே தூரத்தில் போகிறது; படுத்துக்கொண்டே எங்கும் செல்கின்றது; அப்படிப்பட்ட விருத்த தர்மத்தையுடைய தேவனை என்னை (முதலானவர்களைக்) காட்டிலும் அன்னியன் எவ்விதமறிவான்."

22. "சரீரங்களில் சரீரமற்றவனாயும், அநித்திய வஸ்துக்களில் நித்தியவஸ்துவாயும், மகானாயும், விபுவாயுமிருக்கிற ஆத்மாவை, விவேகி அறிந்து சோகத்தை அடையமாட்டான்."

23. "இந்த ஆத்மா, வேதாப்பியாஸத்தினாலாவது, படித்ததை மறவாமலிருக்கும் புத்தியினாலாவது, பெரும்பாலும் கேட்டதினாலாவது அடையப்படத்தக்கவரல்ல; இந்த (ஸாதகன்) எதை (தன் ஆத்மாவை) பிரார்த்திக்கின்றானோ, அதனால் (தன் ஆத்மாவினால்) அறியப்படுகிறார்; (அதாவது பரமாத்மாவை தனதாத்மாவைக் கொண்டே அறியவேண்டியது; அந்த தனதாத்மாவினுடைய யதார்த்தமான சுவரூபத்தை பரமாத்மா பிரகாசப்படுத்துகின்றான்).

24. "துர்நடத்தையை விடாதவனாவது, இந்திரியங்களை அடக்காதவனாவது, ஏகாக்கிரசித்தமில்லாதவனாவது, ஒழிவடைந்த மனதில்லாதவனாவது இந்த ஆத்மாவை அடையமாட்டான்; பிர்ம ஞானத்தினால் மட்டும் அடையத்தக்கது."

25. "எந்த ஆத்மாவுக்குப் புண்ணியபாவங்களிரண்டும் புஜிக்கிற அன்னமாயிருக்கின்றனவோ, மிருத்தியு (மரணம்) அதற்கு ஊறுகாயாக விருக்கின்றதோ, யாரிடத்தில் இந்தப்படி எவன் அறிகிறான், அவர் தான் (ஆத்மா)."

## மூன்றாவது வல்லீ.

(மிருத்தியு சொல்லுகிறார்):—

1. (ஜீவாத்மா, பரமாத்மா இவ்விருவர்களும்) சரீரத்தில், கர்மத்தினிடமிருந்து அவசியம் உண்டாகும் பலத்தை புஜிக்கிறவர்கள்; வெய்யலும் நிழலும் போல (பரஸ்பரம் விருத்தர்களாயும்)

இருக்கிறவர்கள்; புத்தியில் பிரவேசித்தவர்கள்; பரமாயிருக்கிற இருதயாகாசத்தில் பிரவேசித்தவர்கள்; பஞ்சாக்கினியையுடைய கிரகஸ்தர்களும், மூன்று தரம் அக்னிசயனம் செய்தவர்களுமான பிர்ம வாதிகள் இங்ஙனமுரைக்கின்றார்கள்.

2. கர்மிகளுக்கு எது ஸேதுவாக (கரை) விருக்கிறதோ, அந்த நாசிகேதாக்நியை (அறிய) சக்தி யுள்ளவர்களாயிருக்கின்றோம். எது அக்ஷரமாயும், பரமாயும், அபயமாயும், (சம்ஸாரஸாகரத்தை) தாண்ட இச்சையுள்ளவர்களுக்கு கரையாயு மிருக்கின்றதோ, (அந்த) பிர்மத்தை (யறியவும்) சக்தியுள்ளவர்களாயிருக்கின்றோம்.

3. ஜீவாத்மாவை, ரதத்திலிருக்கிற எஜமானனாகவும், சரீரத்தை ரதமாகவும், புத்தியை ஸாரதியாகவும், மனதைக் கடிவாளமாகவும் அறி.

4. இந்திரியங்கள் (மேற்படி ரதத்திற்கு) குதிரைகளென்றும், அவைகளின் (ரூபாதி) விஷயங்கள் (மேற்படி குதிரைகள் போகிற) மார்க்கங்களென்றும், சரீரம், இந்திரியம், மனஸ் இம்மூன்றுடன் சேர்ந்திருக்கிற ஆத்மா ஸம்ஸாரி என்றும், (ஜீவாத்மா போக்தா) விவேகிகள் சொல்லுகிறார்கள்.

5. யாதொரு (புத்தியாகிற சாரதியானவன்) அவிவேகியாய் எப்பொழுதும் அடக்கப்படாத மனதுடன் (கடிவாளத்தோடு) இருக்கின்றானோ, அவனுக்கு இந்திரியங்கள் வசப்படமாட்டா, சாரதிக்கு முரட்டுக் குதிரைகள் போன்று.

6. யாதொருவன், விவேகியாயிருந்து எப்பொழும் அடக்கப்பட்ட மனதுடனிருக்கின்றனனோ, அவனுக்கு இந்திரியங்கள் வசப்படும், ஸாரதிக்கு நல்லகுதிரைகள் போன்று.

7. யாதொரு ஆத்மாவாகிய ரதியானவன், அவிவேகியாய், எப்பொழுதும் அடக்கப்படாத மனதுடன் கூடினவனாகவும், அசுசியாகவுமிருக்கின்றானோ, அவன் (தன்ஸாரதியைக்கொண்டு) அந்த பரமபதத்தை (பிர்மத்தை) யடைய மாட்டான்; மற்று ஜனனமரண பாவத்தை அடைவான்.

8. எவன், விவேகியாய், எப்பொழுதும் அடக்கப்பட்ட மனதுடன்கூடினவனாகவும், சுசியுள்ளவனாயுமிருக்கின்றானோ, எதினின்றும் பயம் ஜனிக்கவில்லையோ அவன் அந்த பதத்தை (பிர்மத்தை) அடைகின்றான்.

9. யாதொரு விவேகியாயிருக்கிறசாரதியானவன், அடக்கப்பட்ட மனமுள்ளவனாக விருக்கின்றானோ அவன் ஸம்ஸார கதியாகிறமார்க்கத்தின் முடிவை அதாவது விஷ்ணுவின் பதத்தை (வியாபன சீலராயிருக்கிற பரமாத்மாவின் பதத்தை) அடைகிறான்.

10. இந்திரியங்களைக் காட்டிலும் அவைகளின் பொருள்கள் (விஷயங்கள்) உயர்ந்தன; பொருளைக்காட்டிலும் உயர்ந்தது மனம்; இதைக் காட்டிலும் உயர்ந்தது புத்தி; இதைக்காட்டிலும் உயர்ந்தது மகானாயிருக்கிற ஆத்மா (மகத்தத்வம், ஈசுவரதத்துவம், சூத்திராத்மா).

11. மகத்தத்துவத்தைக் காட்டிலும் உயர்ந்தது அவ்வியக்ததத்துவம்(மாயை, பிரகிருதி); இதைக்காட்டிலும்உயர்ந்தது ஒன்மில்லை; இது தான் (அடையவேண்டிய) திக்கு; இது தான் பரமான கதி (மோக்ஷம்).

12. இந்த ஆத்மா எல்லா பூதங்களிடத்திலும் மறைந்திருக்கின்றார்; பிரகாசப்படுகிறதில்லை; சூக்ஷ்ம தரிசிகளால் (விவேகிகளால்) சூக்ஷ்மமாயும், ஏகாக்கிரமமாயுமிருக்கிற புத்தியைக் கொண்டு காணப்படுகிறார்.

13. விவேகியானவன், வாக்முதலான இந்திரியங்களை, மனஸில் அடக்கவேண்டியது; மனஸை புத்தி ஆத்மாவில் அடக்கவேண்டியது; அந்த புத்தி ஆத்மாவை, மகத்தாயிருக்கிற ஆத்மாவில் (மகத்தத்துவம்- ஈசுவரதத்துவம்- முன்னுண்டானவிஞானம்) அடக்கவேணடியது; அந்த மகத் ஆத்மாவை சாந்த ஆத்மாவில் (பரமாத்மாவில்) அடக்கவேண்டியது.

14. (ஹே! ஜந்துக்களே) (ஆத்மாஞானம்பெற) எழுந்திருங்கள்! (அக்ஞான தூக்கத்திலிருந்து) விழித்துக் கொள்ளுங்கள்! நல்ல குருவையடைந்து (ஆத்மாவை) யறியுங்கள்; இந்த மார்க்கம் (தத்துவஞான லக்ஷணமார்க்கம்) கத்தியின் நுனி; கூர்மையுள்ளது; எளிதில் கிட்டக் கூடாதது; அடையப்படத்தகாதவழி.

15. எது (எந்த ஆத்மா) அசப்தமோ, அஸ்பரிசமோ, அரூபமோ, அவ்வியயமோ, அரஸமோ, நித்தியமோ, வாசனையற்றதோ ஆதியந்த மில்லாததோ, மகத்துவத்தைக்காட்டிலும் வேறானதோ, யாண்டு முள்ளதோ, அதையறிந்து (ஒருவன்) மிருத்யுவினிடத்திலிருந்து விடுபடுவான் (ஸம்ஸிருதியில்லை).

16, மிருத்தியுவா லுரைக்கப்பட்டதும், புராதனமாயுமிருக்கின்ற இந்த நசிகேதோபாக்கியானத்தைச் சொன்னாலும், கேட்டாலும், விவேகி பிர்மலோகத்தில் (பரமாத்மாவிடம்) மகிமையையடைகின்றான் (லயிக்கின்றான்).

17. எவன், பரிசுத்தனாகக் கொண்டு, பரமாயும், ரகசியமாயுமிருக்கிற இந்த (கிரந்தத்தை) பிராமண சபையிலும், சிராத்த காலத்திலும் கேட்கும்படி செய்விக்கின்றானோ, அது (அவனுக்கு) அநந்தமானப் பலனைப் பயக்குகின்றது.

மூன்றாவது வல்லீ முற்றிற்று.

---

முதல் அத்தியாயம் முற்றிற்று.

உ

# கடோபநிஷத் இரண்டாம் அத்தியாயம்.

## நான்காவது வல்லீ.

1. ஸ்வயம்பூ (பரமாத்மா), தன்தன் விஷயபரங்களாயிருக்கின்ற இந்திரியங்களை அடிக்கிறார்; (அதாவது ஆத்மஞானிகளால் மட்டும் இந்திரியங்களை அடக்க முடியும்); ஆகையால் (உலகத்தவர்) சாமானியமாய் அநாத்மபூதங்களைப் பார்க்கிறார்களேயன்றி அந்தராத்மாவை (பரமாத்வை) பார்க்கிறதில்லை; ஆனால் யாதாமொரு தைரியஸ்தன் அமிருதத்துவத்தை இச்சித்தவனாகவும், அடக்கப்பட்ட சக்ஷுராதி இந்திரியங்களையுடையவனுமாக, பிரத்தியக் ஆத்மாவைப் (பரமாத்மாவை) பார்க்கிறான்.

2. அவிவேகிகள், அநாத்ம பூதங்களாயிருக்கிற விஷயங்களைப்பின்றொடர்கின்றார்கள்; (ஆதல் பற்றி) அவர்கள் எங்கும் பாவிகிற்கின்ற மிருத்தியுவின் பாசத்தை யடைகின்றார்கள்; ஆதல்கொண்டே தைரியசாலிகள் நித்தியமுள்ள அமிர்தத்துவத்தை (பிர்மத்தை) அறிந்து, அநித்தியமான வஸ்துக்களைப் பிரார்த்திக்கமாட்டார்கள் (அந்த வஸ்துக்களில் இச்சைப்பட மாட்டார்கள்).

3. (யாது காரணமெனின்) மிதுன நிமித்தங்களாக (சுகத்தைக் கொடுக்கத் தக்கனவாக) இருக்கின்ற ரூப, ரஸ, கந்த சப்த ஸ்பரிசங்களாகிய விஷயங்களை (உலகத்திலுள்ளவன்) இதனாலேயே (பரமாத்மாவினாலேயே, விக்ஞானத்தைக்கொண்டே) பார்க்கின்றான் (அறிகின்றான்); (அறியவேண்டியது) இவ்விடத்தில் எஞ்சியுள்ளது யாது (ஒன்றுமில்லை; எல்லாவற்றையும்பிர்மம் அறிந்திருக்கிறது); இது தான் அது (நசிகேதஸால் கேட்கப்பட்ட வஸ்து தான்).

4. (ஒருவன்) சுவப்நமத்தியத்தையும் (சுவப்னத்தில் அறியப்பட்டதையும்) ஜாக்ரமத்தியத்தையும் (ஜாக்ருதாவஸ்தையில் அறியப்படுகிறதையும்) எதைக்கொண்டு பார்க்கின்றானோ, அந்த மகானாயும், விபுவாயுமிருக்கப்பட்ட ஆத்மாவை அறிந்து, விவேகி விசனத்தையடையமாட்டான்.

5. கர்மபலத்தைப் புஜிக்கிறவனும், காலத்திரயத்திற்கு ஈசனுயுமிருக்கிற இந்த ஜீவாத்மாவை (இன்னதென்று) எவன் அறிகின்றானோ (அவன்), பிறகு (அப்படியறிந்த பிறகு) (ஜீவனை) ரக்ஷித்துக் கொள்ள இச்சைப்பட மாட்டான்; இது தான் அது (இந்த ஜீவாத்மாவும் அந்த பிர்மம் தான்).

6. எவர் (எந்த பிர்மா, ஹிரண்ணிய கர்ப்பர்) ஆதியில் விக்ஞானத்தினின்றும் (பரமாத்மாவினின்றும், அது அதாகவே) பூதங்களுடன் உண்டாயினரோ, (சரீராதிகளை உத்பத்தி செய்த பிறகு பிராணிகளின்) இருதயத்தில் பிரவேசித்து இருந்து கொண்டிருக்கிறாரோ, அவரை எவன் பூதங்களுடன் அறிகின்றானோ (அவன் பிர்மத்தை அறிகின்றான்); இதுதான் அது; (இந்த ஹிரணியகர்ப்பரும் பிர்ம்மமே).

7. எவள் சர்வதேவாத்மிகையாயும், (சப்தாதி விஷயங்களை) புஜிக்கிறவளாயும், (பரபிர்மத்திடமிருந்து) ஹிரண்ய கர்ப்பரூபமாய் உண்டானாளோ, எவள் பூதங்களுடனுண்டானவளோ, இருதயத்தில் பிரவேசித்து நின்றவளாயுமிருக்கிற (மாயையை, எவன் அறிகின்றானோ அவனே பிர்மத்தை அறிந்தவன்). இதுதான் அது (இந்த மாயையும் அந்த பிர்ம்மந்தான்).

8. கர்ப்பிணிகளால் கர்ப்பம் நன்றாகக் காக்கப்பட்டிருக்கின்றதுபோல, அரணிக்கட்டைகளால் காக்கப்பட்டிருக்கின்றதாயும், ஜாக்கிருதையுள்ளவர்களும், ஹவிஸ் முதலியனவற்றை யுடைத்தாயிருக்கின்றவர்களுமான மனிதர்களால் தினந்தோறும் ஸ்துதி செய்யப்படுகிறதுமான யாதொரு அக்னியுளதோ, இதுவும் அது தான். (இந்த அக்னியும் பிர்ம்மமே).

9. எந்த ஆத்மாவினிடத்திலிருந்தும் சூரியன் உதையமாகின்றானோ, எங்கு அஸ்தமயத்தை யடைகின்றானோ, அதில் எல்லாத் தேவதைகளும் பிரவேசிக்கிறார்கள் (அதிலேயே அடங்கியிருக்கிறார்கள்); ஒன்றும் அதைவிட அன்னியமாயிருக்கின்றதில்லை, இது தான் அது (இந்த சூரியனும் பிர்ம்மமே).

10. எது இவ்விடத்தில் (இவ்வுலகத்தில் காரிய காரணரூபமாகத் தோற்றப்பட்டு விளங்குகின்றதோ) அதுதான் அவ்விடத்திலுள்ளது (பரமண்டலத்தில் ஸ்வச்சமாக இருக்கப்பட்ட பிர்மம்); (அப்படியே) அவ்விடத்திலுள்ளதே இவ்விடத்திலு முள்ளது.

இங்கு (பிர்மம்) பின்னரூபமென்று எவன் அறிகின்றானோ, அவன் மரணத்துக்குமேல் மரணத்தை யடைகின்றான்.

11. இது (பிர்மம்) மனஸினால் (ஆசாரியாகமங்களால் ஸம்ஸ்கரிக்கப்பட்ட மனதால்) பெறப்படத்தகுந்தது; இங்கு அவருக்குப் பின்னமாக ஒன்றுமில்லை; எவன் பின்னமென்று அறிகின்றானோ, அவன் மரணத்துக்குமேல் மரணத்தையடைவான்.

12. ஆத்மா அங்குஷ்ட பிரமாணமுள்ள புருஷனாக மத்தியிலிருக்கிறது (அதாவது, இருதயகமலாந்திரத்திலிருக்கிறது); உண்டானதற்கும், உண்டாகப்போகிறதற்கும், ஈசானனாயிருக்கின்றது; (ஒருவன் அதை அறிந்தால்) அவன் அதினிடத்தினின்றும் கூச்சத்தை யடையமாட்டான் (அதிலேயே சம்பந்தப்பட்டுப்போகின்றான்). இதுவும் அது (இந்த ஜீவ ஆத்மாவும் பிர்ம்மமே).

13. அங்குஷ்ட பிரமாணமுள்ள புருஷன், புகையில்லாத ஜோதிரூபம் (அதாவது கர்மத்தில் சம்பந்தப்படாதவன்), உண்டானதற்கும், உண்டாகப்போவதற்கும் ஈசானன்; நாளைக்குமுள்ளவன் (நித்தியன், கூடஸ்தன்); இதுவும் அது; (இருதயத்தில் சாக்ஷிபூதமாயிருக்கிற பரமாதாவும் பிர்மமே).

14. காடுமுறடானவிடங்களிலும், பர்வதங்களிலும் விழுகிற ஜலம் எப்படி சிதறிப் (பலரூபங்களாக) விழுகின்றனவோ, அங்ஙனமே (ஆத்மாவுடைய) தர்மங்கள் தனித்தனியென்று எவன் அறிகின்றானோ, அவன் அத்தகைய நானாரூப சரீரங்களையடைகின்றான் (ஜனனமரணத்தை யடைகின்றான்).

15. ஹே! கௌதம (நசிகேத)! சுத்தமான ஸ்தலத்தில், சுத்தமான ஜலம் (ஏகரஸமாக, சிதறிப்போகாமல் ஒரேதாரையாய்) இருக்கிறதோ, இப்படி யறிந்த முனியுடைய (யோகியுடைய) ஆத்மா, இத்தன்மைத்தாகவாகிறது (பிர்மமாகவே ஆகின்றது).

## ஐந்தாவது வல்லீ.

1. பிறப்பில்லாதவராயும், வக்கிரமில்லாத விக்ஞானமுள்ளவராயுமிருக்கிறவருக்கு (பிர்மத்துக்கு), ஒருபட்டணம் (இருக்கிறது); (அது சரீரம்); (அப்பட்டணத்துக்கு) 11-துவாரங்கள்; (முகத்திலுள்ளன 7; நாபி உள்பட கீழ்உள்ளது 3; சிரசில் பிர்மரந்திரம் 1; ஆக 11), இப்படிப்பட்ட வஸ்துவை ஒருவன் தியானம் செய்யின்

(அவித்தையிலிருந்து) விடுபட்டவனாக துக்கத்தை யடையமாட்டான். அவனுக்கு ஜனனமரணமுமில்லை. இதுதான் அது (இந்த பட்டணத்தையுடையவனும் அந்த பிர்மமே).

2. அது (பிர்மம்) கமனமுள்ளது; சுவர்க்கலோகத்திலிருக்கப்பட்டது; (சூரியாதிரூபமாக எல்லோரையும்) வஸிக்கும்படிசெய்யத்தக்கது; அந்தரிக்ஷத்தில் இருக்கப்பட்டது (வாயுரூபமாக); அக்நியாகவிருக்கின்றது; பூமியின்கண் ணுள்ளது; அதிதிரூபமாகக்கிரகந்தோறும் செல்லத்தக்கது; மனுஷியனிடமுள்ளது; தேவர்களிடமுள்ளது. சத்தியத்தில் அல்லது யஞ்ஞத்திலுள்ளது; ஆகாயத்திலுள்ளது; பூமியிலுண்டாகிறவைகளாக (பயிர்முதலானதுகளாக) இருக்கப்பட்டது; ஜலஜந்துக்களாகவும் யஞ்ஞத்திலுள்ளவைகளாகவுமுள்ளது; பர்வதத்திலுண்டானவைகளாக (நதி முதலானதுகளாக) இருக்கப்பட்டது. சத்தியவஸ்து; மிகப்பெரிதானது.

3 எது (எந்த பிரமம்) (ஹிருதயத்துக்கு) மேல் பிராணவாயுவை உயரக்கிளப்பிவிடுகிறதோ, அபானவாயுவைக் கீழே தள்ளிவிடுகிறதோ, (ஹிருதய புண்டரீகாகாசத்தின்) மத்தியிலிருக்கின்றதோ, பஜிக்கத்தக்கதாயிருக்கின்றதோ, அதை எல்லாத்தேவர்களும் (சக்ஷுஸ் முதலான இந்திரியங்கள்) உபாசிக்கின்றனர்; (அதற்குப் பயந்து தத்தம் வேலையை பரபரப்புடன் செய்கின்றன).

4. தேகத்தையுடையவரும், சரீரத்திலிருப்பவரும், (பிறகு) நழுவிப்போகிறவரும், தேகத்தை விட்டுப்போகிறவருமான இவருக்கு (ஆத்மாவுக்கு) இவ்விடத்தில் (தேகத்தில்) எஞ்சியது யாது? (ஒன்றுமில்லை); (அதாவது ஆத்மா பிரிந்தால் எல்லா தத்துவங்களும் பின்பற்றுகின்றன). இதுதான் அது; (இந்த தேஹியுமே அந்த பிர்மம்).

5. யாதொரு மனிதனும் பிராணவாயுவினாலாவது, அபானவாயுவினாலாவது பிழைத்திருக்கவில்லை; எதினிடத்தில் இந்த இரண்டும் ஆசிருதங்களாகவிருக்கின்றனவோ, அந்த வேறு ஒன்றினாலே (ஆத்மாவினாலே) பிழைத்திருக்கின்றான்.

6. ஹே! கௌதம! இரகசியமாயும், நித்தியவஸ்துவாயுமிருக்கப்பட்ட இந்த பிர்மத்தைக் குறித்தும், ஆத்மா (அவிக்ஞானத்தால்) மரணத்தையடைந்து (பிறகு) எப்படி ஆகிறானோ (அதைப்

பற்றியும்) உனக்குச் சொல்லுகிறேன்; (சொல்லுகிறதும், அறிந்து கொள்ளுகிறதும்) கஷ்டசாத்தியம்.

7. (அவித்தியாசம்பந்தமுள்ள) தேஹிகள், மரணத்துக்குப் பிறகு வேறு சரீரத்தை யடையும் பொருட்டு (சுக்கில பீஜத்தோடு கூடினவர்களாக) யோநித்துவாரத்தை (மீண்டும்) அடைகிறார்கள்; (இவர்களைக்காட்டிலும் அதமர்களாயிருக்கிற) மற்றவர்கள், ஸ்தாவர பாவத்தை (கல் முதலான ஞானமற்ற ரூபங்களை) யடைகிறார்கள். அவரவருக்குள்ள கர்மத்திற்கேற்றவாறும் கேள்வியினாலுண்டான ஞானப்பிரகாரமும் (இவ்விதமாகிறது).

8. யாதொரு இந்த புருஷன் (ஆத்மா), (பிராணாதிதத்துவங்கள்) உறங்கும் பொழுது (அவித்தியா சம்பந்தத்தினால்) மென்மேலும் இச்சையைப் பருக்கிக்கொண்டு, விழித்துக்கொண்டிருக்கிறானோ, அவனே சுத்தவஸ்து; அதுதான் பிர்மம்; அதுதான் அமிருதம் என்றுரைக்கப்படுகிறது; அதில் எல்லா உலகத்தவர்களும் ஆசிருதர்களாக யிருக்கிறார்கள்; அதை ஒன்றும் தாண்டுகிறதில்லை. (அதிலேயே அடங்கி இருக்கின்றது); இதுதான் அது (இப்படிப்பட்ட ஆத்மாவும் அந்த பிர்மமே).

9. எங்ஙனம் ஒரே அக்னியானது புவனத்தில் பிரவேசித்து (அந்தந்த தாஹ்ய) வஸ்துவின் ரூபத்துக்குத்தக்கவாறு பிரதிரூபப் படுகின்றதோ, அங்ஙனம் ஒன்றாயிருக்கிற ஆத்மா, சர்வபூதங்களினாடேயிருந்து, அததன் ரூபப்படி பிரதிரூபமாகவும், வெளியிலும் (விகாரப்படாத ஸ்வரூபத்தை யுடையதாகவும்) இருக்கிறது.

10. (இவ்விதமே வாயு விஷயமாய் திருஷ்டாந்தம்).

11. எப்படி, உலகத்திற்கு சக்ஷுஸாயிருக்கின்ற சூரியன், (நம்முடைய) நேத்திர திருஷ்டியிலுண்டான (மூத்திர புரீஷாதி பார்வையினாலுண்டான) வெளிப்பட்ட தோஷங்களோடு சம்பந்தப் படுகிறதில்லையோ, அப்படி ஒன்றாயும், சர்வபூதாந்தராத்மாவாயும், (விபரீதபுத்தி அத்தியாஸத்துக்கு) வெளிப்பட்டதாயுமிருக்கிற பரமாத்மா உலகத்துக்கங்களுடன் சம்பந்தப்படுகிறதில்லை.

12. அவர் ஒருவரே. (எல்லோரையும்) வசப்படுத்துகின்றவர். எல்லாப்பூதங்களினுள்ளிருக்கிற ஆத்மா. ஏகமாயிருக்கிற (தன்னை), பலவிதமாக எவன் செய்துகொள்ளுகின்றானோ அவனை, ஆத்மஸ்தனாக விருக்கிறவனை, எந்த தைரியசாலிகள் பின்றொடர்ந்து பார்க்கி

ன்றார்களோ, அவர்களுக்கே சாசுவதமான சுகம்; மற்றவர்க்கில்லை.

13. எவன் அநித்திய வஸ்துக்களுக்கு நித்திய வஸ்துவாயிருக்கப்பட்டவனோ, சேதனமுள்ளவர்கட்கு சேதனத்தைக் கொடுக்கத் தக்கவனோ, ஒருவனாகவே யிருந்து பலபெயர்களுக்கு (அவ்வாவர்களுக்குத் தக்கபடி) இச்சைகளைக்கொடுக்கின்றானோ, ஆத்மஸ்தனா யிருக்கின்ற அப்படிப்பட்டவனை எந்த தைரியசாலிகள் பின்றொடர்ந்து பார்க்கின்றார்களோ அவர்களுக்கே சாசுவதமான ஒழிவு (சம்சாரத்தின் ஒழிவு); மற்றவர்களுக்கில்லை.

14. நிர்தேசிக்கப்படக்கூடாததாயும், பரமாயும், சுகரூபமாயுமிருக்கிற(பிர்மத்தை), "அதுதான் இது" என்று (குறிப்பிட்டுக்காட்டி) நினைக்கின்றார்கள் (பெரியோர்கள்). யாங்ஙனம்தையறியலாம்? எது விளங்குகின்றது? எது ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது?

15. அதினிடத்தில் சூரியன் பிரகாசிக்கின்றதில்லை; அப்படியே சந்திரனும் நக்ஷத்திரங்களும் மின்னலும்; (அங்ஙனமிருக்க) இந்த அக்கி எப்படி பிரகாசிக்கும்; எல்லாம் அதையேயனுசரித்து விளங்குகின்றன; அதினுடைய விலாஸத்தினாலே இந்த ஜகத்தெல்லாம் விளங்குகின்றது.

## ஆறாவது வல்லீ.

1. இந்த (சம்சார விருக்ஷம்) அசுவத்த விருக்ஷம் (யாண்டும் சலித்துக்கொண்டிருக்கிற சுவபாவமுள்ளது); அதற்குவேர் ஊர்த்துவம் (மேல், பிர்மம்) கிளைகள் கீழ் (ஸ்வர்க்க நரகாதிகள்); நீண்ட காலமுள்ளது; அதே (அந்தவேரே) சுத்த வஸ்து; அதேபிர்மம்; அதே அமிருதம் என்று சொல்லப்படுகிறது; அதினிடம் எல்லா உலகங்களும் ஆசிருதம்; ஒருவனும் அதைத் தாண்டுகிறதில்லை (அதனுள்ளடக்கம்); இதுதான் அது.
(வியாக்கியானத்தில் சம்சாரவிருக்ஷம் நன்றாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது அங்கு காண்க).

2 பரபிர்மம் இருக்கும்பொழுது இந்த ஜகத்தின்கண்ணுள்ள யாவும் அசைகிறது (அதனின் தொழிலை நடத்துகிறது); அதினின்றும் எல்லாம் வெளிப்பட்டது; அந்தோ! அது மகத்தான பயம். வச்சிராயுதத்தைக் கைக்கொண்டது; எவர்கள் இதை அறிகிறார்களோ அவர்கள் அமிருதர்களாகிறார்கள்.

3\. அதினிடத்தினின்றும் உண்டான பயத்தினாலே அக்னி சுடுகின்றது, சூரியன் சுடுகின்றான், இந்திரனும் வாயுவும், ஐந்தாவதான மிருத்யுவும் ஓடுகிறார்கள் (அவரவர்தொழிலை முயற்சியுடன் நடத்துகிறார்கள்).

4\. (பிர்மத்தை) அறிந்துகொள்ள இவ்விடத்திலேயே (ஜீவனுள்ளவனாயிருக்கும்போதே), சக்தியுள்ளவனாயிருந்தால், சரீரம் விழுகற்குமுன் (சம்சாரபந்தத்தினின்றும் விடுபடுகின்றான்); (அப்படி சக்தியில்லாவிடில்) அதனாலே (அறியாததினாலே) பிராணிகளிடத்திலேயும், பிருதிவியாதி உலகங்களிடத்திலேயும், சரீரத்தையடையும் பொருட்டு கற்பிக்கப்படுகின்றான் (மீண்டும் ஜனன மரணத்தை யடைகின்றான்); (ஆதலால் அதை யடைய இப்பொழுதே முயலவேண்டும்; அதனையடைவதுகஷ்டம். அஃதெங்ஙனமெனில்).

5\. கண்ணாடியில் எப்படி (பிரதிபிம்பம்) தோற்றப்படுகிறதோ, அப்படி (விவிக்தமாய்) ஆத்மாவில் (தனதாத்மாவில் தோன்றும்); எப்படி சொப்பனத்தில் தோற்றப்படுகிறதோ, அப்படி (அவிவிக்தமாய்) பிதுருலோகத்தில் (தோன்றும்); எப்படி ஜலத்தில் பிரதிபிம்பம் தோற்றப்படுகிறதோ, அப்படி (அவிவிக்தமாய்) கந்தர்வலோகத்தில் (தோன்றும்); வெய்யில் நிழல்கள்போலே (விவிக்தமாய்) பிர்மலோகத்தில் (தோன்றும்); (இப்படி பிர்ம லோகத்தில் ஸ்பஷ்டமாகத் தோன்றினும் அந்தலோகத்தை யடைகிறது மெத்த கஷ்டம்; அநேக கர்மங்கள் செய்து முடியவேண்டியிருக்கிறது; மற்றும் மேற்கூறிய உலகங்களிலோ ஸ்பஷ்டமாகத் தோற்றப்படவில்லை; ஆகையால், ஆத்மாவில் பிர்மத்தைப் பார்க்க முயற்சிசெய்யவேண்டும்).

6\. (அததன் காரணமாகிய ஆகாசாதியிடத்தினின்றும்) தனிப்பட்டுள்ள (சுரோத்திராதி) இந்திரியங்களுடைய தனித்திருக்கும் தன்மையையும், அவைகளின் உத்பத்தி நாசத்தையும் அறிந்து தைரியசாலி துக்கத்தை யடையமாட்டான்.

7\. இந்திரியங்களைக் காட்டிலும் மனஸ் பெரிது; அதைக் காட்டிலும் புத்திபெரிது; அதைக் காட்டிலும் மகத்தத்துவம் பெரிது; அதைக்காட்டிலும் அவியக்ததத்துவம் (பிரகிருதி) பெரிது.

8\. அதைக்காட்டிலும் வியாபகனும், லிங்காதிதனுமிருக்கிற புருஷன் (பிர்மம்) பெரிது; எதை அறிந்து ஜந்து (சம்சாரபந்த

த்திலிருந்து) விடுபடுகிறானோ, அமிருதத்துவத்தையும் அடைகிறானோ (அது பிர்மம்).

9. அந்த பிர்மத்தினுடைய ரூபம் திருஷ்டியில் நிற்காது; ஒருவனும் இதைக் கண் முதலான இந்திரியங்களினால் அறியமாட்டான்; அது, இருதயத்திலிருக்கிற புத்தியிலும், (சங்கல்ப விகல்பமில்லாமல் ஒழிந்திருக்கிற) மனஸினாலும், (நல்ல) மனஸினாலும் அடையப்படத்தக்கது; எவர்கள் இதையறிகின்றார்களோ அவர்கள் அமிருதர்களாகிறார்கள்.

10. எப்பொழுது ஐந்து ஞானேந்திரியங்களும் மனதுடன் (ஒழிவடைந்து) நிற்கின்றனவோ, புத்தியும் தன்வேலையை நடத்தாமலிருக்கிறதோ, (அப்பொழுது) அதை (அந்த அவஸ்தையை) பரமமான கதியென்று மொழிகின்றார்கள் (பெரியோர்கள்).

11. ஸ்திரமாயும், இந்திரியங்களின் தாரணமுள்ளதாயுமிருக்கிற இந்த (அவஸ்தையை) யோகமென்று கருதுகின்றார்கள்; அப்பொழுது (யோக விருத்தி காலத்தில்) (யோகி) ப்ரமாதத்தை யடையாதவனாகிறான் (இந்திரியங்களைக் கண்டவாறு வெளிப்படுத்துவதனாலுண்டாகும் அநர்த்தத்தை யடையாதவனாகிறான்); (ஏனெனில்) யோகமென்பது உத்பதி நாசங்களல்லவா? (இந்திரியங்கள் தங்கள் தொழில்களைச் செய்யத்துவக்குவதும் உடனே யவைகளை யடக்கிவிடுவதுமல்லவா?).

12. (ஆத்மா) வாக்கினாலாவது, மனத்தினாலாவது, சக்ஷுஸ் முதலிய விந்திரியங்களாலாவது அடையப்படத்தக்கதல்ல; "இருக்கிறது" என்று சொல்லுகிறவனைக் காட்டிலும், யாரிடத்தில் (நாஸ்திகனிடத்தில்) எப்படி அது (ஆத்மா) கிடைக்கும்.

13. (ஆத்மா) "இருக்கிறது" என்று நினைத்தால்மட்டும் தத்துவபாவரூபமாக (யதார்த்தஸ்வரூபமாக) அடையப்படத் தக்கது; (அஸ்தி, நாஸ்தி) இந்த இரண்டினுள், "அஸ்தி" யென்றே யடையப்பட்ட ஆத்மாவுக்கு (ஜீவனுக்கு) தத்துவபாவம் (வந்து) முன்னிற்கிறது.

14. (ஞானம் உண்டாகிறதற்குமுன்) புத்தியை ஆசிரயித்துக் கொண்டிருந்த எல்லாக் காமங்களும் எப்பொழுது சிதறிப் போய்விடுகின்றனவோ அப்பொழுது மனிதன் அமிருதனாய்விடுகிறான்; இவ்விடத்திலேயே பிர்மத்தை அடைகிறான் (பிர்மமாகவே ஆகிவிடுகிறான்).

15. (காமங்கள் எப்படி அற்றுப்போகுமெனின்) இவ்விடத்தில், புத்தியின் முடிச்சுகள் (அவித்தையினாலுண்டான "நான், என்சரீரம், என்தனம்" என்ற அகம் பாவங்கள்) எல்லாம், எப்போது அவிழ்ந்து போகின்றனவோ (இல்லாமல்போய் விடுகின்றனவோ), அப்போது (காமங்கள் நசிக்கும்) மனிதன் அமிருதனாகிறான். இதுவரையில் உபதேசம் (இவ்வுபதேசம் போதியது).

16. (மந்த பிர்மவித்துக்களைக் குறித்துச் சொல்லப்படுகிறதாவது) இருதயத்துக்கு (இருதயத்தினின்றும் வெளிப்படும்) நூறும் (அனேகம்), ஒன்றும் (முக்கியமாய் ஒன்றும்) நாடிகள் உண்டு; அவைகளில் (அந்த முக்கிய) ஒன்று மூர்த்தாவினின்றும் (பிளந்துகொண்டு பிர்மரந்திரத்தின் வழியாக) வெளிப்படும்படியானது (சுழும்னாநாடி); அதனால் உயரக்கிளம்பிச் சென்று (அதின் வழியாய்ப்போய், பிர்ம்மலோக முதலானவைகளையடைந்து, அவ்விடத்திலிருந்துபக்குவப்பட்டு, பிறகு, முடிவில்) அமிருதத்துவத்தையடைகின்றான்; மற்றநாடிகள் நானாவிதகதியையுடையன; உத்கிரமணத்தில் (மரணத்துக்கு) நிமித்தமாயிருக்கின்றன (சம்சாரஹேது).

17. (இந்தஉபநிஷத்தின்சாரம்யாதெனின்)புருஷன்(பிர்மம்), அங்குஷ்டமாத்திரன் (அங்குஷ்டப் பிரமாணமுள்ள இருதயத்தில் இருப்பவன்); அந்தராத்மா, எப்பொழுதும் ஜனங்களுடைய இருதயத்திலிருக்கப்பட்டவன். அப்படிப்பட்டவனை (ஆத்மாவை) தன்னுடையசரீரத்திலிருந்து, தைரியத்துடன், முஞ்சத்திநின்றும்ஈஷிகையைப்போல் (முஞ்சம்என்ற ஒருவிதமான புல்லிலிருந்து அதநடுவிலிருக்கும்சர்க்கைஎடுப்பது போல்) வெளிப்படுத்தவேண்டும். சுத்தனும்அமிருதனுமிருக்கிற அப்படிப்பட்டவனை அறியவேண்டியது.

18. (உபதேசத்துக்குப்) பிறகு, மிருத்தியுவால் சொல்லப்பட்டதினின்றும், இந்த (பிர்ம) வித்தையையும், எல்லா யோகவிதிகளையும் அடைந்து (தெரிந்துகொண்டு), நசிகேதஸானவன் விரஜனாகவும் (தர்மா தர்மங்களை விட்டவனாகவும்), விமிருத்தியுவாகவும் (காமம், அவித்தை இவைகளற்றவனாகவும்), (பிறகு) பிர்மத்தையடைந்தவனாகவும் ஆகிவிட்டான். இப்படியே, யார் அத்தியாத்மத்தைத் (ஆத்மபாவத்தை) தெரிந்துகொள்ளுகின்றனனோ அவனும் (இப்படிப்பட்ட பலனையடைவான்)

19. சாந்தி(ஏற்கனவே அர்த்தம்முதலில்எழுதப்பட்டிருக்கிறது).

கடோபநிஷத் முற்றிற்று.

உ

𑌓𑌂 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍॥

க்ருஷ்ணயஜுர் வேதத்தைச்சார்ந்த

# ஶ்வேதாஶ்வதரோபநிஷத்.

## சாந்தி.

𑌸𑌹 𑌨𑌾𑌵𑌵𑌤𑍁 𑌸𑌹 𑌨𑍌 𑌭𑍁𑌨𑌕𑍍𑌤𑍁 𑌸𑌹 𑌵𑍀𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑌵𑌾𑌵𑌹𑍈। 𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿 𑌨𑌾𑌵𑌧𑍀𑌤𑌮𑌸𑍍𑌤𑍁 𑌮𑌾 𑌵𑌿𑌦𑍍𑌵𑌿𑌷𑌾𑌵𑌹𑍈॥

𑌓𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃। 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃। 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃॥

## பாஷ்யப்ரதீகச்சுருக்கம்.

இந்த ஜீவன், ஸச்சிதாநந்தாத்விதீய பிர்மஸ்வரூபமாக விருந்தபோதிலும், தன்னைச் சேர்ந்த தனக்கு பாதியான அவித்தியையினால் எல்லா அநர்த்தங்களையுமடைந்து அவித்தியையினால் கற்பிக்கப்பட்ட பல சாதனங்களால் இஷ்டாநிஷ்டங்களையும் பெற்று, மகரம் முதலியனபோல் ராகாதிகளால் மோக்ஷமாகிற புருஷார்த்தத்தையடைய வொட்டாது இங்குமங்கும் இழுக்கப்பட்டு, தேவநரதிர்யகாதி அநேக ஜன்மங்களை யெடுத்து,பிறகு, ஏதேனும் புண்ணிய வசத்தால் அந்தந்த ஜன்மத்துக்குரிய கர்மானுஷ்டானங்களை ஈசுவரார்ப்பணமாகச்செய்து, அதனால் ராகாதிகளைப் போக்கடித்தும்,நித்தியாநித்திய வஸ்துவிவேகத்தால் இகலோக பரலோக போகங்களை வெறுத்தும், குருபதேசத்தாலும் வேதாந்த சாஸ்திர சிரவணாதியினாலும், "நானே பிர்ம்மமாயிருக்கிறே" னென்ற தத்துவத்தை யறிந்து சோகத்தை விலக்குகிறான்.

இந்த ஸ்திதியே மோக்ஷம். அது வித்தையினாற்றான். உண்டாகவேண்டியதொன்றாகவிருக்கிறது. அதற்காக உபநிஷத்சொல்லப்படுகிறது. அதை யறிந்தால் அமிருதத்துவம்—மோக்ஷம் சித்திக்கும். (அதற்கு அநேகசுருதி ஆதாரங்கள்கூறப்படுகின்றன). இவ்வாறு அநேக சுருதிகளிருப்பதாலும் ஞானத்திற்கே மோக்ஷசாதனத்துவமிருப்பதாலும் உபநிஷத் துவக்கப்படுகிறது.

மேலும் "உபநிஷத்" என்ற சப்தத்தினாலேயே, ஞானத்துக்கு மோக்ஷசாதனத்துவம் பெறப்படுகிறது. யாங்ஙனமெனின், உப, நி, ஸத்; உப, நி, இரண்டும் உபஸர்க்கம்; ஸத்என்ற தாதுவுக்கு விசரணம் (பிளக்கிறது), கதி (செல்கிறது), அபஸாதனம் (போக்கடிக்கிறது) என்று பொருள். ஸம்சாரபீஜத்தைப் பிளப்பதனாலும், பிர்மத்திடத்திற்குப் போகும்படி செய்வதாலும், கர்ப்ப ஜன்ம ஜராமரணாதிகளை யொழிப்பதாலும், "உபநிஷத்" பெறப்பட்டது.

பிர்மவித்தியை:—ஞானம் மோக்ஷசாதனமல்ல; கர்மம் மோக்ஷசாதனமாயிருக்கிறதென்று சொல்வோமாயின், அப்படியல்ல. அவ்வாறு கொள்வது சுருதிக்கும் நியாயத்திற்கும் விரோதமாயிருக்கிறது. (அங்ஙனம் விரோதமாயுள்ள பலசுருதிகள் இங்கெடுத்துதகரிக்கப்படுகிறது). எவ்விதம் நியாயவிரோதமெனில்; எதுசெய்யப்படுகிறதோ அது அநித்தியமானதால், கர்மம் அநித்தியம்; மோக்ஷம் கர்மத்தால் சாதிக்கப்படுகிறதாயிருப்பின் அப்பொழுது மோக்ஷம் அநித்தியமாகும்; மோக்ஷமோ நித்தியமானதால் நியாயவிரோதமென்று சொல்லப்பட்டது. ஆயின், எப்பொழுது கர்மமானது, பலம் வேண்டப்படாமலே ஈசுவரார்ப்பணமாக வநுஷ்டிக்கப்படுகிறதோ அப்பொழுது அக்கர்மமானது, மோக்ஷத்திற்கும் ஞானத்திற்கும் சாதனமான அந்தக் கரண சுத்திக்குச் சாதனமாகி, இவ்வாற்றால் பரம்பரையாக மோக்ஷத்துக்கும் சாதனமாயிருக்கிறது. அந்தக் கரணம் சுத்தமாயிருப்பின் மோக்ஷம்; கர்மங்களால் அந்தக் கரணம் சுத்தப்படவேண்டும். இதற்கு அநேக சுருதி ஸ்மிருதிகள் பிரமாணமுள்ளன. (அவைகள் இங்கெடுத்துக் கூறப்படுகின்றன). கர்மம் கல்மஷ க்ஷயத்திற்கு ஹேதுவாயும், ஞானம் மோக்ஷத்திற்கு ஹேதுவாயுமிருக்கிறதென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. "குர்வந்நேவ" என்றதற்றொடக்கத்து சுருதியால் கர்மம் செய்யப்படவேண்டியதென்று ஏற்படுங்கால் எவ்விதம் ஞானம் மோக்ஷத்துக்குச் சாதனமாகுமெனில்:—அங்ஙனம் கூறப்பாலதன்று; அவ்விதிகர்மத்தில் அதிகாரமுள்ளவனுக்குசொல்லப்பட்டதேயன்றி ஞானிக்கல்ல; அன்றி, மேற்படி சுருதியினால், கர்மஞ்செய்யவேண்டுமென்ற நியமமும் எடுத்துரைக்கப்பட்டதல்ல. வித்யையின் மகாத்மியத்தைக் காட்டவேண்டியதன்பொருட்டு கர்மம் முதலில் எடுத்துப்பேசப்பட்டது. ஞானி அவனாயிருள்ளவரை புண்

ணிய பாபாதி எக்கர்மத்தைச் செய்தாலும், அது அவனை யாதும் செய்ய வல்லதன்று. அங்ஙனமே ஸூத்திரக்காரரும்:—ஞானத்திற்கே மோக்ஷசாதனத்வத்தைச்சாதித்து "கர்த்ருத்வாதிஸம்ஸார தர்மரஹிதாப ஹிருத பாப்மாதி" ரூப ப்ரம்மத்தைக்குறித்து உபதேசிப்பதைக் கொண்டு, அந்த பிர்மத்தை யறிவதற்குமுன் கர்மத்திற்கதிகாரமிருப்பதாகவும், ஒன்றற்கொன்று விரோதமுமானதால், ஞானம் கர்மம் இரண்டும் சேர்ந்திருத்தல் ஒவ்வாதென்றும், ஆனால் கர்மம், அறிய வேண்டுமென்ற இச்சைக்குச் சாதனமாக விருக்கிறதென்றும் காட்டி யிருக்கின்றார். ஆதல்பற்றி மோக்ஷத்திற்குச்சாதனம் ஞானமே என்க. (ஆக்ஷேபம்) பந்தம்(ஸம்ஸாரம்) அநித்யம். அதை நிவிர்த்திக்க ஞானம் வேண்டும்: அந்தஞானத்தால் மோக்ஷமுண்டென்று எவ்வாறு சொல்லக்கூடும்: பிரபஞ்சம் நமக்கு ஸத்தியமாகத் தோன்றப்படுகிறதே, அதைப்பாதிக்க ஒன்றுமில்லையே. (சமாதானம்) தோன்றப் படுகிற யாவும் ஸத்திய மென்பது நிச்சயமன்று. யாங்ஙனமெனின், ஒரே சந்திரன் பல ஜலாசயங்களில் பல சந்திரன்களாகத் தோன்றப்படினும் அந்த சந்திரன்கள் யாவுமசத்தியமாக எவ்வாறு கொள்ளப் படுகிறதோ, அவ்வாறு பிரபஞ்சமும் அஸத்தியம். அதற்கநேக சுருதி ஸ்மிருதி ஆதாரங்கள் உள்ளன. (அவைகள் விஸ்தாரமாக இங்கெடுத்துக்கூறப்படுகின்றன). ஆதல்பற்றி பிர்மமொன்றே ஸத்திய வஸ்துவென்றும், அது நிர்விசேஷம் என்றும் அறியப்பாலது. அங்ஙனமாயின், ஸவிசேஷ பிர்மத்தைப் பற்றி அநேக சுருதிகளில் ஏனெடுத்தோதப் படுகிறதெனின், உபாஸனார்த்தம் கூறப்பட்டிருக்கின்றதேயன்றி வேறல்ல. இவ்வாறு பல சுருதி ஸ்மிருதி யுக்தி அநுபவத்தினால் பிரபஞ்சத்திற்குப் பாதித்துவமிருப்பதாலும், பிரபஞ்சத்தில் பதார்த்தங்களொன்றற்கொன்று விலக்ஷணங்களாகக் காணப்பட்டு பரஸ்பரம் அத்தியாஸம் தோன்றப்படுவதாலும், அமூர்த்தமான ஆகாசத்தில் அஃதோரிடமென்றும், கறுப்பாகவிருக்கின்றதென்றும் அத்தியாஸங்காணப்படுவது போன்று ஆத்மவஸ்துவுக்கும் அனாத்மவஸ்துக்களுக்கும் பரஸ்பரம் அவ்விதந் தோற்றப் படுவதாலும் "நான் ஸ்தூலித்துப் போனேன், நான் இளைத்துப் போனேன்" என்றுபேசுவதைக் கொண்டு தன்னைத் தேகமாக அத்தியாஸப் படுத்திக் கொள்ளுகிற அநுபவ மிருப்பதாலும், அந்த அத்தியாஸத்தை யொழிக்க ஞானம் வேண்டுவதவசியம். அந்தஞானமுண்டாகும்பொருட்டு உபநிஷத்தொடங்கப்படுகிறது.

இவ்வுபநிஷத் சாந்தியின் பொருள்தைத்திரீயோபநிஷத்28-ம் பக்கத்திலிருப்பதைக் கண்டுகொள்க.

## முதல் அத்தியாயம்.

ஸ்ரீ பிர்மவித்துக்களோரிடங்கூடி, ஒருவர்க்கொருவர் அடியிற்கண்டபடி பிரச்னம் செய்துகொண்டார்கள். "இந்த ஜகத்திற்குக் காரணம், பிர்மமா? (அல்லது இனிக் கூறவெழுங் காலம் முதலியதா? அல்லது காரணமே இல்லையா? அல்லது காரணமெவ்வாறானது? அதாவது உபதானமா, நிமித்தமா? அல்லது இரண்டுமா?), நாம் எதினின்றும் உண்டானோம்? எதனால் பிழைத்திருக்கிறோம்? முடிவில் எதிலே பிரதிஷ்டிக்கப்படுகிறோம்? சுகதுக்கங்களுள் எதனாலேவைப்பட்டிருக்கின்றோம்? பிர்மவித்துக்காள்! கூறுமின்" என்று.

2\. காலமா? (எல்லாவற்றினுடைய முடிவுக்கு ஏதுவாயிருக்கிற காலமா?) சுபாவமா? (அக்னிக்கு உஷ்ணம் போல் பதார்த்தத்தின் தன்மையா?) நியதியா? (புண்ணியபாபலக்ஷணமான கர்மம?) அல்லது எதிர்ச்சையா? (அகஸ்மாத்தாக சம்பவிக்கிறதென்பதா?). அல்லது விக்ஞான மயனாயிருக்கிற ஜீவனா, காரணம்? என்று யோசிக்குங்கால், இவைகளுள் ஒன்றேனுங் காரணமல்ல, இவைகள் யாவும் சேர்ந்தும் காரணமன்று; ஜீவனும் சுவதந்திரமில்லாதவனையும், சுகதுக்கங்களுக்குட்பட்டவனையுமிருப்பதால் காரணமல்ல.

3\. பிர்மவித்துக்கள், இவ்வாறு தியானயோகத்தால் ஆலோசித்துப்பார்த்து, எவர் ஒருவராகவேயிருந்து, மேற்சொன்ன காலம் முதலியன வெல்லாக் காரணங்களையும் நடத்தி வைக்கின்றனரோ, அந்த பிர்மாத்மாவினுடையதும், தன்குணங்களாகிற காரியபூதங்களான பிருதிவி முதலிய வைகளால் மறைக்கப்பட்டிருக்கிறதுமான சக்தியே காரணமென்று கண்டார்கள் (அறிந்தார்கள்).

4\. (பிர்மம் ஓர் சக்கிரமாக வர்ணிக்கப்படுகிறது). (மாயை, பிரகிருதி, சக்தி, தமஸ், அவித்தை, சாயை, அக்ஞானம், அகிருதம், அவ்வியக்தம் முதலிய பெயர்களையுடையதாய் யாவற்றிற்கும் காரணமாயும் ஆதாரமாயுமிராநின்ற மேற்படி பரமாத்மாவினுடைய சக்தியாகின்ற) ஓர் நேமி—அச்சையுடையது; மேற்படி சக்தியின் சத்வ, ராஜஸ், தமஸ் என்ற முக்குணங்களால் வளைக்கப்பட்ட குடமுள்ளது; பதினாறு (பூதங்கள் 5, அந்தக்கரண முள்பட இந்திரியங்கள் 11; ஆக 16 விகாரங்கள்; அல்லது உலகங்கள் 14; விராட் 1; சூத்திராத்மா 1; 16) காரியங்களாகின்ற விஸ்தார முடிவுடையது; பிரத்யங்கள் (தோற்றங்கள், அபிப்பிராயங்கள்) ஆகி

ன்ற 50 ஆரங்களையுடையது. (அவைகள் இதனடியிற்கூறப்படும்). (10 இந்திரியங்கள்; அவைகளில்--10 விஷயங்கள். ஆக) 20 பிரதி ஆரங்களையுடையது. (பிருதிவி, ஜலம், அக்நி, வாயு, ஆகாசம், மனஸ், புத்தி, அகங்காரம் ஆக 8 பிரகிருதிகள்; மேல்தோல், உள்தோல், மாம்சம், இரத்தம், ஊன்ஜலம், பெலும்பு, அதற்குள்ளிருக்கிற மஜ்ஜை, சுக்கிலம் ஆக 8 தாதுக்கள்; அணிமா (சிறிதுத்தன்மை) மகிமா (பெரிதுத்தன்மை) கரிமா (கனத்தன்மை) லகிமா (இலகுத்தன்மை) பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆக 8 ஐசுவரியங்கள்; தர்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதர்மம் அக்ஞானம், அவைராக்கியம், அனைசுவரியம், ஆக 8 பாவங்கள்; பிர்ம்மா, பிரஜாபதி, தேவ, கந்தர்வ, யக்ஷ, ராக்ஷஸ, பிதிரு, பிசாச ஆக 8 தேவர்கள்; தயை, க்ஷாந்தி [பொறுமை] அனஸூயை [பிறரிடம் அசூயைப்படாமலிருத்தல்] அசௌசம், அநாயாசம், மங்களம், அகார்ப்பாண்யம், அஸ்பிருஹா ஆக 8 குணங்கள்; ஆக) நாற்பத்தெட்டு பிரகிருதி முதலியவைகளாகிறவட்டைகளால் வளைக்கப்பட்டது; [நாநாரூபமான காமியம், ஆசையென்ற] ஒரே கயிற்றை [சுற்றுப்பட்டையை] யுடையது; [பாபபுண்ணியமாகின்ற] இரண்டு நிமித்தம்; (தேகேந்திரியம் முதலான அநாத்மாக்களிடத்தில் ஆத்மாபிமானம் வைப்பது) மோகமாகிற ஒரு பிரமணமுடையது (சுற்றுதலுடையது) (இப்படிப்பட்ட ஆத்மசக்கிரத்தைத் தியானம் செய்கின்றோம்). (மேற்கண்ட 50 பிரத்தியயங்களாவன: 5 விபரியயங்கள்—வித்திபாஸ பேதங்கள்; தமஸ்; மோகம்; மகாமோகம்; தாமிசிரம்; அந்த தாமிசிரம்;

தமஸ், 8 விதம்; அஷ்ட 8 பி[illegible]திகி முதலான பிரகிருதிகளிடத்தில் ஆத்மபிரதீதியுண்டாவது [illegible] வித தமஸ்;

மோகம் 8 விதம். 8 ஐசுவரி[illegible]களில் மோகம் வைப்பது.

மஹாமோகம் 10 விதம்; காணப்[illegible]ட்டது 5; கேட்கப்பட்டது 5, சப்தாதி விஷயங்கள் 10 இல் அபிநிவேசம், மகாமோகம். தாமிசிரம் 18 விதம்; மேற்கண்ட விஷயங்க[illegible]ள் 8 ஐசுவரியங்களால் பிரயத்தனம் செய்து காரியம் சித்திக்[illegible]விடில் அதனாலுண்டாகும் கோபம் தாமிசிரம்;

அந்த தாமிசிரமும் 18 விதம்; மேற்கண்டபடி பிரயத்தனம் செய்து பலனுண்டாகி அதைப்புஜிக்கின்றபோது மரணகாலம் சமீபி

த்நுவிட்டால் அப்பொழுது உண்டாகும் சோகம், அந்த தாமிசசம்.

28 சக்திகள்; இந்திரியங்களுடைய பார்வை முதலான பாவ சக்திகள் 10; அந்தகம் முதலான அபாவசக்திகள் 10; அந்தக்கரண த்திற்குப் புருஷார்த்த யோக்கியதையுள்ள ஸித்திகளுடைய வித்தி யாசத்தால் சக்திகள் ௮; ஆக 28 சக்திகள்.

9 துஷ்டிகள்; பிரகிருத்தியாதி 4; விஷயோபாபங்கள் 5. ஆக 9. அவைகளாவன:—

1. பிரகிருதி பரிஞானமுண்டாகி நாம் கிருதார்த்தனுகி விட்டோமென்று நினைப்பது பிரகிருதி துஷ்டி.
2. ஆசிரமாதியைப் பெற்று சந்தோஷப்படுவது உபாதான துஷ்டி.
3. யாதாமொரு காலத்தில் முக்தி நமக்கு அவசியம் கிடைக்குமென்று சந்தோஷப்படுவது காலதுஷ்டி.
4. பாக்கியமின்றி ஒன்றுமில்லை, அதனுல் இவ்விடமே மோக்ஷமென்று சந்தோஷப்படுவது பாக்கியதுஷ்டி.
5. விஷயங்களைச் சம்பாதிப்பது அசக்கியம் ஆனதால் அது வேண்டாமென்று ஒழிவடைவது ஒருவித துஷ்டி.
6. அவைகளைக் காப்பாற்றுவது வருத்தமென்று ஒழிவடைவது ஒருவித துஷ்டி.
7. அவைகட்குத் தோஷமிருப்பதால் வேண்டாமென்றொழிவுறுவது ஒருவித திருப்தி.
8. அவை கிடைத்தால் மென்மேலும் ஆசையைக் கொடுக்கின்றன; ஆதலால் அவைகளின் சங்கம் வேண்டாமென்று ஒழிவடைவது ஓர்வித திருப்தி.
9. அவைகளைச் சேர்ந்தால் பாஹிம்சாதி தோஷம் சம்பவிப்பதால் வேண்டாமென்றொழிவடைவது ஓர்வித திருப்தி ஆக 9.

8. ஸித்திகள்:—

1. ஊஹம் என்பது உபதேசமின்றிஜந்மாந்திர சம்ஸ்காரவசத்தால் உண்டாகும் தத்துவஞானம்.
2. சப்தம் என்றது சாஸ்திரவாராய்ச்சியின்றி கேள்வியினுலுண்டாகும் ஞானம்.
3. அத்தியயநம் சாஸ்திரவாராய்ச்சியினுலுண்டாகும்ஞானம்,

4. ஆத்தியாத்மிக வருத்தத்தை சகிப்பதாலுண்டாகும் ஞானம்.

5 ஆதிபௌதிக வருத்தத்தை சகிப்பதாலுண்டாகும் ஞானம்.

6. ஆதிதைவிக வருந்தத்தைசகிப்பதாலுண்டாகும் ஞானம்.

7. சுகிருத்பிராப்தி, குருவையடைவதாலுண்டாகும்ஞானம்.

8. தானம், ஆசாரியருக்குரித்தான வஸ்துதானத்தினாலுண்டான ஞானம். ஆக 8 சித்திகள்;

ஆக 50 பிரத்தியயங்கள்).

5. (பிர்மம் ஓர் நதியாக வர்ணிக்கப்படுகின்றது) (5 ஞானேந்திரியங்களாகிற) ஐவகைஜலங்களுள்ளது; ஐந்துகாரணங்களாகிற பஞ்சபூதங்களில் உக்கிரமாயும் வக்கிரமாயுமிருக்கின்றது. பிராணன்களாகிற ஐந்து அலைகளுள்ளது; சக்ஷுராதி ஐஞ்யமாகிற 5 புத்திகளுக்குக்காரணமாகிய மனதை மூலமாகவுடையது; சப்தாதிவிஷயங்களாகிற 5 சுழல்களுள்ளது; கர்மம், ஜன்மம், ஜரை, வியாதி மரணமாகிற 5 துக்கங்களாகிற வேகமுடையது; அவித்யை அஸ்மிதை, ராகம் த்வேஷம்,, அபிநிவேசம் என்ற கிலேசங்களாகிற 5 பர்வங்களுடையது. இப்படிப்பட்ட நதியை தியானம் செய்கிறோம்.

6. யாவற்றிற்கும் ஜீவஸ்தானமாயும், லயஸ்தானமாயும், பெரியதாயுமிருக்கிற இந்த பிர்மசக்கிரத்தில் ஜீவன் தான் வேறென்றும் ஈசுவரன் வேறென்றும் பிரமித்துக்கொள்வதினாலும் அநாத்மாவாகிய தேகாதியை தானென்று நினைப்பதினாலேயும் சுராதிரியக் முதலான பலவித போகிகளில் ஜனித்தும், மரித்தும், சுழன்று மிருக்கிறான்; பிறகு பரமாத்மா தானென்று அறிவதினால் மோக்ஷத்தையடைகிறான்.

7. (ஸபிரபஞ்சமாக பிர்மம் சொல்லப்பட்டது; அதையறிவதனால் மோக்ஷம் சித்திக்குமாவென்ற ஆசங்கைநிகழ அற்றன்று என்று நிரூபிக்கப்படுகிறது. பிர்மம்; அநேக சுருதிகளால் உபதேசிக்கப்பட்ட உத்கிருஷ்டமான வஸ்து; அதிலே போக்தா, போக்கியம், பிரேரிதா அல்லது விசுவன், தைஜஸன், பிராணன் என்ற இம்மூன்றும் பிரதிஷ்டிதமாகவிருக்கின்றன, அத்தியாஸம் செய்யப்படுகிறது). மேலும், அந்த பிர்மம் அக்ஷரவஸ்து. நாசமற்றது.

பிரபஞ்சத்திற்கு உள்ளேயிருக்கிற அந்த வஸ்துவை பிர்ம்ம வித்துக்கள் அறிந்து அதில் லீனர்களாகவும் அதிலேயே தியானபரர்களாகவும் இருந்து சம்ஸாரத்தினின்று விடுபடுகிறார்கள்.

8. (ஜீவேசுவரர்களுக்குஉண்மையில் பேதமிராவிடினும், விபவகாரதசையில் பேதத்தை எடுத்துவிளக்கி அங்ஙனம் அறிவதல் அமிருதத்துவம் உண்டாகிறதென்று காட்டப்படுகிறது). வியக்தம், விகாரப்பட்டகாரியம்; அவ்வியக்தம், காரணம்; வியக்தம், நாசமடைகிறது; அவியக்தம், அவிநாசி; இவ்விரண்டும் சேர்ந்த இந்தபிரபஞ்சத்தை, ஈசுவரன் (பரமாத்மா) பரிக்கிறார், தாங்குகிறார்; அநீசன், ஜீவனும் நாங்குகிறன்; ஆனால் இந்த ஜீவன் அவித்யாதத்காரிய பூததேஹேந்திரியாதிகளால் கட்டுப்படுகிறன். போக்திருத்வபாவமிருப்பதனுல் பிறகு உபாதிரஹிதமான பிர்மமாயிருப்பதாக தானேயறிந்து எல்லா பாசங்களினின்றும் விடுபடுகிறன்.

9. (இன்னும் பேதம் காண்பிக்கபபடுகிறது). ஞ:, ஈசுவரன்; அஞ:, ஜீவன், இவ்விருவரும், பிறப்பு முதலானது அற்றவர்கள். இன்னும்மொருவளிருக்கிறள். அவள் மாயை; அவளும் பிறப்பு முதலானதும் அற்றவள்தான்; போக்திரு போகியார்த்தத்துடன் சேர்ந்தவள். இம்மூன்று பேர்களில் ஈசுவரன் அநந்தராயும் (தேசகாலவஸ்து இம்மூன்றுவித பேதங்களினல் பரிச்சேதமற்ற) விசுவரூபராயும் அகர்த்தவராயுமிருக்கிறர்; இவ்வாறு மூன்றையும் அறியும்பொழுது ஸாதகன் மோக்ஷத்தையடைகிறன்.

10. (இப்பொழுது மாயைக்கும், ஈசுவரனுக்கும் பேதம் நிருபிக்கப்படுகிறது). பிரதானம் (மாயை) க்ஷரம், நாசமடையும்; ஹர: (அவித்யாதிகளை நசிக்கச்செய்கிறவர்) ஈசுவரன், அமிருதாக்ஷன். இந்த ஏகனுயிருக்கிற ஈசுவான் மாயையும் ஜீவனையும் நடத்துகிறர். அப்படிப்பட்ட வஸ்துவை தியானிப்பதினுலும், நானே பிர்மம் என்று யோஜிப்பதினுலும், அப்படி அடிக்கடி யறிவதினுலும் விசுவரூபமான மாயைக்குநிவர்த்திஉண்டாகி மோக்ஷம் கிடைக்கும்.

11. அத்தகைய தேவனையறிந்தால் அவித்தியாதி பாசங்கள் யாவும் அற்றுப்போகும்; அவித்தியாதி கிலேசங்களுடன் அவைகளின் காரியமான ஜன்ம மிருத்யு முதலானவைகளும் நாசமுறும்; அந்த பரமேசுவரனை தியானம் செய்வதால், தேகமழிந்த பிறகு

அர்ச்சிராதி மார்க்கத்தின் வழியாய், விராட் ஆகிற மூன்றாவது ஸ்வரூபத்தையடைந்து, எல்லா ஐசுவரியத்தையும் பெற்று அதாவது ஸ்வர்க்காதிபோகங்களை யனுபவித்து அங்கிருந்தபடியே அவைகளையெல்லாம் ஒழித்து ஆப்தகாமனாய் கேவலமாய் பூர்ணனந்த அத்துவிதீயமாயிருக்கிற பிர்மமாகி விடுகிறான்.

12. (எதனால் பரமபுருஷார்த்த முண்டாகிறதோ, அது இதுவென்று அறியப்படவேண்டியது). இவ்வாறு பெறப்பட்ட கேவலாத்மா, நித்தியம் அறியப்படவேண்டியது; தன்னாத்மாவிலேயே இருக்கிறது; அறியவேண்டியது இதைக்காட்டிலும் வேறொன்றுமில்லை; ஜீவன், ஜகத், ஈசுவரன் இம்மூன்றும் அறியப்படின் பிர்மம் அறியப்படும்.

13. அரணிக்கட்டையிலிருக்கிற அக்கி எப்படி காணப்படவில்லையோ, கடைந்தபிறகு எப்படி காணப்படுகிறதோ, அப்படி, ஆத்மா தன்தேகத்தில் அறியப்படவில்லை. தியானத்தால் கடைந்து பார்த்தால் புலப்படும்.

14—15. (எவ்விதம் கடைகிறதெனின்) தேகமாகிற கீழ் அரணியில் பிரணவமாகிறமேல் அரணியைக்கொண்டு, தியானமாகிற மத்தினால் கடைருக. மறைந்திருக்கிற வெண்ணையாகிற தேவன் வெளிப்படுவான். (இன்னும் எவ்வாறெனில்) எள்ளுக்குள் எண்ணைப் போலும் தயிருக்குள் நெய்போலும், ஊற்றினுள் ஜலம் போலும், அரணிக்குள் அக்கிபோலும், மறைந்திருக்கிறது. அது சத்திய மார்க்கத்திலிருக்கப்பட்டவனால் தபசால் (தியானத்தால்) பார்க்கப்படுகிறது.

16. (எப்படி பார்க்கிறான் என்றால்) க்ஷீரத்தில் நெய் வியாபித்திருப்பதுபோல் ஆத்மாவை ஸர்வவியாபியாயும் ஆத்மவித்தையாகிற தபசுக்குக் காரணமாயும் உபநிஷத்தினால் அறியப்படும் வஸ்துவாயுமறிகிறான்.

---

## இரண்டாவது அத்தியாயம்.

1 (தியானத்திற்குச் சாதனம் அதாவது யோகவிஷயங் கூறப்படுகிறது) சூரியதேவரானவர் தியானாரம்பகாலத்தில் மனதை பிர்மத்தினிடத்தில் பொருத்தச் செய்து, அக்னி ஜோதியைக் காட்டி, சரீரத்திலுள்ள புத்திகளை வெளிப்பட்டவிஷயங்களினின்று இழுத்து விடட்டும் (புத்தியை அடக்கட்டும்).

2. அப்படி சூரியனுடைய அனுக்கிரகம் இருக்கும் போது அடக்கப்பட்ட மனதால் நாம் பிர்மப் பிராப்திக்கு சக்தர்களாக ஆகுவோம்.

3. ஸவிதாவானவர், மனஸை அடக்கி, மனஸ் முதலான கரணங்களை பிர்மசுகத்தையடையத்தக்கதுகளாகவும், திவ்யமான பிரஹத்ஜோதியைப் பார்க்க ஸாமர்த்தியமுள்ளதுகளாகவும் செய்யட்டும்.

4. எவன் மனதையும் மற்ற கரணங்களையும் அடக்கிறானோ அந்த விப்ரன், வியாபகராயும், பெரியவராயும் சர்வக்ஞராயுமிருக்கிற ஸவிதாவினுடைய அநுக்கிரகத்தை முதலில் சம்பாதிக்க வேண்டும்.

5. பிர்மம் உங்களைச் சேரட்டும்; நமஸ்காரங்களால் சுலோகங்கள் வரட்டும். திவ்விய தாமாவிலிருக்கப்பட்டவர்களான எல்லா பிர்மபுத்திரர்களும் இதைக் கேழ்க்கட்டும்.

6. எதில் அக்னி கடையப்படுகிறதோ, எதில் வாயு அடக்கப்பட்டு சப்தங்கள் எழுந்து சொல்லப்படுகிறதோ, சந்திரன் எதில் அதிகரிக்கப்படுகிறதோ, அந்த யக்ஞ கர்மத்தில் மனது பிரவிர்த்திக்கிறது. (அதாவது யோகத்துக்காக முதலில் மனஸ் கர்மத்திலே பிரவிர்த்திக்கிறது).

7. சிரந்தனமாயிருக்கப்பட்ட பிர்மத்தை, சூரியனுடைய அநுக்கிரகத்தால் ஸேவிக்கவேண்டும். அந்த பிர்மத்தினிடத்தில் நிஷ்டையை அதாவது தியானத்தைச் செய்யவேண்டும். அப்படி நீ செய்வாயாகில் பூர்வமாயிருக்கிற கர்மங்கள் உன்னைத் தொடமாட்டாது.

8. மார்பு, கழுத்து, தலை இம்மூன்றுகளையும் உன்னதமாயுடைத்தாயிருக்கிறதும் சமமாயிருக்கிறதுமானசரீரத்தைஸ்தாபனஞ்

பிரணவமென்ற தோணியினால் பயங்கரங்களான எல்லா சம்ஸாரநதிகளையும் விவேகி கடக்கவேண்டும் (தாண்டுவானாக).

9. விவேகியானவன், பிராணவாயுக்களை அடக்கிச் சரியான நடத்தையுள்ளவனாக (அதாவது மிதபோஜனம் முதலியன கைக்கொண்டவனாக) பிராணவாயு குறைந்தால் மூக்கினால் சுவாசம் விடுகிறவனாக, மதாஹிதனாக, குதிரைகளுள்ள ரதத்தைப்போல் இம்மனதைத் தரிக்கவேண்டும்.

10. ஸமபூமியிலும், சுத்தமானவிடத்திலும், பொடிக்சல், மணல், அக்கி, சப்தம், ஜலம், கட்டிடம் இவைகளில்லாத விடத்திலும் மனதிற்கு அனுகூலமும், பார்வைக்குப் பீடனமில்லாததும் ஏகாந்தமாயும், காற்றில்லாதவுமான இடத்திலும், பரமாத்மாவிடத்தில் சித்தத்தைச் செலுத்தவேண்டும்.

11. இவ்வாறு யோகம் செய்கிறவனுக்கு பனி, புகை, சூரியன், வாயு, நெருப்பு, மின்மினிப்பூச்சி, மின்னல், ஸ்படிகம், சந்திரன் இவைகளுடைய ரூபங்கள் பிர்மத்தைக் காட்டுவன போன்று முதலில் பார்வைக்குப்புலப்படும்.

12. பஞ்சாத்மகமாயிருக்கிற யோககுணம் பிரவிர்த்திக்குங்கால், பிரதிவி, அப், தேஜஸ், வாயு, ஆகாசம், இவைகள் வெளிப்பட உண்டாகும். அப்பொழுது அப்படிப்பட்ட யோகாக்னிமயமான சரீரத்தையுடையவனுக்கு ரோகமும் இல்லை, ஜரையுமில்லை, துக்கமுமில்லை.

13. பளுவின்றியிருத்தல், ரோகமில்லாமலிருத்தல், ஆசையற்றிருத்தல், தேகம் வடிவுள்ளதாயிருத்தல், தொனிரம்மியமாயிருத்தல் நன்னாற்றமாயிருத்தல், சுபமாயிருத்தல், மூத்திரபுரீஷம் அல்பமாயிருத்தல் முதலியனவைகளை யோகப் பிரவர்த்தி யென்று கூறுகிறார்கள்.

14. தங்கம் அல்லது வெள்ளியால் செய்யப்பட்ட ஓர்பிம்பம் எப்படியோ, முதலில் மண் முதலான பூச்சினாலே மலினமாகவிருந்து பிறகு அக்கி முதலியவற்றால் தேஜோமயமாயும் வெளுப்பாயும் விளங்குகிறதோ, அப்படி அந்த ஆத்மதத்துவத்தை தேகியானவன் பார்த்து, ஏகனாயும், கிருதார்த்தனாயும், சோகமற்றவனாயும் ஆகிறான்.

15. யோகி தன் ஆத்மதத்துவத்தினால் பிரமதத்துவத்தை தீபத்தை தீபத்தாற்போல் எப்பொழுது பார்க்கிறானோ, அப்பொழுது அஜனும் துருவனும், ஸர்வதத்துவங்களால் விசுத்தனுமிருக்கிற தேவனையறிந்து, ஸர்வபாசங்களினின்றும் விடுபடுகிறான்.

16. இந்த தேவனே திக்கு, மூலை திக்கு முதலியன; முன் உண்டானவன்; கர்ப்பத்திலிருக்கிறவன்; உண்டான சிசு, இனி ஜனிக்கப்போகிறவனுமாக விருந்தபோதிலும், எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியேகமாய்த்தனிப் பட்டுநிற்கிறான், எல்லாப் பிராணிகளுடையமுகமாகவுமிருக்கிறான்.

17. எந்த தேவன் அக்கினியிலும் ஜலத்திலும் விச்வபுவனத்திலும், ஓஷதிகளிலும், விருக்ஷங்களிலுமிருக்கிறானோ, அந்த தேவனை நமஸ்காரம் செய்கிறேன், நமஸ்காரம் செய்கிறேன்.

## மூன்றாவது அத்தியாயம்.

1. எவன் ஒருவனாகவே மாயாவியாகத் தன் சக்திகளினால் ஈசுவரனாக ஆளுகிறானோ; அந்த தேவனை எவர்கள் அறிகிறார்களோ அவர்கள் மரண ரஹிதர்களாக ஆகிறார்கள்.

2 (எப்படி மாயாவி என்பதற்கு) யாது காரணமெனின், ஒரே ருத்திரன்; ஞானிகள் அவனைத் தவிர இரண்டாவதாக ஒன்றையும் பார்க்கவில்லையோ; எவன் தன் சக்திகளால் எல்லா ஜனங்களையும் நியாமகம் செய்கிறானோ, அப்படிப்பட்டவனும், ஜனங்களுக்கு வேறானவனும், எல்லா புவனங்களையும் சிருஷ்டித்து, ரக்ஷித்து அந்தகாலத்தில் இழுத்துக் கொள்ளுகிறவனுமிருக்கிறான்.

3. எங்கும்கண்களுள்ளவராயும், எங்கும் முகமுள்ளவராயும் எங்கும் கைகளுள்ளவராயும், எங்கும் பாதங்களுள்ளவராயுமிருக்கிற ஒரே தேவன், பூமியையும், ஆகாசத்தையும்சிருஷ்டித்து மனுஷியர்களைக் கைகளுடனும், பக்ஷிகளை சிறகுகளுடனும் சேர்த்து வைத்தார். (அதாவது) அததற்குத்தக்க வாற்றலையளித்தார்.

4. எவர் தேவர்களுக்கு உத்பத்தி காரணராயும், சக்தியைக் கொடுக்கிறவராயும், விசுவத்தை பரிபாலிக்கிறவராயும், ருத்திரனாயும், சர்வக்ஞராயும் இருந்து பூர்வத்தில் ஹிரணிய கர்ப்பனை சிருஷ்டித்தனரோ! அவர் நம்மை நற்புத்தியுடையவர்களாக வனுக்கிரஹிக்கட்டும்.

5. ஹே ருத்திர! கிரியிலிருந்து சுகத்தைப் பயக்கும் ஈச! யாதொரு உம்முடைய மங்களகரமாயும், கோரமில்லாததாயும், புண்ணியத்தைக் கொடுக்கிறதாயுமிருக்கிற தேகமுண்டோ, அந்த அத்தியந்த மங்களகரமாயிருக்கிற தேகத்துடன் எங்களை நோக்குக (கடாக்ஷம் செய்யும்—கிருபை செய்யும்).

6. ஹே கிரிசந்த! ஹே கிரித்ரா! சந்தாநம் செய்யும் பொருட்டு எந்த பாணத்தைக் கையில் தரித்துக் கொண்டிருக்கிறீரோ அந்த பாணத்தைமங்களமாகச்செய்யும்; புருஷனையும் ஜகத்தையும் ஹிம்ஸிக்காதொழிக.

7. பிரபஞ்சத்துக்கு வேறாயும், பிர்மாவுக்கு வேறாயும், பெரிதாயும், சரீரந்தோறும், சர்வபூதங்களிடத்திலும்மறைந்திருக்கிறதாயும், பிரபஞ்சத்துக்கு ஒரே ஆவரண பூதமாயுமிருக்கிற அந்த ஈசனையறிந்து அமிருதர்களாக ஆகிவிடுகிறார்கள். (இது காரணத்து மனுவஸ்தானம்).

8. இந்தபுருஷனை மகானாகவும், பிரகாசரூபமுள்ளவனாகவும் அக்ஞானத்துக்குப் புறம்பாயிருக்கிறவனாகவும் நான் அறிகிறேன். அவரையே அறிந்து மிருத்தியுவைத்தாண்டுகிறானே அவனுக்கு மோக்ஷத்தின் பொருட்டு வேறு வழியில்லை.

9. எதைக் காட்டிலும். சிரேஷ்டவஸ்துவாவது, கீழ்பட்ட வஸ்துவாவதில்லையோ, எதைக் காட்டிலும் பெரிய வஸ்துவாவது சிறிதாவது இல்லையோ, எது விருக்ஷம் போல் ஆகாயத்தில் நிற்கிறதோ, அந்தப் புருஷனால் எல்லாம் நிறைந்திருக்கின்றன.

10. காரிய ரூபமாயிருக்கிற ஜகத்துக்கும் அதற்குக் காரண ரூபமாயிருக்கிற ஈசுவரனுக்கும் வேறாயிருக்கிறதும்; ரூபாஹிதமாயும், தாபத்திரய ரகிதமாயுமிருக்கிறது எதுவோ, அதை அறிந்தவர்கள் அமிருதர்கள். மற்றவர்கள் துக்கமாகிற சம்சாரத்துவத்தையடைகிறார்கள்.

11. எல்லா முகங்களையும், தலைகளையும், கழுத்துக்களையும் உடையவராயும் எல்லாப் பிராணிகளுடைய புத்தியிலிருக்கப்பட்டவராயும் ஸர்வவியாபியாயும், பகவானாயும், சிவனிருக்கிறபடியால் அவரை சர்வகதனென்று சொல்லப்பட்டது. (பகவான் என்பதற்கு அர்த்தம்:—எல்லா ஐசுவரியத்தையும், வீரியத்தையும், யசஸையும், ஸ்ரீயையும், ஞானத்தையும், வைராக்கியத்தையும்உடையவர்

12. (இன்னும் எத்தன்மைத்தானவரெனின்) மகான், ஸமர்த்தர் (உதய ஸ்திதி சம்ஹாரவிஷயத்தில்); அந்தக்காரணத்துக்கு பிரவர்த்தகர் ஸுநிர்மலமாயிருக்கிற பரமபதப்பிராப்தியைக்கொடுக்கிறவர்; பரிசுத்தர்; நாசமில்லாதவர்.

13. அங்குஷ்டப் பிரமாண முள்ளவர் (அங்குஷ்டப் பிரமாணமுள்ள ஹ்ருதயத்திலிருப்பதால் அவருக்கு அந்தப் பிரமாணம் சொல்லப்பட்டது); பூர்ணன்; யாவருள்ளத்து மிருக்கப்பட்டவர்; எப்பொழுதும் எல்லாருடைய இருதயத்திலு மிருக்கப்பட்டவர்; ஹ்ருதயஸ்தமாயிருக்கிற மனதால் மறைக்கப்பட்டிருக்கிறார்; ஞானேசன்; இவ்வாறாக எவர்கள் அறிகிறார்களோ அவர்கள் அமிருதர்கள்.

14. (இன்னும் எத்தகைமையுள்ளவர்) அநேக சிரஸுகளையுடையவர், பூர்ணர். அநேக நேத்திரங்களையுடையவர்; அநேக பாதங்களையுடையவர்; புவனமனைத்தும் வியாபித்து பத்து அங்குலப் பரிமாணத்துக்கு மேலாக விருக்கிறார் (அதாவது, எல்லாவற்றிலும் வியாபித்தும் எல்லாவற்றிற்கும் வேறாயுமிருக்கிறார்; அல்லது நாபிக்கு பத்து அங்குலத்துக்கு மேலிருக்கிற ஹ்ருதயத்திலிருக்கிறவர்).

15. எது அன்னத்தினால் மறைக்கப்படாமலிருக்கிறதோ, அதாவது இப்போது காணப்படுகிறதோ), எது உண்டாயிற்றோ, எது உண்டாகப் போகிறதோ, அந்த இது எல்லாம் இந்தப் புருஷன்தான் மோக்ஷத்துக்கு ஈசுவரன்.

16. எங்கும் கைகளுள்ளவர்; எங்கும் கண், தலை, முகமுள்ளவர்; எங்கும் காதுள்ளவர்; லோகமுழுதும் சுழன்றுகொண்டு நிற்கிறார்.

17. (இவரை) எல்லா இந்திரியங்களையும் பிரகாசப்படுத்துகிறவராயும் எல்லா இந்திரியமில்லாதவராயும் யாவற்றிற்கும் பிரபுவாயும், ஈசனாயும் யாவற்றிற்கும் பெரிதான இடமாயும் மகத்தான காரணமாயும் (அறியவேண்டும்.)

18. ஒன்பது துவாரமுள்ள பட்டணமாகிய தேகத்தில் தேகியாகிய, பரமாத்மா, ஜீவாத்மாவாகவும், ஸ்தாவர ஜங்கமாத்மகமாயிருக்கிற எல்லா ஜகத்தையும் வசியப்படுத்துகிறவராயும் இருந்துகொண்டு, வெளியில் அசைகிறார்.

19. பாதமற்றவர், விரைவாகச் செல்கிறவர்; கரங்களற்றவர்; கிரகிக்கக்கூடியவர்; கண்களில்லை, பார்க்கிறவர்; காதில்லை, கேட்கிறவர்; அறியவேண்டியதை அறிகிறவர்; இவரை அறிகிறவனில்லை; இவரை முதலாவது மகாபுருஷனாகச் சொல்லுகிறார்கள்.

20. அணுவைக் காட்டிலும், அணு; பெரிதைக்காட்டிலும் பெரிதாக, இந்த ஜந்துடைய இருதயத்தில் ஆத்மா இருக்கிறார்; இப்படிப்பட்ட விஷயபோக சங்கற்ப ரஹிதராயும், மகாநுபமிருக்கிற ஈசனை, ஈசுவரனுடைய (அல்லது இந்திரியங்களுடைய) அநுக்கிரகத்தால், சோகமில்லாதவன் பார்க்கிறான்; (அதாவது ஒருவன் பார்த்தால் அவனுக்கு சோகம் கிடையாது)

21. (இன்னும் எத்தன்மைத்தவர்) இவரை. ஜரையில்லாதவரென்றும், புராதனரென்றும், சர்வாத்மாவென்றும், விபுத்துவத்தால் எங்கும் நிறைந்தவரென்றும், எவருக்கு உத்பத்தியும் அபாவமுமில்லையென்று பெரியோர்கள் கூறுகிறார்களோ அவரென்றும், நித்தியரென்றும் நான் அறிகிறேன்.

## நான்காவது அத்தியாயம்.

---

1. எவர், ஒருவரோ; ஜாதிமுதலானதில்லாதவரோ; அநேக சக்தி சேர்க்கையால் அநேக ஜாதிகளை, தனக்குயாதொரு பிரயோஜனமில்லாமல், தரித்துக் கொள்ளுகிறாரோ; எவரிடத்தில் இந்த பிரபஞ்சமானது ஆதியிலும் (மத்தியிலும்) அந்தத்திலும் சேருகிறதோ அந்த தேவர் நல்ல புத்தியோடு நம்மைச்சேர்த்து வைக்கட்டும்.

2. அதே அக்நி; அதே சூரியன்; அதே வாயு; அதே சுக்கிரன் (முதலிய நக்ஷத்திரங்கள்); அதே பிர்மம்; அதே ஜலம்; அதே பிரஜாபதி (பிர்மா).

3. நீயே, ஸ்திரீ; புருஷன்; குமாரன்; குமாரி; கிழவன் கழியால் வஞ்சிக்கிறாய்; பிறந்தவனாக விருக்கிறார்; எங்கும் முகமுள்ளவர்;

4. நீயே நீலபக்ஷி; மஞ்சள்பக்ஷி; சிகப்பு கண்ணுள்ளபக்ஷி; மேகம்; ருதுக்கள்; சமுத்திரங்கள்; அநாதியாயிருக்கிறதும், வியாபகனாகவிருக்கிறதும், எதனிடத்தில் எல்லா புவனங்களும் உண்டாயிற்றோ அதுவுமாக இருக்கிறாய்.

5. சிவப்பு, வெளுப்பு, கறுப்பு நிறமுள்ளவளாயும் (ராஜஸ, ஸத்வ, தமோ குணமுள்ளவளாயும்), அநேக பிரஜைகளை சிருஷ்டித்தவளாயும், தனக்கு சமான ஆகாரத்தை யுடையவளாயும், பிறக்காதவளாயுமிருக்கிற ஒருவளை (மாயையை) பிறக்காத ஒருவன் (ஜீவாத்மா) ஸேவித்துக்கொண்டு (சொன்னபடி கேட்டுக்கொண்டு), ஆசிரயித்துக்கொண்டுமிருக்கிறான். மற்றொரு பிறக்காதவன் (பரமாத்மா) போகத்தை புசித்த இவனை விட்டு விடுகிறான்.

6. இரண்டு கெருட பக்ஷிகள், சேர்க்கையுள்ளவைகள்; சிநேகமுள்ளவைகள் (ஜீவன் ; பரமாத்மா) ; ஒரேவிருக்ஷத்தில் (சரீரத்தில்) ஆசிரயித்திருக்கின்றன; அவைகளில் ஒன்று (ஜீவன்) கர்மபலத்தை ருசியுடன் சாப்பிடுகிறது; மற்றொன்று (பரமாத்மா) சாப்பிடாமல் எங்கும் பார்த்துக்கொண்டிருக்கிறது.

7. ஒரே விருக்ஷத்திலே (சரீரத்திலே) போக்தாவாயிருக்கப்பட்ட புருஷன் (ஜீவன்) முழுகுகிறவனாக, அஞ்ஞானத்தினாலே மோகம் பிடித்து துக்கப்படுகிறான்; அவன் எப்பொழுது கஷ்டப்பட்டு கண்டுபிடிக்கப்படும்தேவரானஈசனையும் (பரமாத்மாவையும), (இந்த ஜகத்) அவனுடைய மகிமையென்றும், கண்டுகொள்ளுகிறானோ, அப்பொழுது துக்கமில்லாதவனாகிறான்.

8. வேதங்களால் அறியப்படத்தக்கவரும், நாசமில்லாதவரும், உயர்ந்தவரும் ஆகாயம் போலிருக்கிறவருமான யாதொருவரிடத்தில் எல்லா தேவர்களும் ஆசிரயித்திருக்கின்றார்களோ, அப்படிப்பட்டவரை எவனொருவன் அறியவில்லையோ அவன் வேதத்தினால் என்ன செய்யப்போகிறான். அறிந்தவர்கள் கிருதார்த்தர்களாகிறார்கள்.

9. எதை வேதங்களென்றும், யக்ஞங்களென்றும் கிருதுக்களென்றும், சென்றது, இருக்கிறது, இனிவரப்போகிறது, இவைகளென்றும் வேதங்கள்சொல்லுகின்றனவோ (இது நிற்குண பிர்மம்), மாயியான அவர் (மாயையில் சம்பந்தப்பட்ட ஈசுவரன்) இந்த பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தார். அந்த பிரபஞ்சத்தில் இன்னொருவன் (ஜீவனாக ஆனவன்) மாயையினால் கட்டுப்பட்டு, சம்ஸாரத்திலேதிரிகிறான்.

10. பிரகிருதி யென்பது மாயையென்றும், மாயையுள்ளவன் ஈசுவரனென்றும் அறியவேண்டியது. அந்த ஈசுவரனுடைய

அவையவ பூதங்களாகிற வஸ்துக்களால் இந்த ஜகத் நிறைந்திருக்கிறது.

11. எவர் மூலப்பிரகிருதியாகிய மாயையிடத்திலும், அந்த மாயையே பின்ன பின்ன பிருகிருதி யாயிருக்கிற மாயையிடத்திலும் இருக்கிறாரோ, ஒருவரோ, எவரிடத்தில் எல்லாம் லயத்தை அடைகின்றனவோ முக்தியை கொடுக்கிறவராயும், ஸ்தோத்திரம் செய்யப்பட்டவராயும், தேவனுயுமிருக்கிற அந்த ஈசுவரனை நன்றாக விசாரித்தறிந்தவர்கள் மோக்ஷத்தையடைகிறார்கள்.

12. எவர், தேவர்களுக்கு உத்பத்திகாரணராயும் சக்தியை கொடுக்கிறவராயும், விசுவத்தை பரிபாலிக்கிறவராயும் ருத்திரனுயும் சர்வஞ்ஞராயும் இருந்து பூர்வத்தில் ஹிரண்ய கர்ப்பரை உண்டு பண்ணினாரோ, அவர் நல்லபுத்தியோடு நம்மைசேர்த்துவைக்கட்டும்.

13. எவர் தேவர்களுக்கு அதிபதியோ, எவரிடத்தில் பிரஜைகள் ஆசிரயத்திருக்கிறார்களோ, இரண்டு கால் பிராணிகளுக்கும், நாற்கால் பிராணிகளுக்கும் எவர் ஈசனோ அந்த தேவரின் பொருட்டு ஹவிஸால் பூஜிக்கிறோம்.

14. மாயையால் மறைக்கப்பட்டு ஒன்றும் தெரியாமலிருக்கிற இந்த ஜகத் மத்தியில் சூக்ஷ்மத்திலும் சூக்ஷ்மராயும், விசுவத்தை சிருஷ்டித்தவராயும் அநேக ரூபங்களையுடையவராயும், விசுவத்தை ஒரேசுத்தராய் சுத்திக்கொண்டிருக்கிறவராயும் இருக்கிற சிவனையறிந்த ஒருவன் மோக்ஷத்தையடைகிறான்.

15. அவரே எக்காலத்திலும் இந்த புவனத்துக்கு ரக்ஷகர்; விசுவத்துக்கு அதிபதி; எல்லா பூதங்களிலும் மறைந்திருக்கிறவர்; எவரிடத்தில் ரிஷிகளும் தேவர்களும் மனதை நாட்டி சேர்ந்திருக்கிறார்களோ, அவரையே அறிந்து மிருத்தியுபாசத்தை பேதிக்கிறான்.

16. நெய்யின் ஸாரம் போல் அதிசூக்ஷ்மமாயும், சிவனுயும், எல்லா பூதங்களிலும் மறைந்திருக்கிறவராயும், விசுவத்தை சுத்திக்கொண்டிருக்கிறவராயும் இருக்கிற தேவனையறிந்து எல்லா பாசங்களிலிருந்தும் விடுதலையாகிறான்.

17. இவர் விசுவத்தை சிருஷ்டித்தவர்; மகாத்மா; எப்பொழுதும் ஜனங்களுடைய இருதயத்திலிருக்கப்பட்டவர்; ஹ்ருத்ன

லேயும் (நிஷேதோபதேசத்தினலும்) விவேகபுத்தியாலும், மன தாகிற ஞானத்தினலேயும் அறியப்படத்தகுந்தவர்; இவரை அறி ந்தவர்கள் அமிருதர்களாக ஆகிறார்கள்.

18. எப்பொழுது அக்ஞானம் நீங்குகிறதோ அப்பொழுது பகலுமில்லை, ராத்திரியுமில்லை, இல்லையென்பதுமில்லை ; சிவன்மட் டும் தான் நிற்கும்; அதுநாசமற்றது; சூரியனல் புகழத்தகுந்தது. அதே நித்தியமாயும் அநாதி சித்தமாயும் இருக்கப்பட்ட ஞானம்;

19. இவரை உயரத்திலாவது, பக்கத்திலாவது மத்தியிலா வது, திக்குகளில் ஒருவரும் கிரகிக்க முடியாது; இவருக்கு சமா னமான வஸ்து இல்லை. இவர் பெயர் மகத்தாயிருக்கிற கீர்த்திதான்.

20. இவருடைய ரூபம், இந்திரியங்களுக்குக் கோசரமில்லா மல் நிற்கிறது; எவனும் இவரை கண் முதலான இந்திரியங்களினல் அறியமாட்டான். இருதயகுகையிலிருக்கிற இவரை சுத்த புத் தியினலும் மனதினலும் அறிந்தவர்கள் அமிருதர்களாகி விடுகி றார்கள்.

21. (பிரார்த்தனை) நீ, இறப்பு பிறப்பு இல்லாதவன் ; ஆன தால் ஸம்ஸாரத்தினின்றும் பயமடைந்த ஒருவன் உன்னை சரணமெ ன்றடைகிறன். ஹே, ருத்திர! உன்னுடைய தக்ஷிண முகத்தால் என்னையும் காப்பாற்றும்.

32. எங்களுடைய புத்திரன், பவுத்திரன், ஆயுசு, கோக்கள் அசுவங்கள், வீரர்களாயிருக்கிற வேலைக்காரர்கள், இவர்களிடத்தி ல் ஹே, ருத்திர, நீர் நாசத்தைச் செய்ய வேண்டாம் ; கோபம் கொண்டு கஷ்டப்படுத்த வேண்டாம்; ஏனென்றால் இந்த ஸத ஸில் ஹவிஸுடன் கூட தங்களை அழைக்கிறோம்.

## ஐந்தாது அத்தியாயம்.

1. நாசமற்றதாயும், பிர்மபரமாயும், அநந்தமாயும் இருக்கி றது, இரண்டு; வித்தை 1; அவித்தை2; இந்தஇரண்டும் எதனிடத் தில்மறைவாகவைக்கப்பட்டிருக்கிறதோ, இவைகளில்அவித்தைநாச மேறது; வித்தை மோக்ஷஹேது; இந்த இரண்டையும் எவர் நியா மனம்செய்கிறாரோ அவர் அன்னியர் (பரமாத்மா).

2. எவர் ஸ்தானந்தோறும், சகல ரூபங்களிடத்திலும், எல் லாம் உண்டாகிறவிடத்திலும் இருக்கிறாரோ; சர்வக்ஞராயும், முத

வில் தானுயுண்டானவராயும், பிர்மாவை ஞானங்களால் அடையச்செய்தார்; உண்டானவராகப்பார்த்தார் (முதலில் பிர்மாவை உண்டு பண்ணினுர்).

3. மாயாத்மகமாயிருக்கிற இந்த பிரபஞ்சத்தில், ஒவ்வொருசிருஷ்டிகூட்டத்தையும், நானுப்பிரகாரமாகச்செய்து, மறுபடியும் சம்ஹரிக்கிறுர்; மறுபடியும் மரீசி முதலான பதிகளைச் சிருஷ்டித்து, ஸர்வாதிபத்யம் செய்கிறுர்.

4. சூரியனைப்போல், மேல், கீழ், குறுக்கு, முதலான திக்குகளை பிரகாசப்படுத்திக் கொண்டு விளங்குகிறுர்; இந்தப்படி பகவான் வரேண்யர்; தேவர்; ஏகர்; தன்னுடைய ஆத்ம பூதமாயிருக்கிற எல்லாவற்றிலு மிருக்கின்றுர்.

5. எவர் ஒவ்வொன்றுக்குமுள்ள சுவபாவத்தைப் பக்குவப்படுத்துகிறுரோ, மூன்றுகுணங்களையேற்படுத்துகிறுரோ, அவர்ஏகர், விசுவத்திலிருக்கிறுர்.

6. உபநிஷதங்களிலேமறைந்திருக்கிற அந்த பிர்மத்தை எந்த பிர்மா அறிந்தாரோ, அவரும், எந்த தேவர்கள், ரிஷிகள் அறிந்தார்களோ, அவர்களும்அதேமயமாய் அமிருதாளாய் ஆகிவிட்டார்கள்.

7. (ஜீவாத்மா) எவர், குணத்தோடேகூடினவர், பலத்துக்கும் கர்மத்துக்கும் கர்த்தா; செய்யப்பட்ட கர்மத்தின் பல அனுபவிக்கிறவர்; விசுவரூபர்; முக்குணமுள்ளவர்; மூன்று வழியுள்ளவர்; (தேவயானம், பிதிருயானம், தூமாதி மார்க்கம்); பஞ்சபிராணனுக்கதிகாரி; தன்னுடைய சுவகர்மங்களுடன் சஞ்சரிக்கிறுர்.

8. அங்குஷ்ட மாத்திரர்; சூரியனுக்குச் சமான ரூபமுள்ளவர்; சங்கல்பம் அகங்காரம் இவைகளுடன் கூடினவர்; புத்தியின் குணத்தோடும் தன் சொந்தமான (ஜாதி) குணத்தோடும் சேர்ந்தவர்; தார்க்குழியின் நுனி ஆணியைப் போல் சிறிதாக இருந்தாலும் வேருகமட்டும் தோற்றப்படுகிறுன் (பரமாத்மாத்மாவுக்கு அவன் வேறில்லை).

9. ஒரு வாளுடைய நுனியை 100 பாகம் செய்து, அதில் ஒருபாகத்தை 100 பாகம் செய்யின், அதில் ஒருபாகம் ஜீவன்; (அதாவது பரமாத்மாவின் அநேக அம்சங்களில் ஒரு அம்சம் ஜீவன்). ஞானமுடையவன், நாசமில்லாதவன்.

10. இவன் (ஜீவாத்மா) ஸ்திரீயுமல்ல; புருஷனுமல்ல; நபும்ஸகனுமல்ல; எந்தெந்த சரீரத்தை எடுக்கிறானோ அதனால் ரக்ஷிக்கப்படுகிறான்.

11. சங்கற்பம்; பிறகு த்வக் இந்திரிய வியாபாரம்; பிறகு பார்வை; பிறகு ஆசை; இவைகளால் (கர்மங்கள் செய்யப்படுகின்றன); அந்தந்த கர்மங்களுக்குத் தக்கபடி ரூபங்கள், அந்தந்த ஸ்தானம், யோனி இவைகளை மனுஷியன் அடைகிறான். போஜனம், பானம், மழை இவைகளினால் சரீரம் விருத்தியை அடைகின்றன போல்.

12. தேஹியானவன் (ஜீவாத்மா) ஸ்தூல, சூக்ஷ்மங்களாயிருக்கிற அநேக ரூபங்களைத் தன் குணங்களால் (விகித, பிரதிஷித்த விஷயானுகுணங்களால்) சுற்றிக்கொண்டிருக்கிறான். அந்தக்கிரியைக்குத்தக்க குணங்களாலும், ஆத்ம குணங்களாலும் அந்தந்த ரூபங்களுக்குச் சேர்த்துவைக்கிற காரணமாயும், பரனுக்கு வேறானவாயும் காணப்படுகிறான்.

13. கஹனமுள்ள சம்ஸாரத்தின் நடுவிலே, ஆதி, அந்தம் இல்லாதவனும், விசுவத்துக்கு சிருஷ்டி கர்த்தாவாயும, அநேக ரூபங்களையுடையவனாயும், விசுவத்தை ஒரே சுற்றாகச் சுற்றிக் கொண்டிருக்கிறவராயுமிருக்கிற தேவனை அறிந்து, ஸர்வபாசங்களினின்றும் விடுபடுகிறான் (ஜீவன்).

14, சுத்தமான அந்தக்கரணத்தால் கிரகிக்கப்படத்தக்கவராயும், அசரீரியென்று பெயருள்ளவராயும், பாவத்தையும் அபாவத்தையும் உண்டுபண்ணுகிறவராயும், சிவனாயும், (சுத்தராயும்) கலைகளைச் சிருஷ்டித்தவராயுமிருக்கிற தேவனை யார் அறிவார்களோ அவர்கள் தேகத்தைத் தியஜிக்கிறார்கள்.

## ஆறாவது அத்தியாயம்.

---

இவ்வத்தியாயத்திலுள்ள விஷயம் முற்கூறப்பட்டுள்ள மந்திரங்களின் பொருளேயாதல் பற்றியும், ஸ்பஷ்டமாகவுள்ளமை பற்றியும் அதனை இங்கு மீண்டும் மொழிபெயர்த்துக் கூறாதொழிந்தோம்.

சுவேதாசுவதரோபநிஷத் முற்றிற்று.